Vol.6, Issue 8 | Annual Subscription ₹480
Rotary News, January 2024, Chennai

@NewsRotary
/RotaryNewsIndia

ஜனவரி 2024

# ரோட்டரி நியூஸ்

இந்தியா
www.rotarynewsonline.org



Rotary

ADVT.

So Far 32 Batches Completed...
993 Certified... 168 Starters...& Counting...




Rotary Club of VIRUDHUNAGAR | PG | IDHAYAM SAY IDHAYAM • SPELL HEALTH

Joint Initiative



RYLA
Be an Entrepreneur

# BECOME AN ENTREPRENEUR
## IN 3500 MINUTES

**ROTRACTORS** | **3rd / 4th** YEAR **UG STUDENTS** | **1st / 2nd** YEAR **PG STUDENTS**
Course Completed **GRADUATES & POST GRADUATES** between the age of 18 and 28

STOP WORRYING ABOUT JOB(S); **START PRODUCING JOB(S);**

*Your Takeaways...*

- **12** DEVELOP YOUR BUSINESS in 12 EASY STEPS
- **12** PROCURE YOUR INVESTMENTS in 12 DIFFERENT SOURCES
- **20** CREATE VISIBILITY to YOUR BIZ using 20 MARKETING TOOLS
- **06** CLOSE SALES DEALS in 06 EASY STEPS
- **05** FINE TUNE YOUR MOST IMPORTANT 05 SKILLS for an ENTREPRENEUR

### UPCOMING BATCH DATES
ONLY 32 SEATS PER BATCH
**33.0 : 19th, 20th & 21st JAN 2024**
**34.0** : 16th, 17th & 18th FEB 2024
**35.0** : 15th, 16th & 17th MAR 2024
**36.0** : 19th, 20th & 21st APR 2024

- FREE SINGAPORE TRIP*
- BUSINESS PLAN (BIZCONNECT)
- 200+ PAGES E-BOOK
- INVESTMENT SUPPORT* (INVEST mentoring)
- FREE ONLINE SESSIONS (CREA)

## FLY TO SINGAPORE*

### ENROLL TODAY
*Win a Surprise...*



**VENUE**
**Hotel St.Antony's Residency**
Sipcot Industrial Growth Center
Gangaikondan, Tirunelveli

**INVESTMENT**
**Rs.2500 Only**
(Incl. Accommodation / Food / T-Shirt / Certification / E-Book / CREA Programs)
*Terms & Conditions Apply

**CONTACT**
**94431 66650**
**94433 67248**

Powered by
K.V. Ramaswamy MEMORIAL TRUST
Srinidhi Building Sustainable Relationship

# உள்ளே


**20**
இந்தியாவை உலகம் கவனிக்கிறது: S ஜெய்சங்கர்

**28**
காஸாவில் ரோட்டரியின் உதவி இல்லாதது விளக்கப்பட்டது

**32**
தொடர்ச்சி மற்றும் குழுப்பணி - காலத்தின் தேவை

**36**
TRF நன்கொடையாளர்கள் இந்தியாவை பெருமைப்படுத்துகிறார்கள்

**42**
ரோட்டரி தலைவர்கள் கவுரவிக்கப்பட்டனர்

**44**
அடுத்த தலைமுறைக்காக ரோட்டரியை பிராண்டிங் செய்வோம்

**46**
உள்வரும் தலைவர்களுக்கான வெற்றி மந்திரங்கள்

**50**
RC தானே சார்பில் மும்பையில் ஆட்டிசம் மையம்

**56**
உலக சாதனை படைத்த இளம் இந்திய மலையேறும் வீரர்

**58**
பெண்கள் நலனில் கவனம் செலுத்தும் RC ஜெய்ப்பூர் குருகுல்

**64**
ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கான மந்திரங்கள்

**67**
1 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் அஸ்மிதா திட்டம்

**68**
2024ல் பசுமைப் போராளிகளின் படையில் இணையுங்கள்




## அருமையான திட்டம்

*ஆங்கிலேயர் காலத்தில் இருந்த கோலார் தங்கச் சுரங்கத்தை டிசம்பர் இதழின் அட்டைப் படமாகக் காட்டும் தனித்துவமான பழைய கருப்பு வெள்ளைப் படத்தைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைந்தேன். எடிட்டரால் எழுதப்பட்ட KGF-ல் "விஷத்திலிருந்து பழங்களை உருவாக்கும்" பெங்களூரு ரோட்டரியர்கள் என்ற கவர் ஸ்டோரி கவர்ச்சிகரமாக இருந்தது, நச்சுத்தன்மையுள்ள சயனைடு குப்பைகளிலிருந்து பசுமையான தோட்டத்தை உருவாக்குவதற்கான ரோட்டேரியர்களின், குறிப்பாக ரவிசங்கர் டகோஜுவின் அர்ப்பணிப்பை அற்புதமாக சித்தரிக்கிறது.*

*RI தலைவர் கோர்டன் மெக்கினலி, ஷெல்டர்பாக்ஸ் CEO-ன் வார்த்தைகளை மேற்கோள் காட்டி, பேரழிவுகள் இயற்கையானவை அல்ல, அவை மனிதனால் உருவாக்கப் பட்டவை என்றும், மனித முயற்சிகளால் எதிர்காலத்தில் அவற்றை எவ்வாறு குறைக்க முடியும் என்றும் கூறினார். ரோட்டரி இயக்குனர் ராஜு சுப்பிரமணியன், மருத்துவ சேவை தேவைப்படுபவர்களுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டுகிறார்.*



*தோல்வியை மனதார ஏற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத் தையும், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பார்வையாளர்கள் விளையாட்டு மனப்பான்மையை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஆசிரியர் குறிப்பு சரியாக வலியுறுத்தியுள்ளது.*

*இரண்டு முன்னாள் தலைவர்களுக் கான PRIP ராஜேந்திர சாபூவின் ரோட்டரி இரங்கல் கட்டுரை இரண்டு ரோட்டரி தலைவர்களின் சேவைகளை நன்றாக நினைவுப் படுத்துகிறது.*

*பிலிப் முலப்போன்* M T
RC *திருவனந்தபுரம் சப்அர்பன்* D 3211

*ஆங்கிலேயர்கள்* KGF *சுரங்கங்களில் இருந்து டன் கணக்கில் தங்கத்தை எடுத்துச் சென்று, விஷம் கலந்த சயனைடு குப்பை மலைகளை விட்டுச் சென்றனர், ஆனால் ரோட்டேரியர்கள் நினைத்தால் நச்சுக் குப்பைகளில் கூட சுவையான செர்ரிகளை வளர்க்க முடியும் என்று டகோஜு செய்துக் காட்டியுள்ளார்.* KGF *குடியிருப்பாளர்கள் தூசி மற்றும் விஷம் இல்லாத காற்றை சுவாசிக்கிறார்கள் மற்றும் பசுமையை அனுபவிக்கிறார்கள். கற்பனைக்கு அப்பாற்பட்ட மாற்றம்.*

VRT *துரைராஜா*
RC *திருச்சிராப்பள்ளி* — D 3000

KGF-*ல் "விஷத்திலிருந்து பழங்களை உருவாக்கும்" பெங்களூரு ரோட்டரியர்கள், புனேவில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம், சைபர் கிரைம், மீட்கப்பட்ட பெண்களுக்கு திறனளித்தல் மற்றும் உடல்நலக் கட்டுரைகள் ஆகியவற்றை நான் விரும்பினேன். வழக்கம் போல் ஸ்ரீனிவாச ராகவனின்* LBW-*பத்தி படிக்க விருந்தாக இருந்தது!*

*பிரமோத் பெரி*
RC *கோலாப்பூர்* — D 3170

### சுவாரஸ்யமான, நுண்ணறிவுமிக்க தலையங்கங்கள்

டிசம்பர் மாதத் தலையங்கத்தில், உலகக் கோப்பை கிரிக்கெட்டின் இறுதிப் போட்டியில் பார்வை யாளர்களிடம் இல்லாத விளையாட்டு மனப்பான்மையைப் பற்றி ரஷீதா பகத் சுட்டிக் காட்டியதோடு, 'ஈடுப்பட்ட அனைவருக்கும் இது நியாயமா?' என சிந்தனையை தூண்டினார். ஏன் இந்தியா சிறந்த நாடாக மாற இந்திய அணியை பின்பற்ற வேண்டும் என்ற கட்டுரையில் வேகப்பந்து வீச்சாளர்கள் ஷமி மற்றும் சிராஜ் எப்படி எல்லா தரப்பிலும் பாராட்டப் பட்டனர் என்பதை ஆசிரியர் விளக்குகிறார். அவர் பரிந்துரைப்பது போல, கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் இந்த மரபை இந்தியா மனிதகுலத்தின் மேம்பாடு என்ற வித்தியாசமான விளையாட்டிலும் பிரதிபலிக்கட்டும்.

K M K மூர்த்தி
RC செகந்திராபாத் — D 3150

ரோட்டரி நியூஸின் ஆசிரியராக ரஷீதா பகத் பொறுப்பேற்றதில் இருந்து நான் இதழின் தலையங்கத்தை ஆர்வமாக படித்து வருகிறேன். இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தி ஹிந்து பிசினஸ் லைன் போன்ற புகழ்பெற்ற நாளிதழ்களில் பத்திரிகையாளராக 45 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர் அவர் என்பதை சமீபத்தில் அறிந்தேன்.

நவம்பர் தலையங்கத்தில், Y நாயுடும்மா மற்றும் சமீபத்தில் காலமான M S சுவாமிநாதன் ஆகிய இரண்டு புகழ்பெற்ற விஞ்ஞானிகளின் பக்கம் கவனத்தை அவர் திருப்பியுள்ளார். இந்த சரித்திர நாயகர்கள் என்றென்றும் நம் நினைவில் இருப்பர்.

ராஜ்குமார் கபூர்
RC ரூப்நகர் — D 3080

தலையங்கம் "நெஞ்சை உருக்கும் தோல்வி" நன்றாக எழுதப்பட்டி ருந்தது. நமது இந்திய அணி விளையாடி வெற்றி பெற்ற 10 போட்டிகளின் தரத்தில் எந்த கருத்து வேறுபாடும் இருக்கமுடியாது. நமது பிரதம மந்திரியே அவர்களது அணியறைக்கு சென்று, உலகக்

*என் கையில் டிசம்பர் இதழ் உள்ளது அதில் இருக்கும் KGF-ன் கவர் ஸ்டோரி பிரமிக்க வைக்கிறது. தொழில்களும் வணிகங்களும் உலகை மாசுபடுத்தும் போது உலகை மாற்ற என்ன ஒரு அற்புதமான தொலைநோக்கு பார்வை மற்றும் முயற்சி! Rtn ரவிசங்கர் டகோஜு மற்றும் அவரது குழுவினர் உலகத்தை வாழ்வதற்கு சிறந்த இடமாக மாற்ற "தங்களைத் தாண்டிச் சிந்தித்துள்ளனர்". 1970களின் புவியியலாளரான நான், கோலாரின் கதி என்னவாகும் என்று எப்போதும் யோசித்திருப்பேன், ஆனால் டகோஜு மற்றும் அவரது குழுவினர் அங்கே நம்பிக்கை விளக்கை ஏற்றியுள்ளனர், அவர்களின் வெற்றியைப் பார்ப்பது உண்மையிலேயே ஆச்சரியமாக இருக்கிறது. அவரது குழுவிற்கு வாழ்த்துக்கள்.*

*சித்துராம் L S*
*RC மேட்டுப்பாளையம் — D 3203*

*எனது குழந்தைப் பருவத்தை கோலாரில் கழித்தவன் என்ற முறையில், KGF பற்றிய கட்டுரையை ஆர்வத்துடன் படித்தேன். குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்கள் அதை சம்பாதிக்க தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஆயிரக் கணக்கான அடி ஆழத்தில் தோண்டி, சயனைடு தூசியை சுவாசித்தனர், இதனால் சிலிகோசிஸ் நோயை பெற்றனர். இழப்பீடு என்பது கேட்பாரற்று இருந்தது. சயனைடு குப்பைகளை பசுமையாக்கவும், சயனைடு தூசி காற்றை மாசுபடுத்துவதை தடுக்கவும் கடுமையாக உழைக்கும் ரவிசங்கர் டகோஜு மற்றும் நீல் மைக்கேல் ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். தங்களின் முயற்சி பாராட்டுக் குரியது.*

*KGF-க்கு தண்ணீர் வழங்கி வந்த பேத்தமங்கலம் குளத்தையும் புதுப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாலாற்றின் நீர் வரத்தால் நிரம்பிய தொட்டி தற்போது வறண்டு விட்டது. KGF பகுதியில் வசிக்கும் 3 லட்சம் பேர் பல ஆண்டுகளாக தண்ணீரை விலைக்கு வாங்கி வருகின்றனர்.*

*H R சீதாராம், RC பெங்களூர் இந்திராநகர் — D 3192*

கோப்பை முழுவதும் அவர்கள் சிறப்பாக செயல்பட்டதற்காக பாராட்டினார்.

பார்வையாளர்களின் எதிர் வினையைப் பொறுத்தவரை, சர்வதேச போட்டிகளைக்காண பெரிய அளவிலான பார்வையாளர்கள் கூடும் போது விளையாடும் அணிகளுக்கு உற்சாகமும் ஊக்கமும் மேலோங்கி இருக்கவேண்டும். உலகக் கோப்பையில், இறுதிப் போட்டியில் மட்டுமல்ல, மற்ற எல்லாப் போட்டிகளிலும் இந்த விஷயங்கள் இல்லாமல் போனது துரதிர்ஷ்டவசமானது. எந்த அணியிடமிருந்து நல்ல ஷாட்கள் வந்தாலும் பார்வையாளர்கள் ஆரவாரம் செய்யும் வகையில், எதிர் காலத்தில் சிறந்த விளையாட்டு மனப்பான்மையை வளர்ப்போம் என நம்புவோம்.

R சீனிவாசன்
RC பெங்களூர் J P நகர் — D 3191

### பலதரப்பட்ட கவரேஜ்

டிசம்பர் இதழில் பல நல்ல திட்டங்களின் தொகுப்பு உள்ளது. பல அற்புதமான கட்டுரைகளை கொண்டிருந்தது.

நான் இப்போது பத்திரிகையை என் மனைவி, பாட்டி மற்றும் மாமா ஆகியோருக்கு படிக்க வழங்குகிறேன், அவர்களும் அதை விரும்பி படிக்கிறார்கள். பெரிய திட்டங்களைச் செய்ய முடியாத சங்கங்கள் கூட ரோட்டரி நியூஸ் வழங்கும் திட்டங்களைப் படிக்க/விவாதிக்க குறைந்தபட்சம் ஒரு சந்திப்பையாவது ஏற்பாடு செய்யவேண்டும், இதனால் உறுப்பினர்கள் மற்ற சங்கங்கள் என்ன செய்கின்றன என்பதை அறிந்து கொள்ள முடியும்.

பிரசாந்த் மேத்தா, RC கோலாப்பூர் ஹெரிடேஜ் — D 3170

V முத்துக்குமரனின் "கலை மூலம் உலகை ஒன்றிணைத்தல்" கட்டுரை சண்டிகரில் நடந்த கலை விழா பற்றிய விவரங்களுடன் சிறப்பாக வழங்கப்பட்டுள்ளது. உலக அமைதி பெரும் ஆபத்தில் இருக்கும் தருவாயில் இதுபோன்ற நிகழ்வுகள் அவசியம்.

M பழனியப்பன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

சைபர் கிரைமில், மக்கள் மொபைல் ஃபோனுக்கு அடிமையாகி விட்டது சரியாக சுட்டிக்காட்டப்பட்டது, இதனால் அப்பாவி மக்களை குறிவைத்து பல சைபர் கிரைம்கள் உருவாகியுள்ளது. நாம் கூடுதல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

S மோகன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

**அட்டையில்:** பெங்களூரு மண்டல மாநாட்டில் ஒரு நடன நிகழ்ச்சி.

**புகைப்படம்:** ஹேமந்த் குமார்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

# RI தலைவரிடமிருந்து...



## இருளிலிருந்து பாதையை ஒளிரச் செய்யுங்கள்!

இதுபோன்ற கடினமான காலங்களில், போர் மற்றும் பேரழிவுகளால் உயிரிழப்புகள் ஏற்படும் போது மனம் உடைந்து போவதை தவிர்க்க முடியாது.

ரோட்டரி எப்போதும் பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கவோ மற்றும் இடமாற்றம் செய்வதற்கோ ஆயுதம் ஏந்திய ஆக்கிரமிப்பை பின்பற்றியதில்லை. அமைதியான தீர்வைத்தான் விரும்புகிறது. சர்வதேச சட்டத்தை மதிப்பதும், அதன் படி நடப்பதையுமே நாங்கள் விரும்பு கிறோம். இருண்ட காலங்களில் கூட அமைதியை நிலைநாட்டவும் மேம்படுத்தவும் வலுவான செயல்களில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

ஆனால், சர்வதேச, அரசியல் சார்பற்ற, மதச் சார்பற்ற அமைப்பாக எங்கள் அமைப்பை நிலை நிறுத்துகிறோம். எங்கள் உறுப்பினர்களின் கண்ணோட்டம், அனுபவங்களுக்கு மதிப்பு அளிக்கவும், சர்வதேச அளவில் அமைதியை கட்டியெழுப்புவதிலும் மிகவும் திறம்பட செயல் படுவதிலும் நாங்கள் மோதல்களின் பக்கங்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. மோதல்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி வழங்கவே எங்கள் உறுப்பினர்கள் முயற்சிக் கிறார்கள். அமைதியை கட்டியெழுப்பவும், மோதல் களைத் தடுக்கவும், எல்லை தாண்டிய தொடர்புகள், நட்புறவை ரோட்டரி மூலம் ஊக்குவிக்கிறோம்.

பல தசாப்தங்களாக இந்த தொடர்புகள் மூலம் ரோட்டரி சேவைத் திட்டங்களைச் செயல்படுத்தவும், அமைதிக்கான நல்லுறவை வளர்ப்பதிலும், உதவித் தொகைகளை ஆதரிக்கவும் நீடித்த அமைதியை உருவாக்க உதவும் ரோட்டரி அமைதி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அமைதியை விரும்பும் ரோட்டரி உறுப் பினர்கள் மாவட்ட மானியங்களையும், ரோட்டரி அறக்கட்டளையின் உலகளாவிய மானியங்களையும் பயன்படுத்தி மற்ற ரோட்டரி உறுப்பினர்களுடன் இணைந்து உலக அளவில் அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்த மக்களுக்கு மருத்துவ உதவி மற்றும் பிற உதவிகளைச் செய்யலாம். உறுப்பினர்கள் அமைதியை நோக்கமாகக் கொண்ட ரோட்டரி நடவடிக்கை குழுக்கள், நட்பு பரிமாற்றங்கள், பெல்லோஷிப்கள் மற்றும் நாடுகளுக்கு இடையேயான குழுக்களுடன் இணைந்து செயலாற்றலாம். மாவட்டங்களுக்கு குறிப்பிடப்பட்ட நிதி அல்லது மாவட்ட நிதி மூலம் அமைதியை கட்டியெழுப்புவது மோதல் தடுப்பு முயற்சிகளுக்கு பயன்படுத்தலாம்.

உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்கள், *Rotary Positive Peace Academy* என்னும் ஆன்லைன் வகுப்புகள் மூலம் அமைதியை கட்டியெழுப்புதல் பற்றி மேலும் அறிந்து கொள்ளலாம். இணையதள வசதி உள்ளவர்கள் யாராக இருந்தாலும் இந்த இலவச ஆன்லைன் வகுப்பில் சேரமுடியும். *Positivepeace. academy/rotary* என்னும் முகவரியில் அதைக் காணலாம்.

உலகம் முழுவதும் வன்முறைச் சம்பவங் களும், அட்டூழியங்களும் தொடர்ந்து அதிகரித்து வருவதை மறுப்பதற்கில்லை. உலகளாவிய அமைதி பலவீனமாக உள்ளது. இருப்பினும் இலக்கை நோக்கிச் செயல்பட அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பது சாத்தியமே என்பதை நாங்கள் அறிவோம். ரோட்டரி உறுப்பினர்கள் ஒவ்வொரு நாளும் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் சேவை செய்கிறார்கள். பொதுவான நோக்கத்தை ஒன்றிணைக்கும் நமது திறன், இருளிலிருந்து பாதையை ஒளிரச் செய்யும் ஒரு தீச்சுடராக இருக்கட்டும்.

ஒன்றாக, நாம் உலகில் நம்பிக்கையை உருவாக்குவோம்.

**கோர்டன் மெக்கினலி**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# நன்கு திட்டமிட்டு நடந்த மண்டல மாநாடு

பெங்களூருவில் நடைபெற்ற மண்டல மாநாட்டுக் கூட்டம் மிகவும் நேர்த்தியாக திட்டமிடப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. சுமார் 800 பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த மாநாட்டுக் கூட்டம் பலரது பாராட்டையும் பெற்றது. மாநாட்டுக்கு வந்திருந்த அனைவரும் நன்கு உபசரிக்கப்பட்டு சிறப்பான விருந்தோம்பல் நடைபெற்றது. பாரம்பரியமான சுவையுடன் மதிய உணவு வழங்கப்பட்டது. இரவு விருந்திலும் பல்வேறு சுவையான உணவு வகைகள் பரிமாறப்பட்டன. எந்தவிதமான புகாரும் இல்லை. எந்த ஒரு பெரிய நிகழ்விலும் உணவு ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. உணவுடன் மெல்லிசையையும் கலந்து கொடுக்கும்போது அதைவிட வேறு என்ன வேண்டும்?

இவை அனைத்துக்கும் மெருகூட்டும் வகையில் வண்ண வண்ண இந்திய ஆடைகளில் மிடுக்கான தோற்றத்துடன் அனைவரும் வலம் வந்ததுதான். அந்த மயக்கும் மாலை நேரத்தில் RI தலைவர் கோர்டன் மெக்கினலி அவரது மனைவி ஹீதர், RIPN மரியோ டீ காமர்கோ, அவரது மனைவி டெனிஸ் மற்றும் RI-ன் மூத்த தலைவர்கள் உள்ளிட்ட சர்வதேச பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர். மாநாட்டின் உயர் தலைவர்கள் மற்றும் அவர்களின் துணைவியார் தங்கள் பதவியைப் பொருட்படுத்தாமல் அனைத்து பிரதிநிகளுடன் கலந்து நடனமாடினர்.


மாநாட்டின் பல்வேறு அமர்வுகளில் தொழில்நுட்பத் திறன் வெளிப்பட்டது. ஒரே நாளில் பலரின் பேச்சை கேட்கும்போது நமக்கு களைப்பால் சலிப்பு தட்டும். மேலும் மதிய உணவுக்குப் பிறகு மாநாட்டு அமர்வுகளில் எதில் கவனம் செலுத்துவது என்பது குறித்து நமக்கு குழப்பம் ஏற்படும். ஆனால், எந்த களைப்பும் ஏற்படாமல் இருக்க பெரிய டிஜிட்டல் திரைகள் மூலம் பல்வேறு விஷயங்கள் திரையிடப்பட்டன. மிகவும் பிரமிக்க வைக்கும் அளவுக்கு அவை உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்ப திறனுடன் வடிவமைக்கப்பட்டிருந்ததாக RIPN மரியோ டீ காமர்கோ கருத்து தெரிவித்தார்.

RI தலைவர் மெக்கினலியும் அவரது மனைவி ஹீதரும் எந்தவிதமான ஆதிக்கமும் செலுத்தாமல் அமைதியாக அமர்ந்து அனைத்தையும் கண்டு ரசித்தனர். ஒவ்வொரு நாள் காலையிலும் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்னதாகவே மாநாட்டு மண்டபத்துக்கு வந்திருந்து முழு அமர்வையும் கவனித்தனர். மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் பலர் ரோட்டரித் தலைவர் மெக்கினலியுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்பியபோது கொஞ்சம்கூட சலிப்படையாமல் அனைவரது வேண்டுகோளையும் ஏற்று மெக்கினலியும், அவரது மனைவி ஹீத்தரும் புகைப்படத்துக்கு போஸ் கொடுத்தனர். ஹீத்தர் தன்னுடன் உரையாட விரும்பியவர்களுடன் அன்பு கலந்த மகிழ்ச்சியுடன் பேசினார்.

மாநாட்டின் அமைப்பாளரும் RI இயக்குநருமான ராஜு சுப்பிரமணியன் இந்த மூன்று நாள் நிகழ்ச்சியை சிறப்புற நடத்தினார். செயலரும் PDG-யுமான சமீர் ஹரியானி, தொகுப்பாளராக இருந்து வழக்கம்போல் தனது வேலையை சிறப்பாகச் செய்தார். மாநாட்டு நிகழ்வின் தலைவரான PDG K P நாகேஷ், குழு தலைவர் என்ற முறையில் மாநாட்டில் பல்வேறு அமர்வுகளை சிறப்பாக வழிநடத்தினார். தன்னை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக பின்னணியில் இருந்து செயல்பட்டார். அவரை பார்ப்பதே ஒரு பெரிய வேலையாக இருந்தது.

RI தலைவர் மெக்கினலியை ஒருநாள் அதிகாலை கோல்ஃப் விளையாட்டுப் போட்டியை தொடங்கிவைத்தார். இதன் மூலம் போலியோ நிதியாக 1,00,000 டாலர் நிதி திரட்டப்பட்டது. மற்றொரு நாள் பழங்கால கார்கள் மற்றும் பைக் பேரணியை கொடியசைத்து அவர் தொடங்கிவைத்தார். பெங்களூரு மிட்நைட் மராத்தான் போட்டியை தொடங்கிவைக்க அவர் ஒயிட்பீல்டுக்கு மெட்ரோவில் பயணம் செய்தார். இதன் மூலம் TRF-க்கு 3,00,000 டாலர் நிதி திரட்டப்பட்டது.

மேலும் ரோட்டரி தலைவர் மற்றும் இதர மூத்த தலைவர்கள் உள்வரும் தலைவர்களுடன் இந்தியாவில் ரோட்டரியை பாதிக்கும் பல விஷயங்களை வெளிப்படையாகவே பேசினர்.



ரஷீதா பகத்

# மாநாடு குடும்பங்களுக்கானது



இதை கற்பனை செய்யுங்கள்: ஆசியாவின் சிறந்த சூரிய வெப்பம் உடைய இடங்களில் ஒன்றில் உங்கள் குடும்பத்திற்கு மறக்க முடியாத விடுமுறை அளிக்க ஒரு வாய்ப்பைப் பெறுகிறீர்கள். எப்படி? ரோட்டரி சர்வதேச மாநாட்டிற்காக சிங்கப்பூருக்கு அழைத்து வருவதன் மூலம். அருங்காட்சியகங்கள், சாகசப் பூங்காக்கள் மற்றும் அனைத்து வயதினருக்கான செயல்பாடுகளுக்கும் அருகாமையில் இடங்கள் இருப்பதால், உங்களின் ஹோட்டல் மற்றும் விமானத்தை ஏற்கனவே முன்பதிவு செய்துவிட்டீர்களா? விருந்தினர்களாகப் பதிவு செய்வதன் மூலம், உங்கள் அன்புக்குரியவர்கள் 25–29 மே மாநாட்டில் பிரபலமான பொழுது போக்காளர்கள் மற்றும் முக்கிய பேச்சாளர்களை அனுபவித்து மகிழலாம்.

சிங்கப்பூர் மற்றும் அருகிலுள்ள நாடுகளுக்கு பயணம் செய்ய ஹோஸ்ட் ஆர்கனைசேஷன் கமிட்டி தளமான *rotarysingapore2024.org*-ல் பதிவு செய்யவும். பாங்காக் நகருக்குச் செல்லுங்கள், அந்நகரத்தின் புகழ்பெற்ற வீதி வாழ்க்கையைப் பார்க்கவும், யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமான அயுத்தயா என்ற பழங்கால நகரத்தின் இடிபாடுகளில் சுற்றிப் பார்க்கலாம்.

சிங்கப்பூரில், குடும்பத்திற்கு ஏற்ற சில இடங்கள் இங்கே - மெரினா பே சாண்ட்ஸ் வளாகத்தில் நடத்தப்படும் பிரேக்அவுட் அமர்வுகள், ஆர்ட் சயின்ஸ் மியூசியம் கண்காட்சியானது, நீங்கள் நடந்து செல்லும் “பசுமையான டிஜிட்டல் காடுகளின்” கேன்வாஸில் உங்கள் வரைபடங்களை கணினி மயமாக்கப்பட்ட கலையாக மாற்றுகிறது.

சிங்கப்பூரின் சென்டோசா ரிசார்ட் தீவு (கேபிள் காரில் செல்லுங்கள்!), S.E.A. அக்வேரியம், அதன் ஜுராசிக் பார்க் மண்டலம் கூடிய யுனிவர்சல் ஸ்டுடியோஸ் சிங்கப்பூர் ஆகியவற்றிக்கு செல்லவும் அல்லது ஸ்கைலைன் லூஜ்ஜில் மரங்கள் நிறைந்த பாதைகளில் சறுக்கு வண்டியில் நீங்கள் வேகமாக சறுக்கி செல்லலாம்.

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org

**ஆளுநர் குழு**

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலின்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஸ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஸ்ரீ மோஹன்டி
3291 ஹுராலால் யாதவ்

அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| அனிருதா ராய்சௌத்ரி<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3291 |
| T N சுப்ரமணியன்<br>RI இயக்குனர் | RID 3141 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர்<br>துணை தலைவர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2023–24)

| | |
|---|---|
| ஸ்வாதி ஹெர்கல்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3132 |
| ஹீராலால் யாதவ்<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3291 |
| முத்தையா பிள்ளை R<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3212 |
| மிலின்த் குல்கர்னி<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3142 |



**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*



Contributions is welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.






# நலப் பராமரிப்பில் கவனம் செலுத்தும் ரோட்டரி

நாம் விடுமுறைப் பருவத்தின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் இந்த நேரத்தில், நம்மைச் சுற்றியுள்ள உலகில் ஆழமான தாக்கத்தை உண்டாக்கும் சிறந்த ஆற்றல் நமக்குள் உள்ளதை மறந்துவிடக்கூடாது. டிசம்பர் மாதம், ரோட்டரியில் நோய்த் தடுப்பு, குணப்படுத்தல் மாதம், நம் சமூகங்களில் நலப் பராமரிப்பை முன்னிறுத்துதல் மற்றும் நோய்களை எதிர்த்தலில் நம் ஒட்டுமொத்த முயற்சிகள் மின்னும் மாதம்.

நண்பர்களே, நாம் ஒரு வரலாற்றுக் கணத்தை நெருங்குகிறோம்: ஆண்டுதோறும் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டோர் லட்சக்கணக்கில் இருந்த நிலை மாறி, வெறும் ஆறு பேர்தான் பாதிக்கப்பட்டார்கள் என்ற நிலைக்கு வந்திருக்கிறோம்! 2024ல் ஒரு புதிய எல்லையை, அதாவது, இந்த ஆண்டில் யாரும் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்படவில்லை என்கிற வரலாற்றை எட்டுவோம், இளம்பிள்ளைவாதத்தை முழுக்க அகற்றுவோம்.

ரோட்டரியின் உறுதிப்பாடு, இளம்பிள்ளை வாதத்தை அகற்றுவதுடன் இன்னும் பல நலச் சிக்கல்களையும் கையாள்கிறது. சமூகத்தின் நலத் தேவைகளை உடனடியாகவும் செயல்திறனுடனும் நிறை வேற்றுவதற்கென மருத்துவமனைகளுக்கு நெருக்கடி நேரப் பராமரிப்புக் கருவிகளை நாம் வழங்குகிறோம். ரத்த வங்கிகளை ஆதரிப்பது மற்றும் இந்தியா முழுக்கப் பல்வேறு ரோட்டரி கண் மருத்துவமனைகள் மற்றும் பல சிறப்புத்தன்மை நலப்பராமரிப்பு வளாகங்களை அமைப்பது போன்ற முன்னெடுப்புகளின் வழியாக நலப் பராமரிப்பை மேம்படுத்துகிறோம்.

ரோட்டரி கருப்பை வாய் மற்றும் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு, தடுப்பு மருந்து வழங்கலுக்கும் குரல் கொடுக்கிறோம். 2022–23ல் ரோடரியின் தாக்கம் மிக்க, பெரிய அளவு நல்கை முன்னெடுப்பு எகிப்தில் கருப்பை வாய்ப் புற்று நோயை எதிர்க்க 2 மில்லியன் நல்கையை வழங்கியது. இதன் மூலம் 30,000க்கும் மேற்பட்ட பெண்கள் தடுப்பு மருந்து பெறுவார்கள், 10,000 பெண்கள் பரிசோதிக்கப்படுவார்கள் என இலக்கு அமைக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு, இதேபோன்ற நல்கை ஜாம்பியா-வுக்கு வழங்கப் பட்டது, அது மலேரியாவைக் குறைப்பதில் கவனம் செலுத்தியது.


ரோட்டரி இந்தியாவின் முன்னெடுப்பான ‘நேர்வித நலன் திட்டம்’ இந்தியாவின் NCD (தொற்றாத நோய்) பரவலைக் கையாள்கிறது. இந்தச் சிக்கல்பற்றி மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கி 60% மரணங்களைக் குறைக்கும் இலக்குடன் இயங்குகிறது. இந்த முதன்மையான நலச் சவாலைக் கையாள்வதற்கு நாம் ஒன்றாகச் சேர்வோம், இந்தியாவின் நலமான எதிர்காலத்தை உருவாக்குவோம்.

அனைத்துச் சங்கங்கள்/ மாவட்டங்களும் நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்தல் ரோட்டரி செயல் குழுவின் வலிமையைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும், நிறைய அனுபவம், வளங்கள் மற்றும் பரந்த பன்னாட்டு வலைப் பின்னலை அணுகவேண்டும், வளங்குன்றாத மற்றும் தாக்கமுள்ள சேவைத் திட்டங்கள் உருவாதல், நடத்தப்படுதலை உறுதி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர்களே, நலச் சவால்களை மாற்றி அமைத்து இன்னும் ஒளிமயமான, இன்னும் நலமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் நம் உறுதிப்பாட்டில் நாம் ஒன்றாகச் சேர்ந்து நிற்போம்.

**அனிருதா ராய்சௌத்ரி**
RI இயக்குனர் 2023–25

# அறக்கட்டளையை உங்களுடையதாக்குங்கள்!



இது கருத்தில் கொள்ள வேண்டிய புத்தாண்டு தீர்மானம்: ரோட்டரி அறக்கட்டளை உங்களுக்குச் சொந்தமானது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அறக்கட்டளை ஒரு உலகளாவிய சக்தியாகும். உலகிற்கு நல்ல பணிகளைச் செய்கிறது. உங்களுக்குச் சொந்தமான எதையும் போலவே அதற்கும் கவனிப்பும், பராமரிப்பும் அவசியமானது. இதை நாம் எப்படிச் செய்யலாம்?

முதலில் இந்த ஆண்டு உங்கள் அறக்கட்டளை பற்றி நன்கு தெரிந்துகொள்ளுங்கள். 2023-ம் ஆண்டில் அறக்கட்டளை தொடர்ந்து 15-வது ஆண்டாக அதிகபட்சமாக நான்கு நட்சத்திர மதிப்பீட்டை பெற்றது உங்களுக்குத் தெரியுமா? இதற்கு நாம் நிதி ரீதியாக வலுவாக இருப்பதால், பரந்த அளவிலான அணுகுமுறையை பெற்றுள்ளோம். நீங்கள் வழங்கும் நன்கொடைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. 91 சதவீத நிதி திட்ட விருதுகள் மற்றும் செயல்பாட்டுக்கு ஒதுக்கப்படுகிறது.

உங்கள் அறக்கட்டளையுடன் ஈடுபாட்டுடன் இருப்பதற்கான மற்றொரு வழி, ஒவ்வொரு ஆண்டும் ஒரு பரிசு மூலம் ஆதரிப்பதுதான். இந்த ஆண்டு 500 மில்லியன் டாலர் நிதி திரட்டும் இலக்கை நாங்கள் நிர்ணயித்துள்ளோம். உங்கள் ஆதரவுடன் நாங்கள் அதை அடைவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நமது கூட்டாண்மைகள் உள்பட நாம் செய்யும் அனைத்திலும் ரோட்டரி அறக்கட்டளை முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை பொதுமக்களுக்கு தெரியப்படுத்துங்கள். அறக்கட்டளையை ரோட்டரியில் இல்லாதவர்கள்கூட ஆதரிக்கலாம்.


உலகை சிறந்த வாழ்விடமாக மாற்றுவதற்கு உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள். உலகளாவிய அல்லது மாவட்ட மானிய திட்டங்களை தேடுங்கள். உங்கள் மானியத்தை ஆதரிக்க அல்லது கூட்டாண்மைக்கு 2024-ல் ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் சங்கத்துடன் இணைந்து செயல்பட மிகப்பெரிய நிதி திரட்டும் அல்லது போலியோ ஒழிப்பு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

2024-ம் ஆண்டில் நீங்கள் எதைச் செய்ய முடிவு செய்தாலும் உங்கள் திட்டங்களில் நமது அறக்கட்டளை இணைந்திருப்பதை உறுதிசெய்யுங்கள்.

**பாரி ரசின்**
TRF அறங்காவலர் தலைவர்



# நம் அறக்கட்டளையை ஆதரியுங்கள்



ரோட்டரி அறக்கட்டளை நம்முடைய முன்னாள் தலைவர் ஆர்ச் கிளம்ஃப் அவர்களால் நிறுவப்பட்டது. ரோட்டரியன்களுடைய முயற்சிகளை ஆதரிக்க ஓர் அறக்கட்டளை இருந்தால் என்னவெல்லாம் நடக்கக்கூடும் என்று அவர் சிந்தித்தார். ரோட்டரியின் மூலம் அவர் இந்தக் கனவை நனவாக்கினார்.

எனினும், TRF திட்டங்கள், அது செய்கிற நல்ல பணி என அனைத்தும் ரோட்டரியன்களுடைய பங்களிப்புகளைச் சார்ந்திருக்கிறது என்கிற எளிய உண்மையை நாம் நினைவில் வைக்கவேண்டும். முந்தைய 107 ஆண்டுகளில் நம் அறக்கட்டளை வாழ்க்கைகளை மாற்றக்கூடிய, வளங்குன்றாத் திட்டங்களுக்கு $4 பில்லியனுக்கு மேல் செலவு செய்துள்ளது. இன்று, பன்னாட்டு நல்கைகளின்மூலம் நாம் உலகம்முழுக்கப் பெரிய அளவிலான, தாக்கமுள்ள திட்டங்களை நடத்துகிறோம். நாம் இன்று ஆண்டு நிதியை ஆதரித்தால், நாளை GGக்களை நடத்தலாம். அதனால், ஆண்டு நிதியை ஆதரிப்பது முதன்மையானதாகும். ஆண்டு நிதி ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு ரோட்டரியனும் வழங்கும் பங்களிப்புகளைச் சார்ந்துள்ளது.

இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் நம்முடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கென நாம் TRFக்கு நிதியளிக்கிறோம். இது ஒரு நீண்ட, கடினமான, சவாலான பயணமாக இருந்துவந்துள்ளது. ஆனால், இன்று நாம் இளம்பிள்ளைவாதம் இல்லாத உலகைக் கிட்டத்தட்ட நெருங்கிவிட்டோம். இந்த நேரத்தில் நாம் நம்மை மீண்டும் இதற்கென அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும், நம் முயற்சிகளை இன்னும் கூடுதலாக்கவேண்டும். "இளம்பிள்ளைவாதத்தை இப்போதே முடித்துவைப்போம்" என்கிற பரப்புரை வெறுமனே பணம் திரட்டுவது இல்லை, அது நம் குழந்தைகளைக் காப்பாற்றுவது.

நன்கொடை நிறுவல் நிதியை ஆதரிப்பது நம் ரோட்டரி அறக்கட்டளையின் ஒளிமயமான நாளையை உறுதி செய்கிறது. நம் இலக்கு, 2025க்குள் $2.025 பில்லியன். நாம் இந்த இலக்கை எட்டும்போது, ஒவ்வோர் ஆண்டும் நாம் $40 மில்லியன் வருவாயைப் பெற்று அதைச் செலவு செய்கிற நிலை உண்டாகும். இதன்மூலம் நாம் செய்யக்கூடிய நன்மைகளை எண்ணிப்பாருங்கள்.

இந்தப் புத்தாண்டில் நாம் ரோட்டரி அறக்கட்டளையில் முதலீடு செய்வோம், உலகில் நல்லவற்றைத் தொடர்ந்து செய்வோம்.

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர் துணை தலைவர் 2022–26

Rotary rise
TRANSCEND BARRIERS
ROTARY INSTITUTE 2023
ZONE 4,5,6,7

## பின்வரும் பக்கங்களில் பெங்களூரு மண்டல மாநாட்டின் தருணங்கள் மற்றும் கவரேஜ் உள்ளன.



*இன்ஸ்டிடியூட் கன்வீனர் RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் (இடது) உடன் இன்ஸ்டிடியூட் தலைவர் PDG K P நாகேஷ்.*

K விஸ்வநாதன்

உரை: ரஷீதா பகத்
மற்றும் ஜெய்ஸ்ரீ

ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளில், RISE எனத் தலைப்பிடப்பட்ட மண்டல இன்ஸ்டிடியூட் 2023, இந்த ஆண்டின் விரிவாக திட்டமிடப்பட்ட மற்றும் உன்னிப்பாகச் செயல்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வாகும். ஒருங்கிணைப்பாளர் மற்றும் RI இயக்குநரான ராஜு சுப்ரமணியன், பெங்களூரில் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று நாள் நிகழ்வின் பிரபலமான முகமாக இருந்தார் மற்றும் செயலாளர் PDG சமீர் ஹரியானி பெரும்பாலும் மேடையில் தொகுப்பாளராக காணப்பட்டார். ஆனால் முழு குழுவிற்கும் தலைமை தாங்கி மற்றும் மாறுபட்ட அமர்வுகளின் சுமூகமான நடத்தையை உறுதி செய்வதில் வழிகாட்டி மற்றும் முன்மாதிரியான தலைமைத்துவத்தை வழங்கிய இன்ஸ்டிடியூட்டின் தலைவர் PDG K P நாகேஷ் பெரும்பாலும் திரைக்குப் பின்னால் இருந்தார்.

இந்நிகழ்வின் மிக சுவாரசியமான விஷயம், முக்கிய மேடையில் வைக்கப்பட்டிருந்த அற்புதமான டிஜிட்டல் டிஸ்ப்ளேக்களின் பின்னால் உள்ள கடின உழைப்பு மற்றும் தொழில்நுட்ப திறமையும் ஆகும். அளவுக்கதிகமான வண்ணங்களைக் கொண்ட காட்சி பேனல்களைக் கண்டறிவது அரிதாக இருந்தது; திரையில் தோன்றும் பேச்சாளர்களின் படங்கள் மிகத் தெளிவாகவும், உயிரோட்டமாகவும் இருந்ததால், கேமராவை மேடையில் இருக்கும் உண்மையான நபர்கள் அல்லது



*இன்ஸ்டிடியூட் அமைப்பாளர் RID ராஜு சுப்ரமணியன் மற்றும் வித்யா இன்ஸ்டிடியூட் திறப்பு விழாவில்.*



**இடமிருந்து:** PRID *மனோஜ் தேசாய், ஷர்மிஷ்தா மற்றும்* PRIP *கல்யாண் பானர்ஜி ஆகியோர் வாழை இலையில் மதிய உணவை உண்டு மகிழ்கின்றனர்.*



**இடமிருந்து:** *மாதவி,* TRF *துணைத் தலைவர் பரத் பாண்டியா,* PRIP K R *ரவீந்திரன் மற்றும் வானதி.*



RI *இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ஷிப்ரா.*



PRID *அசோக் மகாஜன் மற்றும் நயன்தாரா.*



PRID A S *வெங்கடேஷ் மற்றும் வினிதா.*

பின்னணியில் உள்ள அவர்களின் படங்கள் இதில் எங்கு ஃபோகஸ் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க ஒரு நொடி தேவைப்பட்டது. பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மிகவும் நன்றாக இருந்தது, ஒரு சந்தர்ப்பத்தில் ஒருங்கிணைப்பாளர் சுப்ரமணியன் RIPN மரியோ டி கேமர்கோவை மேடைக்கு அழைத்தார், அவர் தன்னிடம் சொன்னதைத் திரும்பச் சொல்ல சொன்னார்… அது டிஜிட்டல் டிஸ்ப்ளேக்கள் மற்றும் பிற தொழில்நுட்பக் கருவிகளின் தரம் “உலகத் தரம் வாய்ந்தது மற்றும் நாம் ரோட்டரி மாநாடுகளில் பெறும் தரத்திற்கு ஈடாக இருந்தது.”

800-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளில் எவரும் பல்வேறு அமர்வுகளில் RI தலைவர் கார்டன் மெக்கினலி மற்றும் அவரது துணைவியார் ஹீதர் ஆகியோரின் நிரந்தர இருப்பை தவறவிட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் முகத்தில் களைப்புக்கான சிறிய அறிகுறி ஏதும் இல்லாமல் நேரத்திற்கு முன்பே அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். பிரதிநிதிகள் அவருடன் படம் எடுக்க அவரை அணுகியபோது தலைவர் மெக்கினலி மரியாதையுடனும், சிரிப்புடனும் புகைப்படங்களை எடுத்துக் கொண்டார்.

புகைப்படக் கலைஞர்களுக்கு அவர் காட்டிய மரியாதை மற்றும் அவர்களுடன் பகிர்ந்து கொண்ட நட்புறவு ஆகியவற்றை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. அமர்வுகளின் மத்தியில், தொழில்முறை புகைப்படக் கலைஞரிடமிருந்து கேமிராவை விளையாட்டுத்தனமாக வாங்கிக்கொண்டு புகைப்படங்களை அவரே எடுத்தார். ஹீத்தரும் நட்பு மற்றும் மரியாதையின் உருவமாக இருந்தார், மேலும் தன்னை அணுகிய ரோட்டேரியர்கள் மற்றும் அவர்களது துணைவர்களுடன் அரட்டையடிப்பதில் ஆர்வம் காட்டினார்.

ரோட்டரி உலகில் இந்தியாவின் வளர்ந்து வரும் செல்வாக்கு மற்றும் இந்தியாவில் ரோட்டரி செயல்பாடுகள் ஆகியவை உயர்மட்ட RI தலைமையால் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப் படுகின்றன என்பதை உலகம் முழுவதிலிருந்து வந்த மூத்த ரோட்டரி தலைவர்களின் மிகுதியிலிருந்து பார்க்க முடிந்தது. RI தலைவர் மற்றும் அவரது மனைவியைத் தவிர, நிகழ்வில் RIPN








6















1.இடமிருந்து: RID ஹான்ஸ்-ஹெர்மன் காஸ்டன், மிட்செல், RID ஜெர்மி ஹர்ஸ்ட், RI தலைவர் கோர்டன் மெக்கினலி, ஹீதர் மற்றும் நட்ஜா பிகார்ட் (RID காஸ்டன் மனைவி); 2.PRID வெங்கடேஷ் மற்றும் வினிதா உடன் RID ஹென்ரிக் பார்போசா டி வாஸ்கோன்செலோஸ் மற்றும் ரெனாட்டா. 3.RI தலைவர் மெக்கினலி கோல்ஃப் ஷாட்டை விளையாடுகிறார். உடன் இன்ஸ்டிடியூட் தலைவர் K P நாகேஷ் (இடது) மற்றும் ரவிசங்கர் டகோஜு (வலது) உள்ளனர்; 4.மிட்நைட் மாரத்தான் RI தலைவர் மெக்கினலி இன்ஸ்டிடியூட் தலைவர் நாகேஷ், செயலாளர் சமீர் ஹரியானி (இடது) முன்னிலையில் துவக்கி வைக்கிறார்; 5.சோனல் மற்றும் PRID கமல் சங்வி PDGs R சீனிவாசன் மற்றும் I S A K நாசர் அவர்களுடன்; 6.PRIP ராஜேந்திர சாபூ, RI தலைவர் மெக்கினலி மற்றும் ஹீதர்; 7.RI தலைவர் மெக்கினலி, வித்யா, ஹீதர் மற்றும் RID சுப்ரமணியன்.














1. வினிதா, ஹீதர் மற்றும் வித்யா; 2. RI தலைவர் மெக்கினலி புகைப்படக் கலைஞருடன் செல்ஃபி; 3. சோனல் மற்றும் PRID கமல் சங்வி. 4. PRIP சாபூ ஹீதருடன் நடனமாடுகிறார்; 5. மாலா, PRID C பாஸ்கர் மற்றும் PRIP சாபூ; 6. RID வாஸ்கோன்செலோஸ் PRIP பானர்ஜியுடன் செல்ஃபி எடுத்துக்கொள்கிறார். 7. PDG J ஸ்ரீதர் மற்றும் அவரது மனைவி புனிதாவுடன் TRF துணைத் தலைவர் பாண்டியா; 8. RID அனிருதா ராய்சௌத்ரி மற்றும் PDG கல்பனா கவுண்ட். 9. RI தலைவர் மெக்கினலி, TRF அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்ட் மற்றும் நட்ஜா பிகார்ட் (RID காஸ்டனின் மனைவி).











3



4



9



5



7



6

மரியோ டி காமர்கோ மற்றும் அவரது மனைவி டெனிஸ், RI இயக்குநர்கள் ஹான்ஸ்-ஹெர்மன் காஸ்டன் (துணைவி நட்ஜா), ஜெரமி ஹர்ஸ்ட் (துணைவி மிட்ச்செல்), கிம் போக் சூவ், ஹென்ரிக் டி வாஸ்கோன்செலோஸ் (துணைவி ரெனாட்டா) மற்றும் TRF அறங்காவலர்கள் லாரி லன்ஸ்ஃபோர்ட் மற்றும் அஜீஸ் மேமன் ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

RI தலைவர் மெக்கினலி ஒரு குளிர்ந்த அதிகாலையில் அவர் ஒரு கார்ப்பரேட் கோல்ஃப் போட்டியை தொடங்கி வைத்தார், இது போலியோ நிதிக்காக $100,000 திரட்ட உதவியது. பத்து நன்கொடையாளர்கள் இந்த காரணத் திற்காக பங்களித்தனர். "TRF உடன் 2:1 என்ற விகிதத்தில் கேட்ஸ் அறக் கட்டளையின் நன்கொடையுடன் சேர்த்து இந்த முயற்சி $300,000 மதிப்புடையதாக இருக்கும்" என்று அவர் அறிவித்தார்.

மற்றொரு நாள் காலையில், கர்நாடக மாநிலச் செயலகம் அமைந்துள்ள விதானா சவுதாவுக்கு முன்பாக விண்டேஜ் கார் மற்றும் பைக் பேரணியை அவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். கர்நாடக விண்டேஜ் கிளாசிக் கார் கிளப்புடன் இணைந்து RID 3191 மற்றும் 3192 தொகுத்து வழங்கிய இந்த நிகழ்வு மனநலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொது உருவ முயிற்சியாகும்.

10,000-க்கும் மேற்பட்ட ஓட்டப்பந்தய வீரர்கள் பங்கேற்ற பெங்களூரு மிட்நைட் மாரத்தான் 16-வது பதிப்பை கொடியசைப்பதற்காக K P நாகேஷ் மற்றும் சமீர் ஹரியானி ஆகியோருடன் மெக்கினலி ஒயிட் ஃபீல்டுக்கு மெட்ரோ ரயிலில் சென்றார். இந்த நிகழ்ச்சி TRFக்கு $300,000 திரட்ட உதவியது. இந்தியாவில் உள்ள பல்வேறு தகுதியான தொண்டு நிறுவனங்களை ஆதரிப்பதற்காக 2007-ல் RC பெங்களூர் IT காரிடார் மூலம் இந்த நிகழ்வு நிறுவப்பட்டது.

இலையில் பரிமாறப்பட்ட மதிய உணவு மிகவும் பேசப்பட்ட அனுபவமாக இருந்தது. சுமார் 800 விருந்தினர்களுக்கு தென்னிந்திய பாணியில் மதிய உணவு வழங்கப்பட்டது, இதில் கர்நாடகாவின் தனித்துவமான உணவு வகைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழை இலைகளில் வழங்கப்பட்டது. இன்ஸ்டிட்யூட்டின் இரண்டு நாட்கள் முழுவதும், மண் கோப்பைகளில் தேநீர்/காபி, இளநீர் மற்றும் கரும்புச்சாறு ஆகியவை கவுண்டரில் வழங்கப்பட்டன. தொடக்க நாள் இரவு உணவில் பிரதிநிதி களுக்கு பிரத்யேகமாக தேர்ந்தெடுக்கப்






1. RIPN *மரியோ டி காமர்கோ பிரதிநிதிகளுடன் நடனமாடுகிறார்.*
2. RID *சுப்பிரமணியன் ரூபா மற்றும்* PDG *ஹரியானியுடன்.*
3. RC *பெங்களூரு உறுப்பினர் ரவிசங்கர் டகோஜு மற்றும் அவரது மனைவி பாவ்லா ஹீத்தருடன்.*



பட்ட ரோஸ் ப்ரூட் ஒயின் பாட்டில் வழங்கப்பட்டது ஹவுஸ் அஃப் ஃபிரண்ட்ஷிப்பில் இருந்த புடவைக் கடைகள் விறுவிறுப்பான வியாபாரம் செய்தன என்று தெரிந்தது. சில அழகிய ஓவியங்களுடன் கூடிய கலைக்கூடம் ஏராளமான ஆர்வலர்களை ஈர்த்தது.

AI-அடிப்படையிலான புகைப்படத் தேடல் RISE செயலியில் அறிமுகப்படுத்தப்பட்டது, இது 'செல்பி சர்ச்' என்ற விருப்பத்தின் மூலம் புகைப்படங்களை ஐந்து வினாடிகளில் அடையாளம் காண உதவியது.

டிஜிட்டல் சகாப்தத்தை கருத்தில்கொண்டு, RID 3191 PDG H R ஆனந்த் வடிவமைத்த இன்ஸ்டிடியூட் டைரக்டரியில், கவர்னர்களுக்கான QR குறியீடு இருந்தது, அதனை ஸ்கேன் செய்தால் DGக்களாக அவர்களின் சாதனைகள் காட்சிப்படுத்தப்பட்டது. இன்ஸ்டிடியூட்டின் புகைப்படங்களை QR குறியீடு மூலம் டைரக்டரியின் பிக்சர் பனோரமா பக்கத்தில் பார்க்கலாம்.

மேலும் புகைப்படங்களுக்கு, *www.rotarynewsonline.org* பார்க்கவும். படங்கள்: RNT குழு மற்றும் இன்ஸ்டிடியூட் புகைப்படக் கலைஞர்கள்.

# Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


**உலக ரோட்டரி எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 37,123 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,061 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 15,028 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 13,227 |
| ரோட்டரியினர் | : | 1,186,961 |
| ரோட்டராக்டர்கள் | : | 167,857 |
| இன்டராக்டர்கள் | : | 345,644 |

*As on December 18, 2023*

**ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை** As on December 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 6,146 | 6.28 | 73 | 503 | 34 | 254 |
| 2982 | 86 | 3,844 | 6.37 | 35 | 840 | 95 | 174 |
| 3000 | 140 | 6,078 | 11.94 | 117 | 1,915 | 224 | 216 |
| 3011 | 138 | 5,138 | 29.23 | 85 | 2,391 | 149 | 37 |
| 3012 | 154 | 3,842 | 22.88 | 77 | 779 | 99 | 61 |
| 3020 | 86 | 5,031 | 7.59 | 50 | 1,043 | 119 | 351 |
| 3030 | 101 | 5,739 | 15.84 | 128 | 1,946 | 521 | 384 |
| 3040 | 113 | 2,486 | 14.80 | 52 | 913 | 79 | 213 |
| 3053 | 74 | 2,944 | 16.41 | 25 | 397 | 42 | 131 |
| 3055 | 80 | 2,942 | 11.90 | 67 | 1,094 | 73 | 376 |
| 3056 | 89 | 3,899 | 25.67 | 51 | 579 | 103 | 201 |
| 3060 | 105 | 5,098 | 16.08 | 68 | 2,236 | 61 | 143 |
| 3070 | 125 | 3,362 | 16.15 | 49 | 602 | 51 | 63 |
| 3080 | 109 | 4,283 | 12.61 | 115 | 1,967 | 170 | 122 |
| 3090 | 120 | 2,612 | 6.93 | 50 | 636 | 193 | 166 |
| 3100 | 114 | 2,248 | 11.34 | 15 | 138 | 36 | 151 |
| 3110 | 147 | 3,903 | 11.17 | 17 | 110 | 48 | 107 |
| 3120 | 89 | 3,664 | 15.72 | 49 | 652 | 28 | 55 |
| 3131 | 143 | 5,797 | 29.22 | 150 | 3,400 | 255 | 149 |
| 3132 | 90 | 3,715 | 13.73 | 43 | 628 | 122 | 203 |
| 3141 | 115 | 6,250 | 27.33 | 139 | 5,242 | 169 | 224 |
| 3142 | 108 | 4,016 | 21.66 | 96 | 2,443 | 113 | 93 |
| 3150 | 110 | 4,400 | 13.16 | 155 | 1,827 | 109 | 130 |
| 3160 | 84 | 2,774 | 9.08 | 32 | 206 | 95 | 82 |
| 3170 | 151 | 6,719 | 15.14 | 122 | 1,860 | 194 | 180 |
| 3181 | 87 | 3,693 | 10.89 | 44 | 539 | 93 | 118 |
| 3182 | 87 | 3,725 | 10.50 | 47 | 247 | 106 | 103 |
| 3191 | 94 | 3,626 | 18.31 | 95 | 2,724 | 143 | 35 |
| 3192 | 83 | 3,590 | 21.14 | 83 | 2,561 | 113 | 40 |
| 3201 | 174 | 6,798 | 9.94 | 138 | 2,249 | 100 | 93 |
| 3203 | 96 | 5,063 | 7.51 | 93 | 1,202 | 178 | 39 |
| 3204 | 75 | 2,453 | 7.26 | 24 | 226 | 17 | 13 |
| 3211 | 159 | 5,137 | 8.41 | 11 | 178 | 20 | 134 |
| 3212 | 127 | 4,781 | 11.34 | 95 | 3,703 | 167 | 153 |
| 3231 | 97 | 3,512 | 7.32 | 39 | 437 | 43 | 417 |
| 3232 | 190 | 6,674 | 19.94 | 129 | 7,261 | 155 | 100 |
| 3240 | 106 | 3,608 | 16.71 | 64 | 1,173 | 67 | 227 |
| 3250 | 109 | 4,208 | 21.77 | 71 | 1,011 | 65 | 191 |
| 3261 | 105 | 3,488 | 22.71 | 25 | 271 | 24 | 45 |
| 3262 | 114 | 3,875 | 15.87 | 77 | 747 | 645 | 286 |
| 3291 | 144 | 3,905 | 25.53 | | | 73 | 737 |
| **India Total** | **4,658** | **175,066** | | **2,895** | **58,876** | **5,191** | **6,997** |
| 3220 | 70 | 2,018 | 16.55 | 97 | 4,775 | 81 | 77 |
| 3271 | 180 | 3,070 | 18.76 | 194 | 3,350 | 333 | 28 |
| 3272 | 162 | 2,232 | 14.20 | 97 | 1,340 | 26 | 49 |
| 3281 | 339 | 7,966 | 17.76 | 281 | 1,942 | 144 | 215 |
| 3282 | 182 | 3,657 | 9.84 | 170 | 1,331 | 30 | 47 |
| 3292 | 154 | 5,619 | 18.72 | 185 | 5,490 | 121 | 134 |
| **S Asia Total** | **5,745** | **199,628** | **15.63** | **3,919** | **77,104** | **5,926** | **7,547** |

Source: RI South Asia Office

# இந்தியாவை உலகம் கவனிக்கிறது: S ஜெய்சங்கர்

ரஷீதா பகத்

இது மீள் எழுச்சி பெற்ற இந்தியா - ஒரு துடிப்புமிக்க பொருளாதாரம். மில்லியன் கணக்கான வீடுகளில் உணவுப் பாதுகாப்பு முதல் தண்ணீர் மற்றும் மின்சார இணைப்புகள் என பலதுறைகளில் தன்னிறைவு பெற்றுள்ளது என்று பெங்களூருவில் மண்டல மாநாட்டில் நடைபெற்ற அமர்வின் போது வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் மிகவும் சுவாரஸ்யமான தகவல்களைக் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்களை விவரித்த அவர், அவை நமது அண்டை நாடுகளிலும், உலகம் முழுவதிலும் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை கூறினார்.

“நமது சாதனைகள், திறன்கள், அபிலாஷைகள் மற்றும் கனவுகளுக்கு இடையே நேரடி தொடர்பு உள்ளது” என்று கூறிய அவர், வேகமாக மாறிவரும் மற்றும் முன்னேறிவரும் இந்தியா, “நல்ல தலைமை, மற்றும் உத்வேகத்தை கொண்டிருக்கிறது. இன்று உலக நாடுகள் இந்தியாவை வலிமையான நாடாக பார்க்கும்போது, என்ன நடந்தது, எப்படி நடந்தது. ஏன் நடந்தது என்பதை அறிய விரும்புகிறது.

கடந்த தசாப்தத்தில் இந்தியாவில் கண்ட 10 பெரிய விஷயங்களைப் பட்டியலிட்ட ஜெய்சங்கர், இவை “வெவ்வேறு களங்களில் சவால்கள், வாய்ப்புகள் மற்றும் சாதனைகளின் கலவையாகும், மேலும் அவை அனைத்துத்




துறையிலும் முன்னேற்றத்தை குறிக்கின்றன'' என்றார்.

முதல் பெரிய சவால் கோவிட்-19, "நூற்றாண்டிற்கு ஒருமுறை'' நடக்கும். கோவிட் தொடர்பான பல பிரச்சினைகளை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட மத்திய அமைச்சரவையின் ஒரு சிறிய குழுவில் உள்ள அமைச்சர்களில் ஒருவராக நான் நியமிக்கப்பட்டேன். பயணமே ஸ்தம்பித்திருந்த நேரத்தில் நான் உலகம் முழுவதும் பயணம் செய்தேன். இந்திய பொது சுகாதார அமைப்பின் விரைவான செயல்பாட்டை நான் நேரில் பார்த்தேன். தொடக்கத்தில், சவாலாகவும், முற்றிலும் மிகப் பெரியதாகவும் தோன்றியது. சில மாதங்களுக்குள், தலைமை மற்றும் கூட்டுப் பொறுப்பு காரணமாக, நெருக்கடியை தேசம் சமாளித்தது. மிக விரைவான வேகத்தில் திறன்களை உருவாக்க முடிந்தது.

அது 2020; 2021 தடுப்பூசியின் ஆண்டு, பல நாடுகளும் தடுப்பூசி யை உருவாக்கின, ஆனால் நாம் தடுப்பூசியை உருவாக்கிய அளவு, தரம் மற்றும் வேகம் ஒரு அசாதாரண நிகழ்வு. நாம் தயாரித்தது மட்டுமின்றி தடுப்பு மருந்தையும் கண்டுபிடித்தோம். அந்த நேரத்தில் பல நாடுகளில் தடுப்பூசி இருந்தது ஆனால், ஒழுங்கமைக்கப்பட்ட தடுப்பூசி முறை இல்லை. அங்கு தான் இந்தியா தனித்து நின்றது. 2.5 பில்லியன் டோஸ் தடுப்பூசிகள் மக்களுக்கு போடப்பட்டன. ஏனென்றால் நாம் டிஜிட்டல் முறையில் நம்மை ஒழுங்கமைத்துக் கொண்டோம். இதன் மூலம் மக்கள் தடுப்பூசி போட்டுக் கொண்டு வீட்டுக்கு திரும்பிய நேரத்தில் அவர்களின் கைப்பேசியில் படத்துடன் சான்றிதழ் தயாராக இருந்தது.''

அடுத்த கட்டத்தில், மருத்துவ ஆக்சிஜன் தேவை பெரும் சவாலாக இருந்தபோது, பல்வேறு அமைப்புகள் முன்வந்தன - தொழில்துறை, ரயில்வே, விமானப்படை மூலம் நெருக்கடிகள் சமாளிக்கப்பட்டன. மேலும், மற்ற நாடுகள் மற்றவர் களுக்கு உதவுவதற்கு முன்பு தங்கள் மக்களுக்கு தடுப்பூசி போடுவதை முதலில் முடிப்பதாகக் கூறினாலும், நாங்கள் தடுப்பூசி போடும் நிலையிலேகூட, தடுப்பூசிகளைப் பகிர்ந்து கொண்ட சிலரில் நாமும் ஒருவராக இருந்தோம், மேலும் 99 நாடுகளுக்கும் இரண்டு ஐ.நா. அமைப்புகளுக்கும் தடுப்பூசிகளை வழங்கினோம். நமது அண்டை நாடு களுக்கு உதவுவது இயற்கையானது. ஆனால், கரீபியன், பசிபிக்... தொலைதூர நாடுகள் மற்றும் சிறிய நாடுகள் இருந்தன. இந்தியா உத வாவிட்டால் இன்று வரை எங்களுக்கு தடுப்பூசிகள் கிடைத்திருக்காது என்று தெரிவித்தன.

தனது அமைச்சகம் குறித்து பேசிய ஜெய்சங்கர், ஜி20 மாநாடு கையாண்ட விதம் முன்மாதிரியாக இருந்தது என்றார். "G20 என்பது 20 பெரிய மற்றும் வலிமையான நாடுகள் ஒன்றிணைந்த உலகக் கோப்பை இராஜதந்திரம் போன்றது, மேலும் நாம் ஒன்பது நாடுகள் விருந்தினர்களாகவும் 14 சர்வதேச அமைப்புகளையும்



*பாவ்லா மற்றும் RC பெங்களூர் உறுப்பினர் ரவிசங்கர் டகோஜு, அவர்களின் TRF பங்களிப்பிற்காக வெளிவிவகார அமைச்சர் S ஜெய்சங்கர் மற்றும் RI தலைவர் கோர்டன் மெக்கினலி அவர்கள் முன்னிலையில் விருது வழங்கபடுகிறது. மேலும் படத்தில் உள்ள மற்றவர்கள்* **(இடமிருந்து)** *மாநாட்டு தலைவர் K P நாகேஷ், RID ராஜு சுப்பிரமணியன், RIPN மரியோ டி காமர்கோ, PRID அசோக் மகாஜன், TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா, PRIP K R ரவீந்திரன், PRIDகள் A S வெங்கடேஷ் மற்றும் கமல் சங்வி.*

கொண்டிருந்தோம். நாம் ஜி 20 தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டபோது, உலகம் அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், அமைப்பாளர்களாகிய நாம் உக்ரைன் போர் போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகளில் வழிவகுத்த விதம், "வளர்ந்து வரும் நாடுகளில் - ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்கா - அவர்களின் பிரச்சனைகள் ஐரோப்பாவால் கவனிக்கப்படுவதில்லை என்று மிக ஆழமான கோபம், மற்றும் பிற பிளவுகள் மற்றும் வேறுபாடுகள் மற்றும் தங்களுக்குள் வாதிடும் மற்றும் சமரசம் செய்வதற்கு கடினமான நிலைப்பாடுகளைக் கொண்ட நாடுகளுக்கு ஒரு பொது வான தளத்தைக் கண்டறிந்தது, பாராட்டுக்குரியது. G20 இந்த ஆண்டின் இராஜதந்திர சாதனை என்று நான் கூறுவேன்.

"எல்லோரையும் ஒப்புக்கொள்ளச் செய்ய முடியும் என்பதற்காக அல்ல, ஆனால் நிலையான வளர்ச்சியைப் பெறுவதற்கும், பசுமை வளர்ச்சி யை மேம்படுத்துவதற்கும், உலக வங்கி மற்றும் IMF போன்ற சர்வதேச நிறுவனங்கள் கடன் வழங்குவதை உறுதி செய்வதற்கும், நாம் உட்பட மிகவும் சக்திவாய்ந்த நாடுகளைப் பெற முடியும்.

இந்த தசாப்தத்தின் மற்றுமொரு பெரிய காரணி, இந்தியா ஒன்றிணைத்துள்ள டிஜிட்டல் உள்கட்டமைப்பு ஆகும். இது சேவைகள் வழங்கப்படுவதற்கும் நன்மைகள் வழங்குவதற்கும் முதுகெலும்பாக மாறியுள்ளது, இதன் மூலம் நீங்கள் உங்கள் உரிமைகள் மற்றும் உங்கள் கோவிட் சான்றிதழைப் பெறுவீர்கள். இந்த டிஜிட்டல் மயமாக்கல் இந்தியாவில் மாற்றத்தை உருவாக்கியுள்ளது.

ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் மக்கள்தொகையை விட பெரிய உணவு ஆதரவு அமைப்பை உருவாக்குவது இதில் அடங்கும்; இது மக்களை வங்கியுடன் இணைத்துள்ளது; 10 ஆண்டுகளுக்கு முன்பு, மூன்றில் ஒரு பங்கு இந்தியர்கள் வங்கி அமைப்பில் இருந்து வெளியே இருந்தார்கள். கோடிக்கணக்கான மக்களுக்கு எரிவாயு, மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்புகள் வழங்கப் பட்டன, கூடுதல் பயன்கள் தேவைப்படும் விவசாயிகளுக்கு அவை வழங்கப்பட்டன. "10 ஆண்டுகளில், ஜெர்மனியை விட கூடுதல் மக்கள் தொகை உள்ள மக்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன, ஜப்பானை விட அதிக மக்கள் தொகை உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டப் பட்டுள்ளன," என்று அவர் மேலும் கூறினார்.

அதேபோல், சமூக நலன்களின் அளவும் வியக்கைவைக்கிறது. 500 மில்லியன் மக்களுக்கு ஆயுஷ்மான் பாரத் மருத்துவ சுகாதாரத் திட்டம், 800 மில்லியன் மக்களுக்கு உணவுக்கான ஆதரவு, 415 மில்லியன் மக்களுக்கு முத்ரா கடன்களும், 450 மில்லியன் பேருக்கு வங்கி கணக்கு வசதிகளும், 100 மில்லியன் புதிய வீடுகளுக்கு தண்ணீர் இணைப்பு என 500 மில்லியன் மக்களுக்கு வழங்கப்படுகிறது.

அடுத்ததாக, இந்திய மக்களின் திறமை மற்றும் புத்தி சாலித்தனத்திற்காக இந்தியாவை விரும்புகின்றனர். உலகின் மனசாட்சியில் பதிந்துள்ள ஒரே சாதனை சந்திரயான் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியது தான். இது நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்துகிறது, ஆனால் இன்னும் பல மாற்றங்கள் உள்ளன. நேற்று, ஓமன் சுல்தான் அரசு முறை விஜயம் செய்தார், மேலும் நமது விண்வெளித் திட்டம் மற்றும் ட்ரோன்கள் இரண்டிலும் ஈர்க்கப் பட்டார். வணிகம் மற்றும் பிற பயன்பாடுகள் இரண்டிற்கும் ட்ரோன் கொள்கையை உருவாக்கியுள்ளோம். இன்று ட்ரோன்கள் பண்ணைகளில் விவசாயிகள் நில அளவீடுகள் செய்வதற்கும் வேறு சில வேலை களுக்கும் உதவுகிறது. நமது எல்லைகளைப் பாதுகாப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

பல வழிகளில் மாற்றங்கள் இருந்து கொண்டே இருந்தன. உதாரணமாக பாஸ்போர்ட் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு, 77 இடங்களில் மட்டுமே பாஸ்போர்ட்டைப் பெற முடியும்; இன்று நீங்கள் 527 இடங்களில் இருந்து விண்ணப்பிக்கலாம். அந்த 450 அதிகரிப்பு புதிய கட்டிடங்களிலிருந்து வரவில்லை; நாங்கள் தபால் அலுவலகங்கள் மற்றும் தபால் ஊழியர்களின் சேவையை மாற்றியமைத்தோம். இந்தியாவில் ஒவ்வொரு



# மீண்டும் பொருளாதாரம் எழுச்சி பெறும்



*இந்தியா உலகப் பொருளாதார ஜாம்பவானாக உருவெடுக்கும் என்று மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார். உலகப் பொருளாதாரத்தில் இந்தியா ஒரு பிரகாசமான நட்சத்திரம் என்று உலகம் முழுவதும் பேசப்படுகிறது. இதற்கு காரணங்கள் உள்ளன. எங்களிடம் இரண்டு காலாண்டுகள் மிகவும் ஈர்க்கக்கூடிய வளர்ச்சி விகிதம் இருந்தது - கடந்த காலத்தில் வளர்ச்சி 7.6 சதவீதம். கடந்த தசாப்தத்தில் உலகப் பொருளாதாரத்தில் 10-வது இடத்திலிருந்து 5-வது இடத்திற்கு முன்னேறியுள்ளோம். அந்நிய முதலீட்டின் ஓட்டம் இரட்டிப்பாகியுள்ளது, ஏற்றுமதி 75 சதவீதம் அதிகரித்துள்ளது, உணவு தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது. 135 மில்லியன் மக்கள் - ஜப்பானின் மக்கள்தொகையை விட அதிகம் - தீவிர வறுமையில் இருந்து வெளியே வந்துள்ளனர்.''*

*கோவிட் இருந்தபோதிலும் இவை அனைத்தும் நடந்தன, அதிக மன அழுத்தத்தின் போது சரியான முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும் புதிய பொருளாதார உத்வேகத்தை உருவாக்க ஒன்றிணைந்த கொள்கைகள் செயல்படுத்தப்பட்டன. அதிகாரத்துவ மயமாக்கல், தேசிய தளவாடங்கள் மற்றும் உள்கட்டமைப்புக் கொள்கை, Gati Shakti திட்டம் விவசாயத் துறைக்கு வலுவான மற்றும் நீடித்த ஆதரவு மற்றும் மேக் இன் இந்தியாவை மேம்படுத்துவதற்கான மிகவும் உறுதியான பிரச்சாரத்திற்கு நன்றி. வணிகம் செய்வது எளிதாகிவிட்டது. ''அவை ஒவ்வொன்றும் வித்தியாசமாகத் தோன்றலாம், ஆனால் அதன் முழுமையும் இந்தியப் பொருளாதாரம் முன்னேறிக்கொண்டிருக்கும் சமிக்ஞையை நமக்குத் தருகிறது.''*

*பெரும்பாலோர் இன்று விமானத்தில் பறக்கிறார்கள் என்று ஜெய்சங்கர் ரோட்டேரியன்களிடம் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் இந்த நாட்டில் விமான நிலையங்களின் எண்ணிக்கை 75-லிருந்து 150 ஆகவும், பெருநகரங்களைக் கொண்ட நகரங்கள் ஐந்தில் இருந்து 20 ஆகவும் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? நெடுஞ்சாலை அமைப்பின் விரிவாக்கத்தைப் பாருங்கள்; நாம் மாற்றத்தைப் பார்க்கிறோம், ஆனால் அதை கொடுக்கப்பட்டதாக எடுத்துக்கொள்கிறோம், ஆனால், இந்த அளவுள்ள ஒரு நாடு இந்த மாற்றத்தின் விகிதத்துடன் நகர்வதை உலகம் பார்க்கும்போது, அது மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது என்றார்.*



நாளும் இரண்டு கல்லூரிகள் திறக்கப்படுகின்றன, ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகிறது!

இவை அனைத்தையும் கொண்டு, இந்தியாவும் இந்தியர்களும் உலகளாவிய பணியிடத்திற்கு தயாராகி வருகின்றனர், மேலும் இந்தியர்களின் திறமை, புத்திசாலித்தனம் மற்றும் படைப்பாற்றல் உலகம் முழுவதும் தேவைப்படும் என்று ஜெய்சங்கர் கூறினார். இதுவரை இந்தியாவில் இருந்து வருபவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருந்த பல நாடுகள், இன்று ஒப்பந்தங்களை எட்டுவதற்கு நம்மைத் தேடி வருகின்றன. கடந்த ஓராண்டில் ஜெர்மனி, ஆஸ்திரியா, ஆஸ்திரேலியா, போர்ச்சுகல் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுடன் மக்களின் பயணிக்க வசதியாக

ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டுள்ளேன். இந்தியர்களின் திறமைக்கு இன்று உலகம் முழுவதும் தேவை உள்ளது, ஆனால், நாம் அதற்கேற்ப நம்மை தயார் செய்து அவர்களுக்கு சேவைகளை வழங்கினால் மட்டுமே உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். மேலும் பள்ளிகள் தொடங்குதல், கழிப்பறைகள் கட்டுதல், பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிப்பது போன்றவற்றின் மூலம் அது நடக்கிறது. இந்தியாவின் இந்த சமூக-பொருளாதார மாற்றம் அடுத்த 25 ஆண்டுகளில் மேலும் விரிவடையப் போகிறது என்பது உண்மை.

நமது எல்லைகளிலும், அண்டை நாடுகளிலும் இருந்து நமக்கு சவால்கள் உள்ளன. ஆனால், அவை சரிவர கையாளப் படுகின்றன என்றார் அவர்.

சுருக்கமாக, இந்தியாவின் இந்த ஒட்டுமொத்த மற்றும் விரைவான மாற்றம், மேலே உள்ள சரியான தலைமையின் காரணமாக சாத்தியமானது என்று கூறினார். ''சரியான தலைமைத்துவத்தைப் பெற்று, நம்மை நாமே ஊக்கப்படுத்தி, கூட்டாகச் செயல்படும் தருணத்தில், நமது சாதனைகளின் அளவைக் கண்டு நம்மை நாமே ஆச்சரியப்படுத்த முடியும்.''

நம்மைச் சுற்றியுள்ள நாடுகள் கூட பலனடைந்துள்ளன, ''மிகவும் ஆழமான பொருளாதார நெருக்கடிக்குள் சென்ற இலங்கையின் உதாரணத்தை எடுத்துக் காட்டினார், மேலும் இது போன்ற நெருக்கடிகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிறுவனங்கள் உட்பட உலகின் பிற நாடுகள் என்ன செய்வது என்று விவாதிக்கின்றன. இந்தியா முன்னேறியது. இலங்கையின் இருண்ட தருணத்தில் இந்தியா ஆதரவுக்கரம் நீட்டியது ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியது. மேலும் இந்தியா தனது அண்டை நாடுகளுக்கு எப்போதும் துணை நிற்கிறது என்பதைக் காட்டியது. மேலும் இச்செய்தி நமது சுற்றுப்புறத்திற்கு அப்பால் எதிரொலிக்கிறது. இன்று இந்தியாவின் தடம் உலகில் 78 நாடுகளில் 600 திட்டங்களில் உள்ளது. நம் மருத்துவர்கள், சமூக அமைப்புகள், வணிகங்கள் உலகின் பல மூலைகளுக்குச் சென்றுவிட்டன.

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்தபோது இந்திய அரசாங்கம் உதவியதற்காக PRIP K R ரவீந்திரன், ஜெய்சங்கர் மற்றும் இந்திய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்தார். மேலும் உக்ரைன் அல்லது காஸா போன்ற இடங்களில் தந்திரமான உலகளாவிய சூழ்நிலைகளுக்கு செல்ல ரோட்டேரியன்களின் சிரமம் குறித்து அவரது ஆலோசனையை கோரினார்.

ஜெய்சங்கர் கூறுகையில், உக்ரைன் மோதல் தொடங்கியபோது, அங்கு இருந்த 19,000 மாணவர்களை இந்தியா திரும்ப அழைத்து வந்தது, மேலும், பலவற்றைச் செய்தது. குறிப்பாக அகதிகளுக்கு உதவுவதற்காக பல இந்திய அமைப்புகள் அங்கு சென்றன என்பது உண்மையில் அதிகம் ஈர்க்கப்படாத ஒரு கதை. அவர்கள் சூப் கிச்சன்களை நடத்தி, வெளியே வரும் அகதிகளுக்கு பல வழிகளில் உதவினார்கள். இந்த மாதிரியான சூழ்நிலையில் அங்கு செல்வது எளிதானது அல்ல என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆனால், நீங்கள் நன்கு நிலைநிறுத்தப்பட்டு சாதனை படைத்தவராக இருந்தால், கடினமான சூழ்நிலையிலும் நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்தலாம். உங்களுக்காக நான் ஏதாவது செய்ய முடியுமானால், என்னை தொடர்புகொள்ளலாம் என்றார்.

BRICS-ன் எதிர்காலம் குறித்து பிரேசிலில் இருந்து வந்த RIPN மரியோ டி காமர்கோவின் மற்றொரு கேள்விக்கு பதிலளித்த வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அது வளரும், செல்வாக்கு பெறும் மற்றும் அதிக உறுப்பினர்களையும்கூட பெறும் என்று நான் நினைக்கிறேன்; அடுத்த ஆண்டு நாம் பிரிக்ஸ் மாநாட்டில் சந்திக்கும் போது மேலும் ஆறு உறுப்பினர்களால் விரிவுபடுத்தப்படும். அது வளரும், ஏனெனில் சில நாடுகளின் ஆதிக்கம் முடிவுக்கு வரும், மேலும் BRICS ஒரு தெளிவான செய்தியை அளிக்கிறது, ''நாங்கள் இங்கே இருக்கிறோம், உலகம் மிகவும் மாறுபட்டது. ஒரு சில நாடுகளால் மட்டுமே அதை இயக்க முடியாது.'' என்றார்.

அதிக நாடுகளில் விசா இல்லாமல் பயணம் செய்ய இந்தியர்கள் எப்போது அனுமதிக்கப்படுவார்கள் என்ற TRF துணைத் தலைவர் பரத் பாண்டியாவின் கேள்விக்கு, அதற்கு ஏற்கெனவே வழிவகை செய்யப்



*RID சுப்ரமணியன் மற்றும் மாநாட்டு செயலாளர் PDG சமீர் ஹரியானி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுடன்.*



டகோஜு தனது மனைவி பாவ்லா, மாநாட்டு செயலாளர் ஹரியானி, மற்றும் தலைவர் K P நாகேஷ் முன்னிலையில் TRFக்கு ரூ.15 கோடி வழங்குவதாக அறிவிக்கிறார்.

பட்டு வருவதாக ஜெய்சங்கர் கூறினார். சமீபத்தில் தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் இந்தியர்களுக்கு விசா இல்லாமல் நுழைய அனுமதி வழங்கியுள்ளன. “மக்களின் இடம் பெயர்தல் சட்டபூர்வமானது என்பதை நாம் உறுதி செய்யும் போது இது வளரும்; அதனால் தான் பல்வேறு நாடுகளுடன் இந்த மக்கள் சென்று வரும் ஒப்பந்தங்களை செய்து வருகிறோம்.

## ஐ.நா.வின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது

*ஐ.நா.வில் இந்தியாவுக்கு எப்போது நிரந்தர இடம் கிடைக்கும் என்ற கேள்விக்கு, வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் இருந்து சுவாரசியமான பதில் கிடைத்தது. பிரச்சனை என்னவென்றால், “ஐ.நா. ஒரு பழைய சங்கத்தை போன்றது, அவர்கள் தங்கள் பிடியிலிருந்து விடுபட விரும்பாத மற்றும் சங்கம் மீதான கட்டுப் பாட்டைத் தக்க வைத்துக் கொள்ள விரும்பும் உறுப்பினர்களின் தொகுப்பைக் கொண்டுள்ளனர். அவர்கள் தங்கள் நடைமுறைகளை கேள்விக்குட்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. அதிகமான உறுப்பினர்களை சேர்க்க அவர்கள் விரும்பவில்லை. ஆனால், இன்று இது உலகிற்கு தீங்கு விளைவிப்பதாக நான் நினைக்கிறேன், ஏனென்றால் உலகம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளில், ஐ.நா. தலை யிடுவதே இல்லை. அதன் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது.*

*“உலகின் 200 நாடுகளிடம் சீர்திருத்தம் வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், மிகப் பெரிய எண்ணிக்கையில் ‘ஆம், எங்களுக்கு சீர்திருத்தம் வேண்டும்’ என்று கூறும் அளவுக்கு உலகளாவிய உணர்வு உள்ளது என்றும் அவர் கூறினார்.*

*சுமார் 50 நாடுகளை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு ஐ.நா. உருவாக்கப்பட்டது என்பது தான் உண்மை. “நான்கு மடங்கு வளர்ந்த ஒரு வணிகத்தை கற்பனை செய்து பாருங்கள், ஆனால் அந்த வணிகத்தின் அசல் விளம்பரதாரரை நீங்கள் மாற்ற விரும்பவில்லை. இது நியாயமானது அல்ல, அதில் ஒரு உணர்தல் இருப்பதாக நான் நினைக்கிறேன். அது நடக்கும் என்று நான் நம்புகிறேன், நாங்கள் அதைக் கடைப்பிடிப்போம், இங்கே வரலாறு நம் பக்கம் இருக்கிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன், என்று அவர் மேலும் கூறினார்.*

இந்தியா எப்போது வளர்ந்த நாடாக மாறும் என்ற கேள்விக்கு, “அடுத்த 25 ஆண்டுகளுக்கு நீங்கள் வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!” இந்தியா நிச்சயமாக வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது. ஆனால், நாம் இப்போதுள்ள வேகத்தை இழந்துவிடக்கூடாது அல்லது முன்னோக்கிச் செல் வதிலிருந்து பின்வாங்கக்கூடாது. சீர்திருத்தத்தின் ஒரு முக்கியப் பகுதியானது, உங்களை கடந்த காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கா தீர்கள். லட்சிய இலக்குகளை நீங்களே அமைத்துக் கொள்ளுங்கள். மேலும் பிரதமர் நரேந்திர மோடி இந்தச் சமூகத்தின் ஆற்றலைக் ஊக்குவித்து வருகிறார். அதுவே நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்லும்.

இந்த அமர்வில், RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன் தலைமையில், RC பெங்களூரைச் சேர்ந்த ரவிசங்கர் டகோஜு, தலா ரூ.5 கோடிக்கான மூன்று காசோலைகளை ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கினார். அவரது மனைவி பாவோலாவுடன் வந்த அவர், இந்த ரூ.15 கோடியில், அறக்கட்டளைக்கு உறுதியளித்த ரூ.100 கோடியில் 50 சதவீதத்தை நிறைவு செய்வதாக கூறினார். இந்தப் பணத்தில் ரூ.5 கோடி நைஜீரியாவில் சேவைத் திட்டங்களுக்கும், ரூ.5 கோடி வங்கதேசத்தின் திட்டங்களுக்கும், மீதமுள்ள ரூ.5 கோடி இந்தியாவில் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும். ■

# அடுத்த மண்டலக்கூட்டம் கொச்சியில்

ரோட்டரி செய்திக்குழு




*கொச்சி இன்ஸ்டிடியூட் தலைவர் PDG ஜான் டேனியல் கேரளாவின் பாரம்பரிய போர் படகான பாம்பு படகை RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் ஹீதருக்கு வழங்குகிறார். மேலும் (இடமிருந்து) PDG S முத்துபழனியப்பன், கொச்சி இன்ஸ்டிடியூட் செயலாளர் ஜோஸ் சாக்கோ, அவரது மனைவி மேரி மற்றும் மீரா டேனியல் (வலது).*

RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி, அடுத்த ரோட்டரி மண்டலக் கூட்டத்தின் அமைப்பாளர் என்ற முறையில் மனைவி ஷிப்ராவுடன் சேர்ந்து, இயற்கை எழில் கொஞ்சும் கொச்சிக்கு பிரதி நிதிகளை அழைக்கிறார். 2024-ம் ஆண்டுக்கான மண்டலக் கூட்டம் போல்கட்டி தீவுகளில், கிராண்ட் ஹயாத்தில் உள்ள லூலு மாநாட்டு மையத்தில் டிசம்பர் 6 முதல் 8 வரை நடைபெறுகிறது.

RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன் இணை அமைப்பாளராகவும், PDG ஜான் டேனியல் (RID 3211) மாநாட்டின் தலைவராகவும் இருப்பார்கள். TRF அறங்காவலர் பரத் பாண்டியா துணைத் தலைவராகவும், PRIDs கமல் சங்வி மற்றும் A S வெங்கடேஷ் தலைமை ஆலோச கர்களாக இருப்பார்கள். PDGs மாதவ் சந்திரன் (இணை தலைவர்), ஜோஸ் சாக்கோ (செயலாளர்) மற்றும் பி.எம்.சிவராஜ் (பொருளாளர்) ஆகியோரும் இதில் அடங்குவர்.

இது நமது மாநாடு. ஒவ்வொரு மாநாடும் கடந்த காலத்தைவிட சிறப்பானதாக இருக்க வேண்டும். இந்தியாவில் ஒரு சிறந்த ரோட்டரியை கட்டமைக்க நமது நட்புறவு உதவும் என்பதை நிரூபிக்க கொச்சி மாநாட்டுக்கு ஒவ்வொருவரும் ஆதரவு தர வேண்டும் என்றார் RID சுப்பிரமணியன். RID ராய் சௌத்ரிக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்த அவர், நானும் வித்யாவும் உங்களுடன் சேர்ந்து நடப்போம். ஆதரவளிப்போம் என்றார்.


பெங்களூர் மாநாட்டில் இதுவரை 700-க்கும் மேலான பிரதிநிதிகள் கொச்சி மண்டலக் கழக கூட்டத்தில் பங்கேற்க பதிவு செய்துள்ளனர்.



*கொச்சி இன்ஸ்டிடியூட் அமைப்பாளர் RI இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி.*

புகைப்படங்கள்: V விஸ்வநாதன்

ADVT.


samarpan
BACK TO LIFE
Healing Minds
Changing Lives
“Set up by The Abheraj Baldota Foundation in 2022, Samarpan is India's International class Substance Abuse and Mental Health residential program. Led by Internationally recognised clinicians, and staffed with dedicated professionals, the luxury facility set in the rolling hills of Mulshi, Pune caters for 23 clients at any one time. Our evidence based program offers clients the foundation to rebuild their lives from Substance Abuse, Gambling and other mental health disorders in an empathic and dignified manner”
Licensed by:
MSMHA
Evidence Based Program • Gorski-CENAPS accredited • Individualised Treatment • Ethical Practices • 100% Confidentiality • Family Program • Qualified & Experienced Staff
World Class Facilities
For more information contact:
www.samarpanrecovery.com | admissions@samarpan.in | +91 81809 19090
Hosted By: Samarpan Rehab, 441 Song of Life Road, Mulshi, Maharashtra

# காஸாவில் ரோட்டரியின் உதவி இல்லாதது விளக்கப்பட்டது

ரஷீதா பகத்

பெங்களூர் மண்டல மாநாட்டில் PRIP K R ரவீந்திரனால் நடத்தப்பட்ட Frankly Speaking என்ற அமர்வில் பல கேள்விகள் எழுந்தன. RI தலைவர் கார்டன் மெக்கினலி, RIPN மரியோ டி காமர்கோ, அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்ட் மற்றும் RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் போன்ற மூத்த RI தலைவர்களுக்கு பேச வாய்ப்பு வழங்கப்பட்டது.

அமர்வில் ரவீந்திரன், RI தலைவர் மெக்கினலியிடம், ரோட்டரி “உக்ரைனுக்கு நிதியுதவி வழங்குவதில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தபோது, லிபியா அல்லது இராக் மீது படையெடுத்தபோது அல்லது சமீபத்தில் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலின் போது ஏன் இந்த அளவு அக்கறை காட்டப்படவில்லை” என்று கேட்டார்.

உக்ரைனில் ரோட்டரி வலுவாக இருந்ததாலும் அங்கு அறக்கட்டளை பங்களிப்பாளர்கள் இருந்ததாலும் TRF மானியங் களைக் கேட்டுப்பெற முடிந்தது. ரோட்டரியும் விரைவாக உதவ முடிந்தது என்று ரோட்டரி தலைவர் மெக்கினலி தெளிவு படுத்தினார். “துரதிர்ஷ்டவசமாக, லிபியா அல்லது சிரியாவில் ரோட்டரி உள்கட்டமைப்பு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு மோதலுக்கு வரும்போது, அக்டோபர் 6-ம் தேதி தற்போதைய மோதலுக்கு காரணியாக ஒரு பயங்கரமான சம்பவம் நடந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அக்டோபர் 13 அன்று அறங்காவலர்கள் மற்றும் இயக்குநர்கள் குழுவின் 34



**இடமிருந்து:** TRF *அறங்காவலர் லாரி லுன்ஸ்ஃபோர்ட்,* RIPN *மரியோ டி காமர்கோ,* PRIP K R *ரவீந்திரன் மற்றும்* RI *தலைவர் கோர்டன் மெக்கினலி.*

பேர் கொண்ட கூட்டம் அக்டோபர் 6 மற்றும் அதைத் தொடர்ந்த 7 நாட்களில் என்ன நடந்தது என்று ஆய்வு செய்து ரோட்டரி தன் உதவி கரங்களை அளிக்க தயாரானது.

அதற்கு பல்வேறு எதிர்வினைகள் வந்தன. ஆனாலும், முக்கியமானது என்னவென்றால் ரோட்டரி இந்த மோசமாக பாதிக்கப்பட்டோருக்கு உதவ பல்வேறு வழிகளை ஆராய்ந்து வருவதுதான். மேலும் உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்களின் நோக்கமே வெகு விரைவாக நம் சமுதாயங்களுக்கு உதவ முன்வருவதே ஆகும், என்று RI தலைவர் கூறினார்.

அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்ட் கூறுகையில் இன்ஸ்டிடியூட் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பு, அவரும் TRF துணைத் தலைவர் பரத் பாண்டியாவும் TRF வாரிய கூட்டத்தில் கலந்து கொண்டனர். அதில் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் TRF எவ்வாறு சில மனிதாபிமான உதவிகளை வழங்க முடியும் என்பது விவாதிக்கப்பட்டது என்றார்.

## இந்தியாவில் தேர்தல் புகார்கள்

PRIP K R *ரவீந்திரனால் நடத்தப்பட்ட* Frankly Speaking *அமர்வில், தேர்தல் புகார்கள், நீதிமன்றத்திற்குச் செல்வது போன்றவற்றில் அவரும்* RIPE *உர்சிக்கும் இந்திய ரோட்டேரியன் களுக்கு எழுதிய "வலுவான கடிதம்" குறித்து கருத்து தெரிவிக்குமாறு* RI *தலைவர் கோர்டன் மெக்கினலி கேட்டுக் கொள்ளப்பட்டார். "எனக்கு ஒரு யோசனை உள்ளது, ஏன் லயன்ஸ் மற்றும் பிற அமைப்புகளைப் போல தேர்தல் பிரச்சாரம் மற்றும் பிரச்சாரங் களை நாம் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டார் ரவீந்திரன்.*

*மெக்கினலி பதிலளிக்கையில், "ரோட்டரி அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது. நம்முடைய அமைப்பு நெறிமுறைகள் கொண்ட அமைப்பு. அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும். நாங்கள் இந்தியாவை எங்கள் இலக்காக தேர்ந்தெடுக்க வில்லை. ஆனால், நாம் நேர்மையாக இருக்க வேண்டும், இது இந்த நாட்டிலும் நடக்கிறது என்று சொல்ல வேண்டும். ஹீத்தரும் நானும் இந்தியாவில் உள்ள மிக அற்புதமான ரோட்டேரியன்களால் இந்தியாவில் செய்யப்படும் மிக அற்புதமான திட்டங்களைப் பார்த்திருக்கிறோம், சில தலைமைகளின் நடத்தை மற்றும் செயல் முறைகளினால் இந்தியாவில் ரோட்டரி மீது ஒரு சந்தேகம் என்னும் கருமேகங்கள் சூழ்ந்திருப்பதை நாங்கள் அறிவோம்.*

*அவர், ரோட்டரியின் வருங்காலத் தலைமையுடன் சேர்ந்து, "அந்த நடத்தையை அடையாளம் கண்டு அதை அழிக்க உறுதிபூண்டுள்ளார். நாங்கள் இவ்வளவு பெரிய வேலையைச் செய்வதால் நீங்கள் அத்தகைய நடத்தையை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் கூற முடியாது. ரோட்டரி அதற்கும் மேலானது, அதை விட சிறந்தது, அநேகமாக இந்த அறையில் உள்ள அனைவரும் அதைவிட மேலானவர்கள் மற்றும் சிறந்தவர்கள். இந்த நடைமுறைகள் மற்றும் சில சமயங்களில் பயமுறுத்தல்கள் ஆகியவை நியாயமானவை அல்ல. நெறிமுறை தரங்களைக் கொண்ட ஒரு நிறுவனத்திற்கு ரோட்டரியை ஒரு சிறந்த உதாரணமாகக் காட்ட வேண்டும் என்றார்.*

### RI தலைவர் கருப்பொருளை (Presidential theme) கைவிடுதல்

2025–26 முதல் ரோட்டரி தலைவரின் கருப்பொருளை கைவிடுவது என்ற முடிவை வாரியம் எடுத்துள்ளது. இது குறித்து ரவீந்திரன் RI தலைவர் மெக்கினலியிடம் கேட்ட போது, அவர், நிலைத்தன்மை மற்றும் தொடர்ச்சி ஆகிய இரண்டின் நலன்களுக்காக, 2025 முதல், உள்வரும் தலைவர் "முன்னோக்கிச் செல்லும் நிலையானதாக இருக்கும் ஒரு செய்தியை உருவாக்க Strategic Planning மற்றும் Communications குழுவுடன் இணைந்து பணி யாற்றுவார்." ஒரு குறிப்பிட்ட நபருக்கு சொந்தமான ஒரு குறிப்பிட்ட ஆண்டிலிருந்து விலகிச் செல்லும் முயற்சி. எடுத்துக்காட்டாக, இது 'எனது ஆண்டு' அல்ல; இந்த ஆண்டில், நான் ரோட்டரியை முன்னோக்கி நகர்த்துகிறேன், அடுத்த ஆண்டு ஸ்டீபனி உர்ச்சிக் அதையே செய்து மரியோவிடம் ஒப்படைப்பார். எதிர்காலத்தில், தலைவர் பதவி வேட்பாளர் தொடர்ச்சியில் கவனம் செலுத்தும் வருடாந்திர செய்தியை உருவாக்க குழுவுடன் மிக நெருக்கமாக பணியாற்றுவார், என்றார்.

### பன்முகத்தன்மை, சமபங்கு, உள்ளடக்கம்

ரவீந்திரன் அடுத்ததாக DEI பற்றி ஒரு வினாவை எழுப்பினார் மற்றும் சாராம்சத்தில் "இனம், பாலியல் நோக்குநிலை போன்றவற்றை உள்ளடக்கியிருந்தாலும், நாம் பெண்களை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளோம்' மற்றவர்களையும் சேர்க்க என்ன செய்யப் போகிறோம்? ஓரின சேர்க்கையாளரான (gay) ஒருவர் RI தலைவராக இருந்தால் என்ன செய்யப் போகிறோம்? என்றார்.

RIPN மரியோ டி கேமர்கோவின் பதில்: "உலகின் மிகப்பெரிய நிறுவனமான ஆப்பிள், 3 டிரில்லியன் டாலர் மதிப்புடையது மற்றும் அதன் தலைமை நிர்வாக அதிகாரி டிம் குக் ஓரினச்சேர்க் கையாளர். அவர் ஓரினச்சேர்க்கை யாளராக இருந்ததால் ஆப்பிள் தலைமை நிர்வாக அதிகாரியாக தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், அவர் திறமையானவர். ஆப்பிள் பங்குதாரர்களுக்கு குக்கின் தொழில்முறை திறன் மற்றும் திறமை முக்கியமானது. எனவே எப்போதாவது ஓரினச்சேர்க்கையாளர்களாக இருக்கும் ஒரு RI தலைவர் இருந்தால், அவரிடம் அல்லது அவளிடம் நான் கேட்கும் கேள்வி: உறுப்பினர்களை எப்படி அதிகரிக்கப் போகிறீர்கள், TRFக்கு எவ்வாறு நிதி திரட்டப் போகிறீர்கள் உள்ளிட்ட கேள்விகளைத்தான்.

RI-யின் வரலாற்றில் முதன் முறையாக, அவரது மனைவியும்



**இடமிருந்து:** TRF *அறங்காவலர் லுன்ஸ்ஃபோர்ட்,* RIPN *டி காமர்கோ,* PRIP *ரவீந்திரன்,* RI *தலைவர் மெக்கினலி மற்றும்* RI *இயக்குனர் ராஜு சுப்ரமணியன்.*

அவரும் தங்களுக்கு ஒரு பெண் உதவியாளரை வைத்திருக்க முடிவு செய்திருப்பதாக அவர் கூறினார். RI தலைவருக்கு உதவியாளராக இருக்கும் முதல் பெண் இவர்தான். நான் அவளைத் தேர்ந்தெடுத்தது அவள் பெண் என்பதற்காக அல்ல, ஆனால் அந்தப் பதவிக்கு அவர்தான் சிறந்தவர் என்று நாங்கள் முடிவு செய்தோம். திறமையான பெண்களுக்கு எந்த ஒதுக்கீடுகளும் தேவையில்லை; ரோட்டரி மெதுவாக சமத்துவத்தை நோக்கிச் செல்கிறது, உங்களிடம் திறமை, புத்திசாலித்தனம் மற்றும் போட்டியிடும் மனப்பான்மை இருந்தால், நாங்கள் உங்களைக் கண்டுபிடிப்போம். பெண், ஆண், பெரியவர், இளையவர், கருப்பு, வெள்ளை, இந்து அல்லது கிறிஸ்தவர். நீங்கள் அமெரிக்கா, பிரேசில், ஸ்காட்லாந்தில் இருந்து வரலாம், நாங்கள் உங்களைப் போன்ற ஒருவரைத்தான் தேடப்போகிறோம்.

RID சுப்பிரமணியனிடம் கேட்கப்பட்ட அடுத்த கேள்வி என்னவென்றால், பல இடங்களில் 200,000 ரோட்ராக்டர்கள் உட்பட 1.4 மில்லியனாக ரோட்டரி உறுப்பினர்கள் மேற்கோள் காட்டப்பட்டனர். அந்த எண்களைச் சேர்த்து, ரோட்டரி உறுப்பினர் 1.4 மில்லியன் எனக் குறிப்பிடுவது நியாயமானதா? அந்த எண்கள் ஏற்கனவே குறைந்து விட்டன; உறுப்பினர் கட்டணத்தை செலுத்துமாறு அவர்களிடம் கேட்கப்பட்ட பிறகு, ரோட்ராக்ட் எண்கள் 2,09,000-லிருந்து 1,30,000-க் குறைந்துவிட்டன என்றார்.

ரோட்டராக்டை ரோட்டரியின் ஒரு அங்கமாக மாற்றுவதற்கான COL முடிவுக்குப் பிறகு, "ரோட்டராக்ட் உறுப்பினர்களை ரோட்டரி உறுப்பினராகச் சேர்ப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது, ஆனால், இரண்டையும் ஒன்றாக இணைக்க முடியாது என்று தான் நம்புவதாக சுப்பிரமணியன் கூறினார். இது ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் உறுப்பினர்களின் உண்மையான நிலையை குறிக்கும் என்றார்.

கல்வி நிறுவன அடிப்படையிலான ரோட்ராக்டர்கள் தங்கள் கல்வி முடிந்தவுடன் ரோட்டராக்ட்டிலிருந்து விலகிச் செல்கின்றனர். அதேசமயம் சமூகம் சார்ந்த ரோட்ராக்டர்கள் தொடர்ந்து இருக்க முனைவர். நிறுவன அடிப்படையிலான ரோட்ராக்டர்கள் பொதுவாக சமூக அடிப்படையிலான கிளப்புகளில் இணைவதில்லை. இது நமக்கு இழப்பு. இதற்கு தீர்வுகாண வேண்டும் என்றார்.

நாம் உறுப்பினர் தொகையை வசூலிக்கத் தொடங்கிய பிறகு "இழந்த" ரோட்ராக்டர்களின் எண்ணிக்கையின் துல்லியம் குறித்து மெக்கினலி ஒரு கேள்விக்குறியை எழுப்பினார். கட்டணம் வசூலிக்கப் படாமல், ரோட்ராக்டர்களின் சரியான எண்ணிக்கையைக் கண்டறிய எந்த வழியும் இல்லை என்பதால், இந்த எண்ணிக்கை ஒருபோதும் துல்லியமாக இருக்காது என்று சந்தேகிப்பதாக அவர் கூறினார்.

### பால் மற்றும் ஜீன் ஹாரிஸ் ஹோம்

ரவீந்திரன், அதன் உறுப்பினர்களுக்கு புள்ளிகளைப் பெறுவதற்காக, பால் ஹாரிஸ் இல்லத்திற்கு நன்கொடை அளிக்க விரும்பிய தைவான் கிளப்பின் கோரிக்கையை

அறங்காவலர் குழு நிராகரித்தது பற்றி அறங்காவலர் லுன்ஸ்ஃபோர்டிடம் கேள்வி எழுப்பினார்.

அனைத்து ரோட்டரியன்களும் ரோட்டரி நிறுவனர் மீது மிகுந்த மரியாதை கொண்டுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை என்று லன்ஸ்ஃபோர்ட் பதிலளித்தார். மேலும் "1947-ம் ஆண்டிலிருந்து பால் மற்றும் ஜீன் ஹாரிஸ் அங்கு வசித்து வருகின்றனர். அவர்களின் வீட்டைப் பராமரிக்க ரோட்டரி உலகம் முழுவதும் கூட்டு முயற்சி களை மதிப்பதாக கூறினார். இந்த நோக்கத்திற்காக பால் மற்றும் ஜீன் ஹாரிஸ் வீட்டு அறக்கட்டளை நிறுவப்பட்டது.

ஆனால், அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் இத்தகைய அறக்கட்டளைகளுக்கு வரும் நன்கொடைகளுக்கு சிக்கலான மற்றும் வேறுபட்ட வரி முறைகள் உள்ளன. "எனவே அறங்காவலர்கள் அத்தகைய முயற்சி யை (பால் ஹாரிஸ் இல்லத்திற்கு) ஆதரிப்பதில் ஆர்வமாக இருந்தாலும், மற்ற அடித்தளங்களுக்கு பணம் கொடுப்பதற்கான ஒரு வழியாக TRF-ஐ அவர்கள் உண்மையில் பார்க்கவில்லை." இந்த விஷயத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று சிலர் வாதிடுகின்றனர், "ஆனால் தற்போது வாரியம் அந்த விதிவிலக்கைச் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்துள்ளது, ஏனெனில் இது ஒரு முன்னுதாரணத்தை உருவாக்கும். ஏனெனில் உள்ளூர், கிளப், மாவட்டம் மற்றும் பல ரோட்டரி சார்ந்த தொண்டு நிறுவனங்கள் உள்ளன. எனவே அறங்காவலர்கள் TRF- ஐ "தனது சொந்த பங்களிப்புகளைப் பெறுவதற்கும், TRF திட்டங்களில் செலவழிப்பதற்கும் அமைக்கப் பட்ட அமைப்பாக" தொடர்ந்து வைத்திருக்க முடிவு செய்திருந்தனர்.

இதேபோன்ற கேள்வி இப்போது இந்தியாவிலிருந்தும் வந்துள்ளது. மேலும் இந்த விஷயம் அறங்காவலர்களின் அடுத்த கூட்டத்தில் மீண்டும் விவாதத்துக்கு வரும் என்று அவர் கூறினார்.■

# RID 3212ல், இளம்பிள்ளைவாதத்தை ஒழிப்பதற்கான கார்ப் பேரணி

ரோட்டரி செய்திக்குழு

உலக இளம்பிள்ளைவாத நாளன்று (அக்டோபர் 24), இளம் பிள்ளை வாதத்துக்கான முதல் வெற்றிகரமான தடுப்பு மருந்தை உருவாக்கிய Dr ஜோனஸ் சல்க் அவர்களுடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கென, RCகள் பேர்ல் சிட்டி தூத்துக்குடி, திருநெல்வேலி அவிரா, RID 3212 இணைந்து, இளம்பிள்ளைவாதத்தை ஒழிப்பதற்கான கார்ப் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்ற இந்தக் கார்ப்பேரணியை "End Polio Now" அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் PDG சின்னதுரை அப்துல்லா கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார். இதில் இளம்பிள்ளை வாதத்திலிருந்து பிழைத்த 25 பேரும், 25 ரோட்டரியன்களும் 15 கார்கள், ஒரு வேனில் பங்கேற்றார்கள்.

இந்தப் பேரணியைத் திருநெல்வேலியில் DG R முத்தையா பிள்ளை வரவேற்றார். இங்கு நடைபெற்ற சிறு ஊர்வலம் ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ் சிலைக்கு மாலை அணிவிப்பதுடன் நிறைவடைந்தது.

RC பேர்ல் சிட்டி தலைவர் முகம்மது இப்ராகிம், செயலாளர் விக்னேஷ், RC திருநெல்வேலி அவிரா தலைவர் சையத் அலி ஃபாத்திமா, செயலாளர் ஆயிஷா பர்வீன் இந்தக் கார்ப் பேரணிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.■




*DG முத்தையா பிள்ளை (இடது), PDG சின்னதுரை அப்துல்லா (நடுவில்), RC பேர்ல் சிட்டி தூத்துக்குடி தலைவர் முகமது இப்ராகிம் மற்றும் RC திருநெல்வேலி அவிரா தலைவர் சையத் அலி பாத்திமா, ரோட்டேரியன்கள் மற்றும் போலியோவால் பாதிக்கப்பட்டவர்களுடன்.*

# தொடர்ச்சி மற்றும் குழுப்பணி - காலத்தின் தேவை

ஜெய்ஸ்ரீ

நான் ‘என் வருடம்’ என்னும் வெளிப்பாட்டின் ரசிகன் அல்ல. இது ‘உங்கள் ஆண்டு’ அல்ல. இது ரோட்டரியின் ஆண்டுகள். நாம் அனைவரும் 12 மாதங்கள் அலுவலகத்தின் பாதுகாவலர்கள். நிறுவனத்தை தொடர்ந்து மேம் படுத்தும் வகையில் நம் பணியை ரோட்டேரியன்களாகிய நாம் செய்வோம், என்று பெங்களூரு மண்டல மாநாட்டில் DGE-க்கள் மற்றும் DGN-களுக்கு உரையாற்றிய RI தலைவர் கார்டன் மெக்கினலி வலியுறுத்தினார்.

தொடர்ச்சியின் உணர்வை வலியுறுத்தி, ரோட்டரியின் நீடித்த வெற்றிக்கு பங்களிக்கும் வகையில், ஒரு காலத்தில் தொடங்கப்படும் ஒவ்வொரு முயற்சியும் திட்டமும் தனிப்பட்ட பணிக்காலத்தை தாண்டியதாக இருக்க வேண்டும் என்பதை அவர் எடுத்துரைத்தார்.

RI தலைவர் மெக்கினலியும் ஹீத்தரும் ஏப்ரல் மாதம் இந்தியாவில் ஒன்பது நகரங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். இந்தியா ரோட்டரியின் அற்புதமான பகுதியாகும். நீங்கள் செய்யும் அனைத்து அற்புதமான செயல்களையும் உலகின் பிற பகுதியில் உள்ளவர்களும் பார்த்துக் கொண்டாட வேண்டும். ஆனால், அறையில் யானை இருப்பது உங்களுக்குத் தெரியும், எனத் தெரிவித்த அவர், தேர்தல் பிரச்சினைகள் மற்றும் மாவட்டங் களிலிருந்து RI வாரியத்திற்குச் செய்யப்படும் புகார்கள் குறித்துக் குறிப்பிட்டார். தேர்தல்களின் போது நடந்து கொள்ளும் முறை, நடக்கும் மிரட்டல்கள், பிரச்சாரம் – இவை அனைத்தும் ரோட்டரியின் கிரீடத்தில் இந்தியா இருக்க வேண்டிய அற்புதமான மினுமினுக்கும் கற்களை களங்கப்படுத்துகிறது. கோஹினூர் வைரத்தை மீட்டெடுக்கும் சக்தி என்னிடம் இல்லாமல் இருக்கலாம், ஆனால், ரோட்டரியின் கிரீடத்தில் உள்ள விலைமதிப்பற்ற கற்கள் மெருகூட்டப்பட்டு பிரகாசமாக ஜொலிப்பதைப் பார்க்க விரும்புகிறேன்.

அவர் ரோட்டரி மற்றும் ரக்பி இடையே ஒரு இணை கோட்டை வரைந்தார். கூட்டு உழைப்பின் மதிப்பை வலியுறுத்தினார். ஒவ்வொரு வீரரும் ரக்பி அணியின் வெற்றிக்கு இன்றியமையாதது போல, அனைத்து



ஜெய்ஸ்ரீ

*இடமிருந்து (பின் வரிசை) TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா, PRID A S வெங்கடேஷ், இன்ஸ்டிடியூட் ஒருங்கிணைப்பாளர் மற்றும் RID ராஜு சுப்பிரமணியன், இணை ஒருங்கிணைப்பாளர் RID அனிருதா ராய்சௌத்ரி, PRIP K R ரவீந்திரன் மற்றும் GETS தலைவர் PDG தீபக் புரோஹித். (முன் வரிசையில்) மாதவி பாண்டியா, ஷிப்ரா ராய்சௌத்ரி, வித்யா சுப்ரமணியன், வானதி ரவீந்திரன், வினிதா வெங்கடேஷ் மற்றும் வீணா புரோஹித் GETS தொடக்க விழாவில்.*

DG-களின் கூட்டுத் திறமைகளும் ரோட்டரியை முன்னேற்றுவதற்கு இன்றியமையாதது. தனித்தனியாகவோ அல்லது ஒருவருக்கொருவர் எதிராகவோ இல்லாமல் ஒரு குழுவாக வேலை செய்வோம். ஒன்றாக பந்தயத்தை நடத்துவோம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இன்ஸ்டிடியூட் அமைப்பாளரும் RI இயக்குனருமான ராஜு சுப்ரமணியன், தேர்தல் பிரச்சார தவறான நடத்தை பற்றிய கவலைகளை நிவர்த்தி செய்து, RI தலைவரின் உணர்வு களை எதிரொலித்தார். உங்களில் பெரும்பாலானோர் தேர்தல் பிரச்சாரத்தில் தவறான முறையில் ஈடுபட்டு உறுப்பினர் சேர்க்கை, சேவைத் திட்டங்கள் மற்றும் பொது நன்மதிப்பை புறக்கணிக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் மாசற்ற திறன் கொண்டவர்கள். உங்கள் திறமையை சரியான முறையில் பயன்படுத்தவும், கிளப்புகளை வளர்க்கவும், மாவட்டங்களில் வேறுபாடுகளை உருவாக்க வேண்டாம். நாம் செய்யும் சேவையின் நோக்கத்தையும், நாம் தொடக்கூடிய சமூகங்களையும், நம்மால் மாற்றக்கூடிய வாழ்க்கை யையும் விரிவுபடுத்தும் திறன் கொண்ட ஒரு ஆரோக்கியமான அமைப்பாக மாவட்டம் மாறும் வகையில் அனைவரையும் ஒன்றிணைக்கவும். அதுதான் உலகில் நம்பிக்கையை உருவாக்குகிறது.

இந்தியாவில் ரோட்டரியின் பல்வேறு சாதனைகளை எடுத்துரைத்த அவர், நாம் செய்வது போல் யாரும் புதுமையான சேவைத் திட்டங்களைச் செய்வதில்லை. அறக்கட்டளை வழங்குவதில் நாம் 2-வது இடத்தில் இருக்கிறோம், உறுப்பினர் எண்ணிக்கையில் நம்பர் 1-ஆக இருக்கிறோம். எனவே, ஒரு ஆளுநராக நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்துங்கள், அமைப்பின் பெருமையை உயர்த்துங்கள்.

நீதிமன்றங்களுக்கு செல்வதை நிறுத்துங்கள். உங்கள் பிரச்னைகளை உங்கள் மாவட்டங்களிலேயே தீர்த்துக் கொள்ளுங்கள் என்றார். மண்டலத் தேர்தல்களில் ஏதேனும் தேர்தல் பிரச்சாரம் நடந்தால், அது PDG அல்லது DG-யாக இருந்தாலும், நான் அதை வலுவாக எடுத்துக் கொள்வேன்.



*RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் RID சுப்பிரமணியன்.*

இதை சரி செய்ய முடிந்தால், இந்தியா உண்மையிலேயே ரோட்டரி யின் மகுடத்தில் ஒரு மாணிக்கமாக இருக்கும். துரதிர்ஷ்ட வசமாக, ஆங்கிலேயர்கள் கோஹினூரை எடுத்துச் சென்றனர், ஆனால் இங்கே நாம் ரோட்டரியில் வைத்திருக்கும் கோஹினூரை அழிக்கிறோம்.

வெளிப்படையான நிதி பரிவர்த்தனைகளின் அவசியத்தை வலியுறுத்திய அவர், அங்குள்ள ஒரு கரும்புள்ளி நம் அறக்கட்டளைக்கு வரும் பணப் புழக்கத்தைத் தடுக்கும். நன்கொடையாளரை நேரடியாக பயனாளியுடன் இணைக்கவும், ஒரு இணையதளம் மூலம் அல்ல என்றார்.

சுப்பிரமணியன் பேசுகையில், பொது மக்களிடம் ரோட்டரி மீதான நன்மதிப்பை உயர்த்த ரோட்டரி வீல் சின்னத்தை முன்னிறுத்துவதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார். DG களிடம், அடுத்த ஆறு மாதங்களில் அறக்கட்டளைக்கு நாம் உறுதியளித்த 40 மில்லியன் டாலர்கள எட்ட உதவுமாறு கோரினார். விருதுகளுக்காக உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டாம். நீங்கள் சேர்க்கும் உறுப்பினர்கள் ரோட்டரியில் வாழ்நாள் முழுவதும் இருக்க வேண்டும், அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் வெளியேறக்கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

PRIP K R ரவீந்திரன் தலைமைத் துவத்தில் நெறிமுறைகள் பற்றிப் பேசுகையில் - தேர்தல்கள், பொறுப் பாளர் அல்லது பொறுப்புக்கூறல் மற்றும் நியமனங்கள் ஆகிய மூன்று விஷயங்கள் குறிப்பிட்டார். DGE-க்கள் தங்கள் மாவட்டங்களில் எவருக்காவது யாரேனும் பிரசாரம் செய்வது தெரியவந்தால் அவர்களின் பெயர் வாக்குச்சீட்டில் இருந்து நீக்கப்படும் என்று அறிவிக்குமாறு வலியுறுத்தினார்.

RI-ல் அமைக்கப்பட்ட, PRIP மார்க் மலோனி தலைவராக இருக்கும் முதல் ஸ்டீவார்ட்ஷிப் குழுவின் உறுப்பினரான ரவீந்திரன் மற்றொரு நபருக்கு சொந்தமான ஒரு நர்சரிக்கு சென்றதை நினைவு கூர்ந்தார். “மேட்சிங் கராண்ட் திட்டத்தின் கீழ் பணத்தைக் கோருவதற்காக சங்கம், அதை அறக் கட்டளைக்கு அவர்களின் சமூகத் திட்டமாகக் காட்டியது.” கற்பனையான திட்டங்களின் மற்ற இரண்டு நிகழ்வுகளை அவர் மேற் கோள் காட்டினார் - ஒன்று “நீதிபதி ஒருவர் தனது புத்தகங்களை நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்ல ஒரு ஆம்புலன்ஸ் பயன்படுத்தியதையும், மற்றொரு ஆம்புலன்ஸ் சுற்றுலா வாகனமாக பயன்படுத்தியதையும் உதாரணமாக கூறினார். மற்றொரு உதாரணம், ஒரு ரோட்டரி கிளப் TRF-லிருந்து மானியங்களைப் பெறுவதற்காக பல்வேறு திட்டங்

களாகப் பல சந்தர்ப்பங்களில் பதிவேற்றிய குழாய் கிணற்றின் படத்தை காட்டியது. சமூகத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, இன்றியமையாதது என்று அவர் வாதிட்டார்.

சில சமயங்களில் RI வாரியத்தால் மக்கள் தண்டிக்கப்படும்போது, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வேறு யாரோ சென்று அதைத் திரும்பப் பெறுவதற்காக ஒரு கடிதத்தை வழங்குவதை நான் காண்கிறேன். RI தலைவருக்கு எனது வேண்டுகோள் என்னவென்றால், அவரை முதலில் தண்டித்த வாரியத்தின் தலைவரிடம் திரும்பிச் செல்லாமல் உங்கள் வாரியம் இவர்களை மன்னிக்க வேண்டாம். ஏனென்றால் உங்களுக்கு உண்மைகள் தெரியாது, என்று அவர் கூறினார்.

நியமனங்களைப் பற்றிப் பேசு கையில், "நீங்கள் நல்லவர்களை நியமித்தால், அவர்கள் வேலையைச் செய்வதால், நீங்கள் நன்மதிப்பைப் பெறுவீர்கள், அது மாவட்டத் தலைவருக்கு வெற்றி-வெற்றி" என்றார். நிறுவனத்தின் இணை ஒருங்கிணைப்பாளரான RI இயக்குனர் அனிருத்த ராய்சௌத்ரி கூறுகையில், "கிளப்புகளை வலுப்படுத்துங்கள் மற்றும் உங்கள் திட்டங்களில் ரோட்டேரியன்களை ஈடுபடுத்துங்கள். ஒவ்வொரு ரோட்டேரியனின் ஆர்வமும் நிலைத்திருக்கும் போது மட்டுமே உறுப்பினர் தக்கவைப்பு நிகழும் என்றார்.

TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்டியா, மாவட்டத் தலைவர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். ரோட்டரியில் 'நான்' இல்லை, அது எப்போதும் 'நாம்'தான். அனைவரையும் மரியாதையுடன் நடத்துங்கள். நீங்கள் சமமானவர்களில் ஒருவர். உங்கள் அமைப்பின் நற்பெயருக்கு மிகவும் முக்கியமான ஒருமைப்பாட்டுடன் ஒருபோதும் சமரசம் செய்யாதீர்கள் என்றார்.

சவால்களை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் அணுகுமாறு தலைவர்களை பாண்டியா வலியுறுத்தினார். பொதுவான பயிற்சியாளர் PRID A S வெங்கடேஷ் பேசுகையில், ஆளுநராக இருப்பது விருதுகளைப் பெறுவதற்காக அல்ல. அந்த விருதுகள் உங்களைத் தவிர மற்ற அனைவருக்கும் விரைவில் மறந்துவிடும். ஆனால் உங்கள் பிராந்தியத்தில் உங்கள் தலைமையின் மூலம் நீங்கள் உருவாக்கிய தாக்கத்தை மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் உங்கள் வசம் உள்ள அமைப்பு, மக்கள் தொகை, முன்னுரிமைகள், தேவைகள் மற்றும் வளங்கள் வித்தியாசமாக இருப்பதால் விருதுகள் உண்மையில் மாவட்டங்களை ஒப்பிடும் நியாயமற்ற வழியாகும். எனவே உங்களால் செய்ய முடியும் என்று நீங்கள் நினைப்பதை விட சிறப்பாக செய்ய முயற்சி செய்யுங்கள் என்றார்.

PDG தீபக் புரோஹித் GETS தலைவராகவும், PDG குர்ஜித் செகோன் GNTS-ன் தலைவராகவும் இருந்தனர். மாவட்ட பயிற்சியாளர்கள் பயிற்சி கருத்தரங்கு, மாவட்ட கற்றல் ஒருங் கிணைப்பாளர்கள் கருத்தரங்கு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. PDG S நாகேந்திரா தலைமை வகித்தார்.■

## RC மன்சா ராயல் நடத்திய புற்றுநோய் கண்டறிதல் முகாம்

### ரோட்டரி செய்திகள் குழு



*புற்றுநோய் பரிசோதனை வேன் முன் ரோட்டேரியன்கள்.*

2017–18ல், RC ஃபரீத்கோட், RID 3090 மற்றும் RC தாய்பெய் துங்டெஹ் தைவான், RID 3522 உடனான பன்னாட்டு நல்கைக் கூட்டுப்பணி ஒன்றின்கீழ், RC தில்லி ராஜ்தானி, RID 3011 உடன் இணைந்து, ஃபரீத்கோட்டில் உள்ள பாபா ஃபரீத் நல அறிவியல் பல்கலைக்கழகத்துக்கு $200,000 மதிப்புள்ள ரோட்டரி குன்வாதி பன்சால் நினைவு புற்றுநோய் கண்டறிதல் வேன் வழங்கப்பட்டது. அப்போது இந்தத் திட்டத்தை வழிநடத்தியவர், மறைந்த PDG வினோத் பன்சால்.

இந்த வேன் RID 3090 ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் கிராமப் புறங்களில் முன்கூட்டிய கண்டறிதல், விழிப்புணர்வு முகாம்களைச் சுறு சுறுப்பாக நடத்திவந்தது. சமீபத்தில், RC மன்சா ராயல், RID 3090, பாபா ஃபரீத் பல்கலைக்கழக மருத்துவர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு ஒன்றின் உதவியுடன் இந்த வேனைப் பரிசோதனைகளுக்குப் பயன்படுத்தியது. மன்சா அருகிலுள்ள 100க்கும் மேற்பட்டவர்களுக்குப் பரிசோதனைகள் செய்யப் பட்டன. சுமார் 55 பேர் கூடுதல் கண்டறிதலுக்கு நகர மருத்துவ மனைகளுக்கு அனுப்பப் பட்டார்கள்.■

# BECOME A DOCTOR IN USA

## XAVIER UNIVERSITY ARUBA'S 6 YEAR PROGRAMME TO TRANSFORM YOUR AMERICAN DREAM INTO A REALITY



### DOCTOR OF MEDICINE

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherland

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

### DOCTOR OF VETERINARY MEDICINE

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 3 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island- Netherland

**Final year**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**Limited Seats**

**The session starts in Jan / May / Sept 2024**

To apply, Visit: application.xusom.com

Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712

email: infoindia@xusom.com

**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

ADVT.

# TRF நன்கொடையாளர்கள் இந்தியாவை பெருமைப்படுத்துகிறார்கள்

ரஷீதா பகத்

பெங்களூரு மண்டல மாநாட்டையொட்டி விருந்து நடைபெற்றது. ஒவ்வொரு விருந்தினருக்கும் ஒவ்வொரு மேசையிலும் தனிப்பட்ட மெனு கார்டுகளுடன் கூடிய பிரமாண்டமான மற்றும் நேர்த்தியான இரவு விருந்து அது.

RI தலைவர் கோர்டன் மெக்கினலி தலைமையில், மூத்த ரோட்டரி தலைவர்கள், RI இயக்குநர்கள் ராஜு சுப்ரமணியன் மற்றும் அனிருத்தா ராய்சௌத்ரி, TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா மற்றும் பல ரோட்டரி தலைவர்கள் மற்றும் ரோட்டரி இந்தியாவின் மூத்த தலைவர்கள், ரோட்டரி அறக்கட்டளையை பாராட்டினர்.

அதற்கு சற்று முன்னதாக, இந்தியாவைச் சேர்ந்த புதிய ஆர்ச் கிளம்ப் சொசைட்டி உறுப்பினர்கள் (பட்டியல் பெட்டிச் செய்தியாக உள்ளது), கழிவறைகள் கட்டுவது, கல்வியறிவு மற்றும் பள்ளிகள், சமூக சுகாதாரப் பாதுகாப்பு, துப்புரவுத் திட்டங்கள், மகளிர் திறன் வளர்ப்பு, மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் TRF-க்கு நன்கொடை அளிக்கத் தூண்டியது எது என்பது பற்றிய தங்கள் கதைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

புதிய உள்வரும் AKS உறுப்பினர்களின் தாராள நன்கொடைக்கான பெருந்தன்மைக்கு நன்றி தெரிவித்த ரோட்டரி தலைவர் மெக்கினலி, தமக்கும், மனைவி ஹீத்தருக்கும் இதே போன்ற நிகழ்வுகளுக்காக உலகம் முழுவதும் செல்வது எப்போதும் உற்சாகமளிக்கும் மற்றும் சிறப்பான தருணங்கள் என்று கூறினார்.

அவர்கள் தங்கள் கதைகளைப் பகிர்ந்து கொள்வதைக் கேட்டது போல், ‘‘கடந்த சில மாதங்களில் ஹீத்தரும் நானும் கடந்த சில மாதங்களாகச் சந்தித்தவர்களைப்





*RI தலைவர் கோர்டன் மெக்கினலி RI இயக்குனர் ஹென்ரிக் பார்போசா டி வாஸ்கோன்செலோஸ் அவர்களை வாழ்த்துகிறார்.*







1. (இடமிருந்து) PRIPs K R ரவீந்திரன், ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி மற்றும் RI தலைவர் கோர்டன் மெக்கினலி.

2. AKS உறுப்பினர்கள் ரஞ்சித் பிரதாப் மற்றும் உமா; சரோஜ் மற்றும் கன்ஷ்யாம் அகர்வால்; மற்றும் கௌரி மற்றும் ஸ்ரீநிவாஸ். (பின் வரிசை) மீனா மற்றும் கிருஷ்ணா சௌத்ரி; பஹ்ரி மல்ஹோத்ராவின் குடும்ப உறுப்பினர்கள் - பூஜா சூட், ப்ரீத்தி மற்றும் அஷ்வினி மல்ஹோத்ரா; மற்றும் PDG V R முத்து.

3. (இடமிருந்து) RID 3191 DG உதய்குமார் பாஸ்கரா, உமா நாகேஷ், ரவிசங்கர் டகோஜு, PDG வினய் குல்கர்னி மற்றும் இன்ஸ்டிடியூட் தலைவர் K P நாகேஷ்.







**மேலே:** RID அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ஷிப்ராவுடன் TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா.

**இடது:** PRIPs ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண் பானர்ஜி.

பற்றி நான் நினைத்தேன். அவர்கள் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்திய துறைகளில் பயனடைந்தனர். இரண்டு வாரங்களுக்கு முன்பு மெக்சிகோ சென்ற நான் அங்குள்ள பள்ளிகளின் குழந்தைகளை நினைத்துப் பார்க்கிறேன். அவர்களுக்கு ரோட்டரி நிதியுதவியால் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன. TRF மானியத்திற்கு நன்றி. உங்களைப் போன்ற நன்கொடையாளர்களுக்கும் நன்றி. ஒரு மாதத்திற்கு முன்பு மங்கோலியாவில் உள்ள இளைஞர்கள், TRF-ன் பயனாளிகள், அவர்களின் எதிர்காலத்தை மேம் படுத்த வீடுகள் வழங்கப்பட்டதைப் பற்றி நான் நினைத்துப் பார்க்கிறேன். கொரியாவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தைகளுக்கு மனநல சிகிச்சை அளிக்க உதவிய TRF-க்கு நன்றி.

### AKS **உறுப்பினர்கள்**

V R முத்து மற்றும் மலர்விழி முத்து – RID 3212.
இந்திராணி மற்றும் T R பட்நாயக் – RID 3261.
கன்ஷ்யாம் மற்றும் சரோஜ் அகர்வால் – RID 3192.
ரஞ்சித் பிரதாப் மற்றும் உமா ரஞ்சித் – RID 3232.
கௌரி ஸ்ரீனிவாஸ் மற்றும் ஸ்ரீனிவாஸ் டி – RID 3191.
கிருஷ்ணா மற்றும் மீனா சௌத்ரி – RID 3141.
மறைந்த பஹ்ரி பல்தேவ்ராஜ் மற்றும் மறைந்த கன்வால் மல்ஹோத்ரா – RID 3131. (பிரதிநிதித்துவம்: Rtn அஷ்வினி மற்றும் பிரீதி மல்ஹோத்ரா).
ரூப் மற்றும் பீனா ஜோதி RID 3292.

1.PDG N *சுப்பிரமணியன்,* TRF *துணைத் தலைவர் பாண்டியா,* RI *தலைவர் மெக்கினலி மற்றும்* PDG *அசோக் காண்டூர்;* 2.TRF *துணைத் தலைவர் பாண்டியா* RRFC*களுடன்* (இடமிருந்து) *ராகேஷ் சர்மா, தீபக் குப்தா, சாம் மொவ்வா மற்றும் மாதவ் சந்திரன்.* 3.(இடமிருந்து) PDGs *சந்தீப் அகர்வாலா, ராஜா சீனிவாசன்,* V R *முத்து, ஜெயந்தி சீனிவாசன், கமலா முத்து பழனியப்பன் மற்றும் மாலினி அகர்வாலா.* 4.(இடமிருந்து) RID *ராஜு சுப்ரமணியன்,* PRIP *சாபு, ஹீதர்,* RI *தலைவர் மெக்கினலி,* PRIP *ரவீந்திரன், வானதி மற்றும்* TRF *துணைத் தலைவர் பாண்டியா.* 5.(இடமிருந்து) TRF *துணைத் தலைவர் பாண்டியா,* PRID *பாஸ்கர்,* RID*கள் ஜெர்மி ஹர்ஸ்ட் மற்றும் சுப்ரமணியன், மற்றும்* PRID *மனோஜ் தேசாய்.* 6.*உமா, சோனல்,* PRID *கமல் சங்வி மற்றும்* PDG *நாகேஷ்.*


1


2


6


3


5


4














1.(இடமிருந்து) *வித்யா*, RID *சுப்பிரமணியன்*, TRF *துணைத் தலைவர் பாண்டியா மற்றும் மாதவி;* 2.RC *மெட்ராஸ் முன்னாள் தலைவர் ரஞ்சித் பிரதாப்*, PRID C *பாஸ்கர் மற்றும்* PRIP *ரவீந்திரன்;* 3.*ஹீதர் உடன்* PRIP *பானர்ஜி;* 4.PDG *சமீர் ஹரியானி மற்றும் அவரது மனைவி ரூபா.* 5.*உஷா சாபூவுடன்* RI *தலைவர் மெக்கினலி மற்றும் ஹீதர்;* 6.RID *சுப்ரமணியன்*, RID *வாஸ்கோன்செலோஸ், ரெனாட்டா, நட்ஜா மற்றும்* RID *ஹான்ஸ்-ஹெர்மன் காஸ்டன்.*

உங்கள் அனைவருக்கும் “நன்றி” என்று கூறுவதற்காக மட்டும் RI தலைவராக நான் இங்கு வரவில்லை. உங்கள் பெருந்தன்மைக்கு நன்றி தெரிவிக்க மெக்சிகோவின் குழந்தைகள், மங்கோலியா மக்கள் மற்றும் கொரியாவின் குழந்தைகள் சார்பாக நான் அந்த பயனாளிகள் அனைவரின் சார்பாகவும் இங்கு வந்து நிற்கிறேன்,” என்று மெக்கினலி மேலும் கூறினார்.

AKS உறுப்பினர்கள் மற்றும் TRFக்கு நன்கொடை அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக, TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா கூறினார். அவர் பேசுகையில், ரோட்டரியன்கள் ரோட்டரியின் இதயம் என்றால் TRF தான் ரோட்டரியின் முதுகெலும்பு. TRF ஆனது உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு பயனளிக்கிறது என்றார்.



PRIPகள் சாபூ, பானர்ஜி மற்றும் ரவீந்திரன்.




TRF துணைத் தலைவர் பாண்டியா, தலைவர் மெக்கினலி மற்றும் அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்ட் முன்னிலையில் AKS உறுப்பினர் முத்து தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.



PDG தீபக் குப்தா மற்றும் ரீனா உடன் PRID பாஸ்கர் மற்றும் மாலா.




PRIP சாபூ மற்றும் உஷாவுடன் ஷர்மிஷ்தா மற்றும் PRID மனோஜ் தேசாய்.



PRIDகள் அசோக் மகாஜன் மற்றும் சங்வி.



உஷா சாபூ மற்றும் நயன்தாரா மகாஜன்.

இன்ஸ்டிடியூட் அமைப்பாளரும் RI இயக்குநருமான சுப்ரமணியன் கூறியதாவது: இந்த ஆண்டு மற்றும் ஒவ்வொரு ஆண்டும் எங்கள் அறக்கட்டளையை திரும்பிப்பார்க்கவும், பிரதிபலிக்கவும், ஆதரவளிக்கவும் நாங்கள் இங்கு சந்திக்கிறோம். இதை என் ஆண்டு அல்லது உங்கள் ஆண்டு என்று கூற வேண்டாம். இந்த ஆண்டு மற்றும் ஒவ்வொரு ஆண்டும் நாம் ஒவ்வொருவரும் இந்த அறக் கட்டளைக்கு தொடர்ந்து பங்களிப்பது அவசியம். நாம் கொடுப்பதற்காகவே ரோட்டரியில் இருக்கிறோம், வாங்குவதற்காக அல்ல. ஒவ்வொரு ஆண்டும் கடந்த ஆண்டை விட சிறந்த ஆண்டாக இருக்க வேண்டும் என்பது தான் என் கருத்தாகும் என்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

ADVT.

# இதயம் கனிந்த
# புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் - 2024




ஈரோடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகம் –பெருந்துறை.

## ரோட்டரி ஆஸ்பிட்டல்

**கோவிட் இரண்டாம் அலை நேரத்தில்** அதன் அவசரத்தேவைக்கென **45 நாட்களில், 69250 சதுர அடி** பரப்பளவில் **20 கோடி** மதிப்பீட்டில் கட்டப்பட்ட 3 மாடி கட்டிடம்.

## உலக சாதனை

விருதுகள் பெற்ற திட்டம்

ELITE WORLD RECORDS · ASIAN RECORDS ACADEMY · INDIA RECORDS ACADEMY · TAMILAN

சவாலான இந்த உலக சாதனை ரோட்டரி ஆஸ்பிட்டலை
**ஈரோட்டில் கட்ட வாய்ப்பு வழங்கிய அனைத்து**
**ரோட்டரி உறுப்பினர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி.**

TEEMAGE
PRECAST IN

**Rtn. AKS. N K Nandhagopal** Managing Director - Teemage
**@ all the Staff Members of Teemage,** Tirupur.
+91 82204 55555, +91 421 2200488, +91 421 2240488
sales@teemageprecast.in www.teemageprecast.in

# ரோட்டரி தலைவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

ரஷீதா பகத்

ரோட்டரி மண்டல இன்ஸ்டிடியூட்டில், இந்தியாவின் இரண்டு ஜாம்பவான்களான முன்னாள் RI தலைவர்கள் ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண் பானர்ஜி இருவருக்கும் வாழ்நாள் சாதனைகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

PRIP சாபூவின் மேற்கோளைப் படித்த RI இயக்குனர் ராஜு சுப்ரமணியன், “ஒரு புகழ்பெற்ற தொழிலதிபர், பரோபகாரர் மற்றும் தொலைநோக்கு தலைவர் என சாபூ ரோட்டரி அறக் கட்டளையின் அறங்காவலர், தலைவர் உட்பட முக்கிய பாத்திரங்களை வகித்துள்ளார்” என்றார். போர்டு ரூமைத் தாண்டி அவரது தாக்கம் விரிவாக இருந்தது, 1998ஆம் ஆண்டு முதல் ஆப்பிரிக்கா முழுவதும் ரோட்டரியின் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்புடன் தாக்கத்தை ஏற்படுத்தினார். அவரின் மாற்றம் தரும் பங்களிப்புகள் மற்றும் உறுதியான அர்ப்பணிப்புக்காக அவர் கவுரவிக்கப்படுகிறார்.

சாபூ தனது ஏற்பு உரையில், தான் சண்டிகருக்கு வணிகத்திற்காக வந்ததாகவும், “நண்பர்களை பெற கொள்ள ரோட்டேரியன் ஆனதாகவும்” கூறினார். நண்பர்களை உருவாக்கி, சங்கத்தலைவராக, மாவட்ட ஆட்சியராக, RI இயக்குநராக, இறுதியாக RI தலைவராக ஆற்றிய பங்கு என ரோட்டரியில் தனது பயணம் உற்சாகமாக இருந்தது என கூறினார். அவரது மனைவி உஷா, “நாம் சேவைக்காக கைகோர்த்து இந்தியாவைத் தாண்டிப் பார்க்க வேண்டும்” என்று பரிந்துரைத்தபோது, அவர் ஆப்பிரிக்காவில் மருத்துவப் பணிகளைத் தொடங்கினார், அது அவருக்கு மிகுந்த திருப்தி அளித்தது.

மிகவும் நெகிழ்வான பேச்சில், சில வார்த்தைகளைச் சேர்த்த உஷா சாபூ ராஜாவுக்கு நீங்கள் அளித்த அன்பு, அங்கீகாரம் மற்றும் மரியாதைக்கு நன்றி. அவரது பேச்சு மற்றும் செவித்திறன் பலவீனமாக உள்ளது, ஆனால் 90 வயதிலும், அவர் இன்னும் மருத்துவப்பணிகளைச் செய்து வருகிறார், இதய அறுவை சிகிச்சைகளை ஏற்பாடு செய்கிறார் மற்றும் அவரது சங்கத்திட்டங்களில் (RC சண்டிகர்) கலந்துகொள்கிறார். ரோட்டரியில் நண்பர்கள் நீங்கள் இருப்பதாலும், ரோட்டரியின் உணர்வை அவருக்குள் உயிர்ப்புடன் வைத்திருப்பதாலும் இதையெல்லாம் அவரால் செய்ய முடிந்தது என்றார்.

PRIP கல்யாண் பானர்ஜியை கௌரவித்த RID சுப்பிரமணியம், “மூன்றாவது இந்திய RI தலைவராக அவர் இருந்த பதவிக்காலத்தில் இந்தியா TRFக்கு முக்கிய பங்களிப் பாளராக மாறியது. யுனைடெட் பாஸ்பரஸின் இயக்குனராக அவர், வாபியை ஒரு தொழில்துறை மையமாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்துள்ளார் என கூறினார். 1972 முதல் அவரது விரிவான ரோட்டரி பயணம் அவருக்கு பல தலைமைப் பதவிகளைக் கொண்டு வந்தது, RI தலைவராக ரோட்டரியின் உச்சத்திற்கு அழைத்துச் சென்றது. அவர் பல்வேறு சர்வதேச குழுக்களில் பணி யாற்றினார், “குறிப்பாக இந்தியாவில்



PRIP *ராஜேந்திர சாபூ மற்றும் உஷாவை* RI *தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் ஹீதர் கௌரவிக்கின்றனர். இன்ஸ்டிடியூட் தலைவர்* K P *நாகேஷ்,* RIPN *மரியோ டி காமர்கோ,* RID *ராஜு சுப்ரமணியன், வித்யா,* PRIPs K R *ரவீந்திரன், கல்யாண் பானர்ஜி,* RID *அனிருதா ராய்சௌத்ரி மற்றும்* TRF *அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்டியா அவர்களும் புகைப்படத்தில் உள்ளனர்.*

போலியோ ஒழிப்பு முயற்சிகளை வழி நடத்தினார். அவரது தத்துவம் மற்றும் தலைமைத்துவம் அவரது வார்த்தைகளில் தெளிவாக இருந்தது: ரோட்டரியில் முன்னணி என்பது வேறுபட்டது, ஏனென்றால் இங்கே நீங்கள் உங்களுக்கு சமமானவர்களை வழிநடத்துகிறீர்கள். நீங்கள் உத்தரவுகளை வழங்குவதற்காக இங்கு வரவில்லை, அவர்களுக்கு ஆதரவளிக்க வந்திருக்கிறீர்கள். இந்த வார்த்தைகள் சுருக்கமாக "கூட்டுத் தலைமை மற்றும் சேவைக்கான அவரது நெறிமுறை களை எடுத்துக்காட்டுகிறது. இந்த வாழ்நாள் சாதனையாளர் விருது, ஒத்துழைப்பையும் சேவையையும் மேம்படுத்துவதில் அவரது விதிவிலக்கான தலைமைத்துவத்தை அங்கீகரிக்கிறது, என்றார்.

கூட்டத்தில் உரையாற்றிய பானர்ஜி, இன்று தனக்கு வழங்கிய அங்கீகாரம் மற்றும் மரியாதைக்காக இன்ஸ்டிட்யூட் கமிட்டிக்கு நன்றி தெரிவித்தார். 1911-ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூரின் வார்த்தைகளை அவர் பணிவுடன் மேற்கோள் காட்டினார். "அவரது ஒப்பற்ற வார்த்தைகளில் தாகூர் கூறியது: "நீங்கள் எனக்கு அளிக்கும் அற்புதமான மாலைக்கு நான் தகுதியற்றவன், நான் எப்போதும் செய்ததைச் செய்து வருவதால் இந்த மரியாதையை புரிந்துகொள்வது எனக்கு கடினமாக உள்ளது.''



RI *தலைவர் மெக்கினலி* PRIP *பானர்ஜியை கௌரவிக்கிறார்.*



RID *சுப்பிரமணியன் பாண்டுரங்க செட்டியை கௌரவிக்கும் மேற்கோளை வாசிக்கிறார். செட்டியின் மகன் ஷியாம் மற்றும்* RI *தலைவர் மெக்கினலியும் உள்ளனர்.*

ரோட்டரி மூலம் அவர் சாதித்த அனைத்திலும் அவர் பெரிதாக மதிப்பது, மக்களுக்கு உதவுவதற்காக சக ரோட்டேரியர்களுடன் 51 ஆண்டுகள் பணியாற்றியது தான் என்பதை அவர் தீர்க்கமாக நம்புகிறார். 2012ல் இந்தியா போலியோ நோயின் பிடியிலிருந்து விடுபட்டபோது (அவர் RI தலைவராக இருந்தபோது) நம்பமுடியாததாக இருந்தது. இது போன்ற சமயங்களில் எப்போதும் நடப்பது போல், களத்தில் இருப்பவர்கள் வேலையைச் செய்ய, தலைவருக்கு அங்கீகாரம் கிடைக்கும்! இது உண்மையிலேயே ஒரு நம்பமுடியாத பணி, மேலும் இது இவ்வளவு சீக்கிரம் நிறைவேறும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

"2016–17 ஆம் ஆண்டில் TRF முதன்முறையாக $300 மில்லியன் திரட்டியபோது, TRF-ஐ வழிநடத்தும் அதிர்ஷ்டம் எனக்கு கிடைத்தது'' என்று அவர் மேலும் கூறினார்.

பானர்ஜி பின்னர் தனது மனைவி பினோட்டாவை இழந்ததில் தனது வலியையும் வேதனையையும் பற்றி பேசினார், இது பார்வையாளர்களில் பல கண்களை ஈரமாக்கியது. கோவிட் நாட்களில் எனது துணைவி பினோட்டாவை சிக்கலான சிறுநீரக அறுவை சிகிச்சையின் போது இழந்தேன். மீண்டும் ரோட்டரியில் மூழ்கி, வாபியில் பல்கலைக் கழ கத்தை உருவாக்கி, சுகாதார வசதிகளை நிறுவி, பயணம் செய்து, பிற சமூகப் பணிகளில் ஈடுபட்டு, அந்த இழப்பிலிருந்து மீள முயற்சிக் கிறேன். இது பழைய கிஷோர்குமார் பாடல் ஒன்றை நினைவுபடுத்துகிறது: 'முசாஃபிர் ஹூன் யாரோ, ந கர் ஹே ந திகானா, முஜே சல்தே ஜனா ஹே, பஸ் சல்தே ஜானா' (நான் இல்லம், முகவரி இல்லாத பயணி, தொடர்ந்து சென்று கொண்டிருப்பதே எனது குறிக்கோள்)

ரோட்டரிக்கு அவர் செய்த முன்மாதிரியான சேவைக்காக, PRID பாண்டுரங்க செட்டிக்கு மரணத்திற்குப் பின் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டது, இது அவரது மகன் ஷியாமிடம் வழங்கப்பட்டது. PRID பாண்டுரங்க செட்டி ஜனவரி 21, 2023 அன்று காலமானார்.■

# அடுத்த தலைமுறைக்காக ரோட்டரியை பிராண்டிங் செய்வோம்

V முத்துகுமரன்

ரோட்டரியில் சேர மக்களை ஊக்குவிக்கும் லட்சத்திற்கும் அதிகமான நிஜவாழ்க்கை கதைகளை நீங்கள் கூறலாம். “ஆனால், ரோட்டரி என்ற பிராண்டை உருவாக்க நீங்கள் அவற்றை ஒரு சீரான, கட்டமைக்கப்பட்ட மற்றும் நுணுக்கமான முறையில் விவரிக்க வேண்டும், இது இந்த உலகளாவிய தன்னார்வ தொண்டு நிறுவனத்தை ஒரு புதிய பாரம்பரியத்துடன் அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லும்” என்று நிதி தொழில்நுட்ப நிறுவனமான கேண்டெக்ஸின் உலகளாவிய சந்தைப்படுத்தல் தலைவர் மற்றும் நுகர்வோர் பிராண்ட் உத்திகளை வகுப்பதில் நிபுணரான நுபுர் கட்கரி கூறினார்.

பெங்களூரு மண்டல இன்ஸ்டிடியூட்டில் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய அவர், உலக மக்கள்தொகையின் சராசரி வயது 30 ஆண்டுகள் என்றும், “இந்த தலைமுறையினர் இணையத்துடன் இணைக்கப்பட்டு 24x7 சமூக ஊடகங்களில் இருக்கின்றனர்” என்றும் கூறினார். எனவே, ஒரு தனித்துவமான லோகோ, நிறம், செய்தியிடல், எழுத்துரு மற்றும் பின்னணியுடன் ரோட்டரி பிராண்டை எவ்வாறு உருவாக்குகிறீர்கள் என்பது அனைத்தும் சாதாரண மனிதனின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார்.

இன்றைய இளைய உலகம் புதிய யோசனைகளை ஏற்க தயாராக இருக்கின்றன. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான ChatGPT, செயற்கை நுண்ணறிவு, சமூக ஊடகங்கள் அவர்களின் வாழ்கையில் ஊடுருவிவிட்டன மற்றும் செய்தித் தாள்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற பாரம்பரிய ஊடகங்களை அவர்கள் கடந்துவிட்டனர். “எனவே, ரோட்டரி காலத்திற்கு ஏற்ப மாறவேண்டும். ரோட்டரி தனக்கென ஒரு பிராண்ட் அடையாளத்துடன் தனித்து நிற்க வேண்டும்.

நமது ரோட்டரி கதைகளின் சக்தியை கொண்டு நாம் யார் என்பதில் ஒரு சிறந்த பிராண்டை உருவாக்க முடியும்” என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நம் கதையை நமது இலக்காகக் கொண்டவர்களிடம் சரியாக கொண்டு சேர்ப்பது முக்கியம். நமக்கு ஒரு பிராண்ட் வரைபடம் தேவை – நாம் விரும்பும் விதத்தில் ரோட்டரி அடையாளம் காணப்பட வேண்டும், என்று அவர் விளக்கினார்.

ரோட்டரியை ஒரு உன்னதமான பிராண்டாக உருவாக்குவதற்கு சமூகத்துடனான ‘உணர்ச்சி ரீதியான இணைப்பு’ மிகவும் முக்கியமானது. “இளம் தொழில் வல்லுநர்களுடன் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த



*RID ஜெர்மி ஹர்ஸ்ட் மற்றும் PRID அசோக் மகாஜன் நூபுர் கட்கரிக்கு விருது வழங்கி கௌரவிக்கின்றனர். PRID மனோஜ் தேசாய், RID ராஜு சுப்ரமணியன், வித்யா மற்றும் TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா ஆகியோரும் உள்ளனர்.*

ஒருங்கிணைந்த குரல், ஒரு மொழி மற்றும் ஒரே யோசனை அணுகுமுறைக்காக ரோட்டரியர்கள் மற்ற உறுப்பினர்களுடன் ஒத்திசைக்க வேண்டும்'' என நுபுர் கூறினார். AI, பெரிய தரவு மற்றும் ChatGPT போன்ற தகவல் மற்றும் தொழில்நுட்ப தளங்களால் உலகம் மூழ்கியிருப்பதால், ''வரவிருக்கும் தலைமுறைகளுக்கு ஒரு பிராண்ட் பாரம்பரியத்தை உருவாக்க ரோட்டரி அதன் உள்ளார்ந்த கதை சொல்லும் சக்தியைப் பயன்படுத்த வேண்டும்,'' என்று அவர் மேலும் கூறினார்.



RI *தலைவர் கோர்டன் மெக்கினலி உடன்* WHO *இயக்குனர் டாக்டர் ருடிகர் கிரெச்.*

### பள்ளிகளில் சுகாதார கல்வியறிவு

போலியோ இல்லாத உலகத்தை அடைவதற்கான விளிம்பில் இருக்கும் ரோட்டரி, ''பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் பள்ளிகளை குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நிறுவனமாக மாற்ற முடியும் என்று ஜெனிவாவில் உள்ள WHOவில் ஹெல்த் ப்ரோமோஷன் இயக்குனர் டாக்டர் ருடிகர் கிரெச் ஒரு அமர்வின் போது கூறினார்.

பள்ளிகள் தடுப்பு தலையீட்டிற்கான ஒரு தனித்துவமான அமைப்பாகும். ''சுகாதார கல்வியறிவை வழங்கும் இதுபோன்ற பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கும் பயனளிக்கும்.''

''போலியோவின் உதாரணம் ஒரு நோயை ஒழிப்பது எவ்வளவு சிக்கலானது என்பதைக் காட்டுகிறது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் கடைசியாக போலியோவால் பாதிக்கப்பட்டவர்களை கண்டு பிடிக்க உங்கள் குழுக்கள் கடுமையாக உழைத்து வருகின்றன. தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவதும், சமூகங்களில் நம்பிக்கையை வளர்ப்பதும் இதற்குத் தேவை என்றார் கிரெச்.■

## குவஹாத்தியில் ஒரே மருத்துவ வளாகத்தில் மூன்று வசதிகள்

ரோட்டரி செய்திக்குழு

குவஹாத்தியில் உள்ள KGMT மருத்துவமனையில், DG நிலேஷ் அகர்வால், PDGகள் மனஸ் சௌத்ரி, கல்பனா கௌன்ட், தெபஷீஷ் தாஸ் முன்னிலையில் மூன்று அதிநவீன வசதிகளைத் (ரத்த வங்கி, கண் மருத்துவமனை, ஃபிசியோதெரபி பிரிவு) திறந்து வைத்தார் அஸ்ஸாம் நல அமைச்சர் கேஷப் மஹந்தா.



DG *நிலேஷ் அகர்வால்,* PDGs *பிரபாத் கேடியா, கல்பனா கவுண்ட், தேபாஷிஷ் தாஸ் மற்றும் மானஸ் சவுத்ரி, கவுகாத்தி* KGMT *மருத்துவமனையில்.*

இந்த வசதிகளை RID 3282, பங்களாதேஷைக் கூட்டாளராகக் கொண்ட ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் வழியாகச் சுமார் ரூ.2 கோடி செலவில் அமைத்துள்ளது.

பின்னர், PDGகள் அர்விந்த் ஃபுகான் (அமெரிக்காவிலிருந்து), N N தத்தா, பிரபாத் கேடியா மற்றும் அரிஜித் என்டோ, டாக்டர் அனில் மஹந்தா மற்றும் குவஹாத்தியில் உள்ள எட்டு சங்கங்களைச் சேர்ந்த பிற ரோட்டரியன்கள் இந்த மருத்துவத் திட்டத்தின் வெற்றிக்குப் பணியாற்றினார்கள்.■

Rotary rise
TRANSCEND BARRIERS
ROTARY INSTITUTE 2023
ZONE 4,5,6,7

# உள்வரும் தலைவர்களுக்கான வெற்றி மந்திரங்கள்

ஜெய்ஸ்ரீ

கனவு காணுங்கள், இணைந்திருங்கள், விடாமுயற்சி செய்யுங்கள் – இவைதான் RIPN மரியோ டி கமார்கோ பெங்களூரு இன்ஸ்டிடியூட்டில் DGN-களுக்கு வலியுறுத்தும் வழிகாட்டும் கொள்கைகள்.

ரோட்டரி அறக்கட்டளையின் தொடக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில், டி கமார்கோ பெரிய கனவு காண்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார். “1917-ம் ஆண்டில் ஆர்ச் கிளம்ஃப் அறக்கட்டளையை நிறுவிய போது, கவனத்தை ஈர்ப்பதற்காக அறக்கட்டளை RI உடன் போட்டியிடும் என்று உலகெங்கிலும் உள்ள ரோட்டரி தலைவர்கள் நினைத்ததால், அவர் மட்டும் அதன் ஒரே நம்பிக்கைவாதியாக இருந்தார். RI அதன் அலுவலகத்திற்கு ஒரு அறையை கூட ஒதுக்காததால், கிளம்ஃப் தனது சொந்த நிறுவனத்தில் அறக்கட்டளை அலுவலகத்தை அமைக்க வேண்டியிருந்தது. $26.5 ஆரம்ப நிதியைத் தவிர, முதல் உண்மையான பங்களிப்பு 1947-ல் பால் ஹாரிஸின் மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ரோட்டேரியர்கள் அறக்கட்டளைக்கு வழங்கிய $1.7 மில்லியன் நன்கொடையாகும். கிளம்ஃப் தனது கனவை நிறைவேற்ற 30 ஆண்டுகள் பொறுமையாக காத்திருக்க வேண்டியிருந்தது’’ என்று அவர் கூறினார்.



RIPN *மரியோ டி காமர்கோ*

இரண்டாவது மந்திரம், வெற்றி என்பது கூட்டு முயற்சி என்பதை உணர்ந்து இணைவதாகும். உங்களால் ஒருபோதும் எதையும் தனியாக செய்ய முடியாது. நான் எப்போதும் உங்களைச் சார்ந்திருப்பேன், நீங்கள் உங்கள் சங்கத் தலைவர்களை சார்ந்திருப்பீர்கள், அவர்கள் ரோட்டேரியர்களை சார்ந்திருப்பார்கள். கூட்டு பணி இல்லை என்றால் பணியே இல்லை என்றார்.

இன்ஸ்டிடியூட்டிற்கு வருவதற்கு முன்பு மைசூரு, பேலூர் மற்றும் ஹாசன் ஆகிய இடங்களுக்கு அவருடைய மனைவி டெனிஸினுடன் சென்றதை கூறி, டி கமார்கோ தனிப்பட்ட தொடர்புகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார். RI தலைவர் ஒருவர் அவர்களைப் பார்ப்பது இதுவே முதல் முறை என்பதால் ரோட்டேரியர்கள் மனம் நெகிழ்ந்தனர். அளவற்ற பாசத்தை எங்கள் மீது பொழிந்தார்கள். தலைவர்களாகிய நீங்கள் செயல்படுவதற்கு போதுமான அர்ப்பணிப்பு இல்லை என்றால், உங்கள் நல்ல திட்டங்களும் யோசனைகளும் பலனளிக்காது.

தோல்வியை எதிர்கொள்வது அவரது மூன்றாவது மந்திரம். ஒவ்வொரு தலைவரும் சவால்களை எதிர்கொள்கிறார்கள், ஆனால் வீழ்ச்சிக்குப் பிறகு எழுவதே உண்மையான தலைமையை வரையறுக்கிறது. “நீங்கள் கருத்து வேறுபாடுகளை சந்திப்பீர்கள். விவாதங்களுக்கு தயாராக இருங்கள். விவாதம் சூடுபிடிக்கும் போது, மன்னிப்பு கேட்க தயங்காதீர்கள், உங்கள் குழு உங்களை மதிக்கும். முடிவுகளுக்கு பொறுப்பேற்கவும். உலக அளவில் நான் பொறுப்பேற்கிறேன், மாவட்ட அளவில் நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த TRF அறங்காவலர் லாரி லுன்ஸ்ஃபோர்ட், DGNகளுக்கு அறக்கட்டளையின் எதிர்காலம் பற்றிய நுண்ணறிவை வழங்கினார். ஆண்டு நிதிக்கு ஒவ்வொரு ஆண்டும் $1,000 பங்களிக்கும் உறுப்பினர்களை அங்கீகரிக்கும் பால் ஹாரிஸ் சொசைட்டியை ஆதரிக்குமாறு அவர் உள்வரும் தலைவர்களை வலியுறுத்தினார். சிறப்பான ரோட்டரி-CSR கூட்டாண்மைக்கு இந்தியா வழி காட்டியாக இருப்பதை பாராட்டிய அவர், பிரேசில், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் இந்தத் திட்டத்தைப் பின்பற்றுவதற்கான திட்டங்களைக் குறிப்பிட்டார்.

போலியோவுக்குப் பிறகு அடுத்தது என்ன என்பதைப் பற்றி அவர் பேசுகையில், போலியோவின் முடிவை முதலில் பார்க்க வேண்டும் என்பதால், அடுத்ததை பற்றி நாங்கள் அதிகம் பேசவில்லை. எங்கள் உலகளாவிய மானியங்களை உயர்ந்த கட்டமைப்பிற்கு மாற்ற

முயற்சிப்பதால், ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்ஸ் சாத்தியமாக இருக்கலாம். கேட்ஸ் கூட்டாண்மையுடன் தொடர்ந்து ஈடுபடுவதற்கான திட்டங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

2024க்குள் மத்திய கிழக்கு அல்லது வட ஆப்பிரிக்காவில் ரோட்டரி அமைதி மையங்களை அமைக்க அறக்கட்டளை திட்ட மிட்டுள்ளது; மற்றும் லத்தீன் அமெரிக்காவில் ஒன்றைத் திறக்கவும் திட்டமிட்டுள்ளது. “2030ஆம் ஆண்டளவில், நாம் ஒன்பது அமைதி மையங்களை உருவாக்குவோம், மேலும் பாங்காக்கில் உள்ள சுலாலோங்கோர்ன் பல்கலைக்கழகத்தில் உள்ளதை மாற்றி, ஆசியாவில் இன்னொன்றை உருவாக்குவோம்’’ என்று லன்ஸ்ஃபோர்ட் கூறினார்.



TRF *அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்ட் மற்றும்* RID *ஜெர்மி ஹர்ஸ்ட்.*

RI தலைவர் கார்டன் மெக்கினலியின் தொடர்ச்சிக்கான அழைப்பைப் பிரதிபலிக்கும் வகையில், கேமன் தீவுகளைச் சேர்ந்த RI இயக்குனர் ஜெரமி ஹர்ஸ்ட் நீடித்த முயற்சியின் முக்கியத் துவத்தை வலியுறுத்தினார், தனிப்பட்ட பதவிக்காலத்திற்கு அப்பால் ரோட்டரியின் வளர்ச்சி யைக் கற்பனை செய்யவேண்டும் என கூறினார். ஒரு ஆண்டு ஒரு திசையிலும், அடுத்த ஆண்டு மற்றொரு திசையிலும் செல்லாமல், தொடர்ச்சியை உருவாக்க முடிந்தால் நாம் எவ்வளவு சிறப்பாகச் செய்ய முடியும் என்று கற்பனை செய்து பாருங்கள் என கூறினார்.

ரோட்டரியின் 125வது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் 2030ஆம் ஆண்டுக்குள் 12.5 லட்சம் உறுப்பினர்களை சேர்க்கை இலக்காகக் கொள்ள வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது என்றார். கவர்னர் நியமனம் செய்யப்படுபவர்கள் நம் இலக்குகளை அடைய உதவும் வகையில் கூடுதல் கற்றல் திட்டங்கள் ஜூலை 1, 2024 அன்று தொடங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.■

## பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், வெட் கிரைண்டர்கள்

ரோட்டரி செய்திக்குழு

RC சென்னை சீ வியூ, RID 3232, கில்ட் ஆஃப் சர்வீஸ் சேவா சமாஜம் சிறுவர் இல்லத்திற்கு 10 தையல் இயந்திரங்களை வழங்கியது, 25 பழைய இயந்திரங்களைப் பழுதுபார்த்துக் கொடுத்தது. இந்த இயந்திரங்கள் இங்குள்ளவர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சி வழங்க உதவும், அவர்கள் வருவாய் பெற உதவும். இந்தச் சங்கம் இங்குள்ளோருக்குப் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் RO அமைப்பு ஒன்றை நிறுவியது.

இச்சங்கம் சேரி ஒன்றில் இயங்கும் அன்னை பாரத மாதா சுய உதவிக் குழுவுக்கு ஒரு வணிக வெட் கிரைண்டர், பெரிய இட்லி சமைப்பான், பாத்திரங்கள், மளிகைப் பொருட்கள், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் ஆகியவற்றை பரிசளித்தது.■




*தையல் இயந்திரங்கள் மற்றும் கிரைண்டர்களை பரிசளித்த பிறகு சங்க உறுப்பினர்கள். உஷா சரோகி, தலைவர், மாவட்ட மகளிர் அதிகாரம் குழு, வலமிருந்து இரண்டாவதாகக் உள்ளார்.*

# நிலையான பட்ஜெட்டில் கவனம் செலுத்தும் RI

V முத்துகுமரன்

ரோட்டரி இன்டர்நேஷனல், இந்த நிதியாண்டு தொடங்கும் முன்னரே அதன் அனைத்து செலவுகளையும் நியாயப்படுத்தி, அங்கீகரித்து அதன் பூஜ்ஜிய அடிப்படையிலான பட்ஜெட்டை தக்கவைக்கும். “ஆனால் 2028 நிதியாண்டில் ஒரு பற்றாக்குறை ஆண்டை நாம் எதிர்பார்க்கலாம், அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் பிற செலவுகளைக் கருத்தில் கொண்டு அதைச் சமாளிக்க RI வாரியம் செயல்பட்டு வருகிறது” என்று PRID மனோஜ் தேசாய் பெங்களூரு ஜோன் இன்ஸ்டிட்யூட்டில் ரோட்டரியின் ஐந்தாண்டு நிதி முன்னறிவிப்பை வழங்கினார். 200க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் புவியியல் பகுதிகளில் இருக்கும் ரோட்டரி அதன் 1.4 மில்லியன் ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்ராக்டர்களின் தேவைகளை 46,000 ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் சங்கங்கள் மூலம் பூர்த்தி செய்கிறது. “நம் எட்டு பிராந்திய அலுவலகங்கள் மூலம் 68 வகையான நாணயங்களில் 100க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகளை நாங்கள் இயக்குகிறோம் மற்றும் முதன்மையாக மூன்று வகையான வருவாய்களைச் சார்ந்துள்ளோம் – உறுப்பினர் நிலுவைத் தொகைகள் (RI-இன் வருமானத்தில் 71%); முதலீட்டு வருமானம் (2%, ஆனால் அது சந்தை ஏற்ற இறக்கத்தைப் பொறுத்தது);



PRID *மனோஜ் தேசாய்*

மற்றும் சேவைகள் மற்றும் பிற வழிகள் (27%), ஆனால் இது ரோட்டரி மாநாடுகள் மற்றும் நிகழ்வுகளை நடத்துவதில் ஏற்படும் செலவுகளுக்கு ஈடுசெய்யப்படுகிறது” என்று தேசாய் விளக்கினார். ஜூலை 2022 முதல் ரோட்ராக்ட் சங்கங்களுக்கான RI நிலுவைத் தொகை அமலுக்கு வந்த பிறகு, “180 நாடுகளில் 1,68,000 ரோட்ராக்டர்களைக் கொண்ட 10,700 ரோட்ராக்ட் சங்கங்களுக்கு உறுப்பினர் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. இந்த ஆண்டு ஜூன் வரை, அவர்களில் 60% பேர் தங்கள் RI நிலுவைத் தொகையைச் செலுத்தியுள்ளனர்” என்று அவர் குறிப்பிட்டார்.

2024 நிதியாண்டில், உறுப்பினர் நிலுவைத் தொகை 90 மில்லியன் பங்களிக்கும், முதலீட்டு வருமானம் 2 மில்லியனாக இருக்கும், மேலும் சேவைகள் மற்றும் பிற வழிகள் 35 மில்லியன் வருமானத்தைக் கொண்டுவரும். “எனவே நடப்பு ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட வருமானம் 127 மில்லியன் ஆகும், அதில் 70% உறுப்பினர்களின் நிலுவைத் தொகையிலிருந்து வருகிறது.”

RI-ன் வளர்ச்சிக்கு ரோட்டரி உறுப்பினர்கள் நேரடியாகப் பங்களிப்பதால், “அதன் இயக்கச் செலவில் 58% தலைமைத்துவ நிகழ்வுகளுக்கு நிதியளிப்பதற் காகவும், ரோட்டரி சங்கங்களுக்கு அவைகளின் சேவைத்திட்டங்களுக்கு பல வழிகளில் உதவுவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது” என்று தேசாய் கூறினார். அதன் வருவாயில் குறைந்தபட்சம் 20% உலகளவில் அதன் பொது உருவத்தை மேம்படுத்துவதற்காக செலவிடப்படுகிறது; மீதமுள்ள 22% நிர்வாகச் செலவு, ஒழுங்குமுறை இணக்கம், அலுவலக வாடகை மற்றும் சட்ட உதவிக்காக ஒதுக்கப் படுகிறது.

அடுத்த இரண்டு நிதியாண்டுகளை நிர்வகிப்பது சவாலாக இருக்கும், 2028 நிதியாண்டில் அதன் கையிருப்பில் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதன் மூலம் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தவிர்க்க RI வாரியம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும்.■

## திஷா 2024 தில்லியில் நடைபெறும்

ரோட்டரி ஆண்டு 2024–25க்கான DGEக்கள், DGNகள் மற்றும் உறுப்பினர் எண்ணிக்கை, TRF, பொதுத்தோற்றம் உள்ளிட்ட பல ரோட்டரி பிரிவுகளின் உள்வரும் மாவட்டத் தலைவர்களுடைய நோக்குநிலை மற்றும் இலக்கு அமைத்தல் கருத்தரங்கமான திஷா, 2024 மார்ச் 15 முதல் 17 வரை தில்லியில் உள்ள லீலா ஆம்பியன்ஸ் மாநாட்டுக் கூடத்தில் நடைபெறும்.

இதன் கூட்டுநர் RID ராஜு சுப்ரமணியன், இணைக் கூட்டுநர், RID அனிருதா ராய்சௌத்ரி. இதன் தலைவர் PDG சரத் ஜெயின், செயலாளர் PDG குர்ஜீத் செகோன். கருத்தரங்குக்கு இணையத்தில் பதிவு செய்வதற்கான முகவரி: *https://disha2024.rotaryindia.org*

# உலக விளையாட்டுகளில் முக்கியத்துவம் பெறும் இந்தியா

V முத்துகுமரன்




V முத்துகுமரன்

*RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் PDG V R முத்து ஆகியோர் நீச்சல் வீரர் பிரபாத் கோலிக்கு விருது வழங்கி கௌரவிக்கின்றனர்.* **இடமிருந்து:** *PDG சந்து அகர்வால், RID ராஜு சுப்பிரமணியன், ராஜு கோலி, வில்லாளர்கள் அதிதி கோபிசந்த் சுவாமி, ஓஜாஸ் தியோடேல், பயிற்சியாளர் பிரவின் சாவந்த் மற்றும் ஜாங்கர் கட்கரி.*

உலக விளையாட்டுகளில் இந்தியா 100 பதக்கங்களை வென்றதில்லை. அது செப்டம்பர்-அக்டோபர் 2023-ல் ஹாங்சோ ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் வரை, அப்போட்டியில் நமது விளையாட்டு வீரர்கள் 107 பதக்கங்கள் வென்று சாதனைக்கான புதிய அளவுகோலை அமைத்தனர். மகாராஷ்டிராவின் சதாராவில் உள்ள மருத்துவமனையில் உதவியாளராக இருந்து காவலராக மாறிய பிரவின் சாவந்தால் பயிற்சி யளிக்கப்பட்ட 16 பேர் கொண்ட வில்வித்தை அணிக்கு இந்த சிறந்த நிகழ்வின் பெருமை சேர வேண்டும்.

உலகின் இளைய வில்வித்தை சாம்பியனான அதிதி கோபிசந்த் சுவாமி (17) மற்றும் தற்போது உலகளாவிய தரவரிசையில் ஒன்பதாவது இடத்தில் உள்ள , உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் (பெர்லின், 2023) தங்கம் வென்ற முதல் இந்திய வீரரான 21 வயதான ஓஜாஸ் டியோடேல் ஆகியோர் சதாராவில் ஒரு ஏக்கர் கரும்பு வயலில் சாவந்தால் நடத்தப்படும் த்ருஷ்டி வில்வித்தை அகாடமியின் மாணவர்கள்.

இளம் வில்வித்தை வீரர்கள் இருவரும் சாவந்தால் பயிற்சியளிக் கப்பட்டனர், சாவந்த் தனது இளமை நாட்களில் சாம்பியனாக விரும்பினார், ஆனால் அவரது பொருளாதார நிலை மற்றும் மோசமான வசதிகள் அவரது லட்சியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தன.

உலகின் கடினமான கடல் வழிகளான ஓசியன்ஸ் செவனை முடித்த பிரபாத் கோலி (23), திறந்த நீர் நீச்சல் செய்வதற்கு 80 சதவீத மனவலிமை மற்றும் 20 சதவீதம் உடல்வலிமை தேவை, என்று தனது பெற்றோர் அறிவுறுத்தியதாக கூறினார்.

உலக சாம்பியனாக வில்வித்தை வீரர்கள் உயர்ந்தது அவர்களின் மனவலிமை, உறுதி மற்றும் இன்னல்களை எதிர்கொண்டதின் ஒரு அற்புதமான கதை என்றாலும், அவர்களின் பயிற்சியாளர் சாவந்த் அவரது வாழ்க்கையில் பல இடையூறுகளை எதிர்கொண்ட போதிலும், தனது அகாடமியை நடத்தியுதும் சாதனையே. “வில்வித்தை வீரர்களுக்குப் பயிற்சி யளிக்கும் ஆர்வத்தைத் தொடர, சாவந்த் வேலையை விட்டு விலக வேண்டியதாயிற்று, தனது வீட்டை விற்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார், அவரது தாயார் மற்றும் மனைவியின் நகைகளை அடமானம் வைத்து, பல தடைகளைத் தாண்டி பயிற்சி மையத்தை அமைத்தார்.”

ரூ.9 லட்சம் (மூன்று விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.2 லட்சம் மற்றும் இரண்டு பயிற்சியாளர்களுக்கு தலா ரூ.1.5 லட்சம்) ரொக்கப் பரிசு இன்ஸ்டிடிட்யூட்டில் அறிவிக்கப்பட்ட போது, பிரதி நிதிகளிடமிருந்து நன்கொடைகள் குவிந்தன, மொத்த பரிசுத் தொகை ரூ.17 லட்சமாக உயர்த்தப்பட்டது. RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் மற்றும் PRID C பாஸ்கர் (தலா ரூ.2 லட்சம்) ஆகியோர் பங்களித்தவர்களில் அடங்குவர்.

மேலும் இன்ஸ்டிடியூட் கதைகள் அடுத்த இதழில்.

# RC தானே சார்பில் மும்பையில் ஆட்டிசம் மையம்

ரஷீதா பகத்

நவி மும்பையில், RID 3142-க்கு உட்பட்ட தானே ஹில்ஸ் ரோட்டரி சங்கம் சார்பில் புதிதாக டாக்டர் வி.சுப்பிரமணியன் ஆட்டிஸம் மையம் அமைக்கப் பட்டுள்ளது. ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இது அமைந்துள்ளது. இங்கு படிக்கும் 100 மாணவர்கள் மற்றும் சிறப்பு கல்வியாளர்கள் மூலம் பல்வேறு பயிற்சிகளைப் பெறும் 1000 பேருக்கும் இது தெரியாது. ஆனால், ஒருவரின் அக்கறை மற்றும் ஆர்வத்தால் இந்த வசதி அவர்களுக்கு கிடைத்துள்ளது. அவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜெயராம் மெண்டன்.

அவர் தொழில் முறையில் எலக்ட்ரானிக் என்ஜினியர். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்திலிருந்தே இந்த திட்டத்தைக் கருத்தரித்து திட்டமிட்டார். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அவர் முழு மனதுடன் அர்ப்பணிப்புடன் உழைத்தார் என்றால், அதற்குக் காரணம் அவர் துபாயில் 19 ஆண்டுகள் பணிபுரிந்தபோது பெற்ற அனுபவங்கள்தான்.

அந்த நாட்களில், அங்கு தங்கியிருக்கும் இளம் இந்தியத் தம்பதிகளிடையே மலட்டுத்தன்மை அதிகமாக இருப்பதைக் கண்டேன், மேலும் உறைந்த உணவுகளை அதிகமாக உட்கொள்வது அவர்களின் இந்த நிலைக்கு முக்கியக் காரணங்களில் ஒன்றாகும் கருவுறாமைக்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று என்று நான் நம்புகிறேன், என்று அவர் கூறுகிறார்.



இந்த பிரச்னைக்கு தீர்வுகாணும் விதமாக இளம் தம்பதிகள் பலர் IVF முறையை (செயற்கை முறையில் கருத்தரித்தல்) நாடினார்கள். 100 குழந்தைகளில் 30 பேர் மனவளர்ச்சி குன்றியவர்களாகவும் நரம்புக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர் களாகவும் இருந்தது என்பதை எனது தனிப்பட்ட அனுபவத்தில் உணர்ந்து கொண்டேன் என்கிறார் மெண்டன். நானும் என் மனைவியும் செயற்கை கருத்தரித்தல் முறைக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டோம். மேலும் நானும் எனது நண்பர்களான ஒரு தம்பதியினரை அவ்வாறு செய்யும்படி அறிவுறுத்தினேன்.

எனது நண்பரின் மகனுக்கு ஒரு வயது இளையவரான சொந்த மகள் - இருவரும் IVF உதவியுடன் பிறந்தவர்கள் - என் மகளின் குழந்தைக்கு எந்தக் கோளாறும் இல்லை. ஆனால், என் நண்பரின் மகன் மன வளர்ச்சி குன்றியவராக இருந்தார். செயற்கை முறை கருத்தரித்தலுக்கு செல்லுமாறு நான் ஏன் என் நண்பர்களுக்கு அறிவுறுத்தினேன் என்று பல ஆண்டுகளாக என்னை நானே நொந்து கொண்டேன்.

அது நடந்தது 2008-ல். ஆனால் மனவளர்ச்சி குன்றிய ஒரு குழந்தையை நிர்வகிப்பது, கல்வி கற்பிப்பது, சமாளிப்பது நண்பரின் மனைவிக்கு நீண்ட போராட்டமாகவே இருந்தது. “இப்போது துபாயில் ஆட்டிசம் மையம் நிறுவப்பட்டுள்ளது, ஆனால். அந்த நாட்களில் மன



PRID *அசோக் மகாஜன் சங்க உறுப்பினர்கள் ராஜு சுப்ரமணியன்,* A S *குமார், சந்தோஷ் இன்ஸ்டிடியூட் நிறுவனர் டாக்டர் தத்தாராம் ஃபோண்டே மற்றும் முன்னாள் தலைவர் ஜெயராம் மெண்டன் ஆகியொருடன்.*

வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான வசதிகள் மற்றும் சேவைகள் மிகவும் குறைவாகவே இருந்தன.

இப்போதும் கூட, துபாய் மையத்தில், “சில குறிப்பிட்ட கல்வி முறைகள், பல்வேறு வகையான சிகிச்சை முறைகள் மற்றும் துணை மருத்துவர்களின் பயன்பாடு ஆகியவை சரிவர கிடைப்பதில்லை. நீங்கள் நினைப்பது போல், இந்தியாவின் நிலைமை இன்னும் பரிதாபமாக இருந்தது. எனவே சங்கத்தில் உள்ள எங்கள் குழு இந்த திட்டத்தின் மூலம் தேவையான அனைத்து ஆட்டிஸம் சிகிச்சை முறைகளையும் ஒரே இடத்திற்கு கொண்டு வர முடிவு செய்தது.

இந்த திட்டக் குழுவின் முக்கிய உறுப்பினரான சங்கத்தின் முன்னாள் தலைவர் அதுல் பிடே, இந்தத் திட்டம் ரூ.1.4 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது என்றார். ஆனால், இந்த மையம் அமைக்க, நவி மும்பை போன்ற இடத்தில், நிலம் வாங்க முடியாத நிலை ஏற்பட்டது. எனவே சங்கம் நவி மும்பையில் உள்ள ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமான மாத்ரூ மிலன் விகாஸ் கேந்திரா (MMVK) உடன் ஏற்கனவே ஒரு விசாலமான இடவசதிகளுடன் செயல்பட்டு வந்தது. மேலும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சேவைகளை செய்து வருகிறது. ரோடேரியன்களுக்கு மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான மையம் அமைக்க சுமார் 12,000 சதுர அடி இடம் கொடுக்க அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

“ஆட்டிசம் மையத்தை அமைப்பதற்கான எங்கள் திட்டங்களை நாங்கள் விவாதித்து, ஒரு கூட்டாண்மையை முன்மொழிந்த போது, அவர்கள் உடனடியாக யோசனையை ஏற்றுக்கொண்டு தங்கள் சொந்த வளாகத்தில் எங்களுக்கு இடத்தைக் கொடுத்தனர். நவி மும்பையில் இந்த மையத்திற்கு நிலம் வாங்கினால், கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் செலவாகியிருக்கும், என்று மெண்டன் கூறினார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான டாக்டர் ராஜுவின் மனைவி டாக்டர் சீதா, சிறப்புக் குழந்தைகளுக்கான வசதியை ஏற்படுத்த வேண்டும் என்ற கனவை எப்போதும் கொண்டிருந்தார். தனது



தந்தை டாக்டர் சுப்ரமணியனின் நினைவாக இந்த ஆட்டிசம் மையத்தை அமைக்க ரூ.1 கோடி நன்கொடை அளித்தார். மும்பையில் உள்ள புகழ்பெற்ற சண்முகானந்தா ஆடிட்டோரியம் தீ விபத்துக்குள்ளானபோது அதை மறுசீரமைத்தவர் இவர்தான். மற்ற குறிப்பிடத்தக்க நன்கொடையா ளர்களில் முன்னாள் தலைவர் விஜய் ஷெட்டியும் அடங்குவர். கிளப் உறுப்பினர் அனுப் சர்வேயும் இதற்கான பெருமுயற்சியில் ஈடுபட்டார்.

திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ.1.4 கோடியில் ஒரு பகுதி உலகளாவிய மானியத்திலிருந்து வந்ததாக பிடே விளக்கினார். இது வழக்கமான உலகளாவிய மானியம் அல்ல; நாங்கள் மாவட்ட நன்கொடை நிதியிலிருந்து சில தொகையைப் பெற்றோம், மேலும் GG விதிகளுக்கு ஒரு சர்வதேச பங்குதாரர் தேவைப் பட்டதால், நாங்கள் ஒரு நேபாள சங்கத்தை, அதாவது போக்ஹாரா மிட்டவுன் ரோட்டரி சங்கத்தை நிதியல்லாத பங்காளியாக ஏற்றுக்கொண்டோம்.

மன வளர்ச்சி குன்றியவர்களுக்குத் தேவையான பல்வேறு தெரபி சிகிச்சை முறைகள் மற்றும் இதர தேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாக மெண்டன் மேலும் கூறினார். மும்பையில் பல்வேறு இடங்களில் மனவளர்ச்சி குன்றியவர்களின் சிகிச்சை மையம் அமைத்து செயல்பட்டு வரும் சந்தோஷ் இன்ஸ்டிடியூட் மூலம் ஆட்டிஸம் மையம் நிர்வகிக்கப்பட்டு இயக்கப்படும் என்றும் கூறினார்.

இந்த மையம் “ஒரு அதிநவீன பயிற்சி வசதி கொண்ட மையமாகும். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோருக்கு நம்பிக்கையின் ஒளியாக இது இருக்கும் என்று விவரித்த மெண்டன், ஆக்குபேஷன் தெரபி, சென்சார் ஒருங்கிணைப்பு, பிசியோதெரபி, ஸ்பீச் தெரபி, இசை, யோகா, மணல் சிகிச்சை உள்ளிட்ட சிகிச்சை கள் இங்கு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.








*PRID மகாஜன் மற்றும் சங்க தலைவர் கோவிந்த் கேதன், டிரையம்ப் ரன் வெற்றியாளருடன்.*







*ஆட்டிஸம் மையத்தில் பல்வேறு வகையான சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.*



"மணல் சிகிச்சை" பற்றி விளக்கம் கேட்டால், மணலுக்கு ஒரு குறிப்பிட்ட குணம் உண்டு. குழந்தைகள் கடற்கரைக்குச் செல்லும் போது, அவர்கள் உற்சாக மாகிறார்கள்; ஏனென்றால், மணல் மூளையில் சில நரம்பணுக்களைத் (நியூரான்களை) தூண்டுகிறது மற்றும் நமது கல்வியாளர்கள் அந்தக் கருத்தோடு செயல்படுவார்கள். அக்வா தெரபியை பொறுத்தவரை, அதே இடத்தில் நீச்சல் குளம் கட்ட உள்ளோம்; அதற்கும் இடம் இருக்கிறது!"

மனவளர்ச்சி குன்றியதால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பதின்ம வயதினருக்கு ஒரே இடத்தில் தீர்வு வழங்க இந்தத் திட்டம் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மையம் உடல் வளர்ச்சிக்கான ஆரம்ப தலையீட்டு மையமாக செயல்படும் - குழந்தையின் உடல் மற்றும் மூளை இரண்டிலும்; அறிவாற்றல் வளர்ச்சி (சிந்தனை மற்றும் கற்றல்); நடத்தை வளர்ச்சி; மற்றும் சமூக மற்றும் உணர்ச்சி மேம்பாடு (உறவுகளை ஏற்படுத்த மற்றும் உணர்ச்சிகளை சமாளிக்கும் குழந்தையின் திறன்).

மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பள்ளி, ஆசிரியர், பயிற்சி வசதி மற்றும் தொழிற்கல்விக்கான வசதிகளும் உள்ளன என்று மெண்டன் மேலும் கூறினார்.

நவி மும்பை, தானே, மும்பை மற்றும் மகாராஷ்டிரத்தின் பிற பகுதிகளில் வசிக்கும் மனவளர்ச்சி குன்றிய சிறப்பு குழந்தைகள், மனச்சிதைவுள்ள குழந்தைகள் இதில் சேர்ந்து பயன்பெறலாம் என்று அவர் கூறினார்.

வசதிகள், உபகரணங்கள் மற்றும் மனிதவளம் ஆகியவை 100 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளையும், ஆட்டிஸம் தொடர்பான குறைபாடுகள் உள்ள 1,000 பேரையும் அழைத்துச் செல்லும் அளவுக்கு பெரியதாக இருந்தாலும், முதல் ஆண்டில் சுமார் 50 குழந்தைகள் வழக்கமான அமர்வுகளுக்காக பள்ளிக்கு வருவார்கள் என்றும் படிப்படியாக மையம் முழு அளவில் செயல்படத் தொடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழந்தைகளின் பெற்றோரின் செலுத்தும் திறனுக்கு ஏற்ப கட்டணம் வசூலிக்கப்படும். ஏழைக் குழந்தைகளுக்கு 50 சதவீதம் கட்டணச் சலுகையும் உண்டு. மேலும் இதே போன்ற வசதிகளை கொண்ட மற்ற நிறுவனங்களை விட வசூலிக்கப்படும் கட்டணங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கும். "வரவிருக்கும் நாட்களில், இது ஒரே இடத்தில் பல்வேறு சிகிச்சைகள் மற்றும் நவீன உள்கட்டமைப்புகளுடன் ஒரே மாதிரியான பள்ளியாக உருவாகும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். பல்வேறு வகையான சிகிச்சைகள் மூலம் பயன்பெறும் பள்ளியில் உள்ள 100 மாணவர்கள் மற்றும் 1,000 பிற குறைபாடுகள் உள்ள மாணவர்கள் தவிர, சுமார் 2,000 பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிழல் ஆசிரியர்களும் இந்த மையத்தின் மூலம் பயனடைவார்கள்.

சங்கத்தில் 120 உறுப்பினர்கள் உள்ளனர், அவர்களில் சிலரின் ஆதரவின் காரணமாக இந்த திட்டம் சாத்தியமானது. சங்கத்தின்





*ட்ரையம்ப் கார்னிவலில் ஒரு பங்கேற்பாளர்.*



RC *தானே ஹில்ஸ் உறுப்பினர்கள்.*

தலைவர் கோவிந்த் கேதன் மேலும் கூறுகையில், மையத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக, மையக் குழு அதன் சீரான செயல்பாட்டிற்கு நிதியுதவி அளித்துள்ளது. முன்னாள் தலைவர் வி.சந்திரசேகரன் மாதம் ரூ.1.2 லட்சமும், சங்கத்தின் உறுப்பினர் குமார் நடத்தும் ஃபோர்ட்ரஸ் நிறுவனம் மாதம் ரூ.50,000 வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

நவம்பர் 18 அன்று, இந்த மையத்தை PRID அசோக் மகாஜன் திறந்து வைத்தார், RID 3142 DG மிலிந்த் குல்கர்னி மற்றும் IPDG கைலாஷ் ஜெதானி, பாதிரியார் பிரேம் மற்றும் பாதிரியார் அருள் (MMVK) மற்றும் சந்தோஷ் இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த தத்தாராம் ஃபோன்டே ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

முன்னதாக நவம்பரில், சங்கம் சிறப்பு குழந்தைகளுக்கான டிரையம்ப் ரன் மற்றும் சிறப்பு குழந்தைகளுக்கான கார்னிவல்' என்ற தலைப்பில் மற்றொரு மெகா நிகழ்வுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த ஆண்டு 45 பள்ளிகளைச் சேர்ந்த 1,500 குழந்தைகள் மற்றும் 600 பெற்றோர்கள் 300 ஆசிரியர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். “இப்போது இது மக்கள் கவனிக்கும் நிகழ்வாக மாறியுள்ளது'' என்று கோவிந்த் கேதன் மேலும் கூறினார். ■

*சிறப்பு குழந்தைகளுக்கான ட்ரையம்ப் ரன் மற்றும் கார்னிவல் துவக்க விழா.*



# நிலையான, ஆரோக்கியமான உறுப்பினர் சேர்க்கை முறைக்கு முன்னுரிமை

கிரண் ஜெஹரா

பிரேசிலைச் சேர்ந்த RIPN மரியோ டி கமார்கோ, RC சாண்டோ ஆண்ட்ரேயின் உறுப்பினராக சேர அழைக்கப் பட்டபோது அவருக்கு வயது 23 மட்டுமே. "RIPN ஆக, ரோட்டரியில் எனது இளமைகால அறிமுகம் பலனளித்துள்ளது என்று நான் நம்புகிறேன். எனவே உங்கள் கண்களைத் திறந்தே இருங்கள், உங்கள் சங்கத்தில் சேர இளம் உறுப்பினரை அழைக்கும் போது, நீங்கள் வருங்கால RI தலைவரைக் கொண்டு வரலாம் என்று RC மெட்ராஸ், RID 3232-ல் ஏற்பாடு செய்யப்பட்ட சமீபத்திய ஆன்லைன் கூட்டத்தில் அவர் கூறினார்.

95 ஆண்டுகள் பழமையான சங்கத்தின் சாதனைகளை அதன் தலைவர் S ரவி வழங்கிய வரலாற்று வீடியோவைப் பார்த்து அவர் பாராட்டினார். RID 3232-ன் பிரிவைத் தீர்மானிக்கும் குழுவின் ஒரு பகுதியாக இருந்தவர் டி காமர்கோ. இந்த மாவட்டம் RID 3233 மற்றும் 3234 என அடுத்த ஆண்டு பிரிக்கப்படும்.

"RI தலைவர் கார்டன் மெக்கினலி மற்றும் RIPE ஸ்டெஃபனி உர்ச்சிக் அவர்களின் உறுப்பினர் இலக்குகளை அடைய உதவுவதன் மூலம்" உலகம் முழுவதும் நிலையான, ஆரோக்கியமான உறுப்பினர்களை உருவாக்குவதே அவரது முதன்மை யான முன்னுரிமையாகும். ரோட்டேரி யர்கள் தான் RI-ன் முன்னுரிமை என்றும், ரோட்டரி பிராண்டிற்கு புத்துயிர் அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் அவர் வலியுறுத்தினார்.

"புதிய பால் ஹாரிஸ்" என்று நினைக்கும் நபர்களைப் பற்றி தனது அதிருப்தியை வெளிப்படுத்திய டி கமார்கோ, ரோட்டரியில் உள்ள நம்பகத்தன்மையின் முக்கியத் துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார். "யாரும் பால் ஹாரிஸின்



மறுபிறவி அல்ல, ரோட்டரியை யாராலும் மீண்டும் உருவாக்க முடியாது" என்று அவர் கூறினார், மேலும் அங்கீகாரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள போலி சங்கங் களின் போலி உறுப்பினர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு ரோட்டரியை எச்சரித்தார்.

நிலையான உறுப்பினர் வளர்ச்சிக்கான சிறந்த உத்தியாக கூட்டாண்மைகளை உருவாக்குவதை அவர் பரிந்துரைத்தார். புதிய உறுப் பினர்களை ஈர்ப்பதற்காக வக்கீல்கள் சங்கம், வர்த்தக கூட்டமைப்பு மற்றும் வர்த்தக சபை போன்ற பல்வேறு தொழில்முறை அமைப்புகளுடன் ஈடுபடுமாறு இந்தியாவில் உள்ள ரோட்டேரியர்களை ஊக்குவித்தார். RID 3191 PDG-க்கள் சுரேஷ் ஹரி மற்றும் நாகேஷ் ஆகியோரின் உதவியுடன், டி கமார்கோ டிசம்பரில் தனது இந்திய வருகையின் போது சேம்பர் ஆஃப் காமர்ஸில் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள திட்டமிட்டுள்ளார். ஒரு மூலோபாய அணுகுமுறையை வலியுறுத்தி, "நாம் ஓடையிலிருந்து மக்களை பிடிக்கப் போவதில்லை, நாம் திறமையானவர்களை இலக்காகக் கொள்ள வேண்டும், எனவே இந்த தொழில்முறை நிறுவனங்களை நாம் அணுகவேண்டும்" என்றார்.

"முன்பு போட்டி இல்லை, ஆனால் இன்று தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உறுப்பினர் சேர்க்கையில் திறமையானவர் களுக்காக போராடுகிறார்கள். ஒவ்வொரு சங்கமும் அனுபவத்தைத் தரும் பழைய உறுப்பினர்கள் மற்றும் ஆற்றலைக் கொண்டுவரும் இளைய உறுப்பினர்களின் கலவையாக இருக்க வேண்டும்.

சென்னையில் நடந்த ஆன்லைன் சந்திப்பில் கலந்து கொண்ட பிரேசிலைச் சேர்ந்த இரண்டு RYE மாணவர்களிடம் உரையாற்றிய அவர், இந்தியாவில் உங்கள் நேரத்தை அனுபவிக்கவும். இளைஞர் பரிமாற்றத் திட்டம் ஒரு மாற்றத்தக்க அனுபவமாகும். இந்த பரிமாற்றத்தில் இருக்கும் போது நீங்கள் கற்றுக் கொள்ளும் முக்கிய பாடம், மற்றவர்களுக்கு மரியாதையை வளர்ப்பதாகும் என அறிவுறுத்தினார். 1990-ல் ரோட்டரியில் பெண்களை வரவேற்றது மற்றும் 2019-ல் ரோட்ராக்டை உயர்த்தியது போன்ற முக்கிய முடிவுகள் மரியாதையின் அடித்தளத்தில் வேரூன்றியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

சங்கம் மற்றும் மாவட்ட அளவில் ரோட்டரியில் ரோட்டராக்டை ஒருங்கிணைப்பது குறித்து கருத்து தெரிவித்த அவர், "வயதான ரோட்டரி மக்கள் தொகையை சிறிது நேரம் சிந்தித்துப் பாருங்கள், ரோட்டராக்ட் தான் முன்னோக்கி செல்லும் பாதை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்" என்றார். பிராந்தியமயமாக்கல் குறித்து, இந்தியாவில் ரோட்டரி எவ்வாறு செழித்து வருகிறது என்பதைப் புரிந்துகொள்ள நாம் நேரத்தை ஒதுக்க வேண்டும்.

RID 3234 DGE N S சரவணன், DGN வினோத் சரோகி, RID 3232 DG ரவி ராமன் மற்றும் PDG J ஸ்ரீதர் ஆகியோர் ரோட்டேரியர்களுடன் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கழக செயலாளர் M சேஷா சாய் நன்றியுரை வழங்கினார். ■

# உலக சாதனை படைத்த இளம் இந்திய மலையேறும் வீரர்

கிரண் ஜெஹரா



சான்வி சூத்

ரஷ்யாவின் மிக உயர்ந்த சிகரமான எல்ப்ரஸ் மலையின் பனி சரிவுகளில், 8 வயது சான்வி தனது தந்தை தீபக் சூத், RC ரூப்நகர், RID 3080 உறுப்பினர் உட்பட 50 மலையேற்ற வீரர்களுடன் கடினமான ஏறுதலை எதிர்கொண்டார். துரதிர்ஷ்டவசமாக சூத் கீழே விழுந்ததால் மலையேற்றத்தைத் அவரால் தொடர முடியவில்லை. மனம் தளராமல், வாக்கி டாக்கியில் தன் தந்தையின் ஊக்கமளிக்கும் வார்த்தைகளால் வழிநடத்தப்பட்ட சான்வி மலையேற்றத்தை தொடர்ந்தார். சவால்களை கடந்து, 5,642மீ உயரத்தில் உள்ள மலையுச்சியை அடைந்தார். இதன்மூலம் எல்ப்ரஸ் மலையுச்சியை அடைந்த இளம் வயது நபர் என்ற கின்னஸ் உலக சாதனை படைத்தார். ‘‘நான் மேகங்களின் மீது நிற்பது போல் உணர்ந்தேன். மலையுச்சியில் இந்தியக் கொடியை நடும் வாய்ப்பும் கிடைத்தது என்கிறார் சான்வி.

அவர்கள் திரும்பியதும், பஞ்சாப் முதல்வர் பகவந்த் சிங் மான், ஒரு மாநில அளவிலான நிகழ்வில் அவரை கௌரவித்தார். PRIP ராஜேந்திர சாபூ மற்றும் RI இயக்குநர்

ராஜு சுப்ரமணியன் ஆகியோர் RC ரூப்நகரின் நிறுவல் விழாவில் அவரைப் பாராட்டினர். இந்தியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் மற்றும் ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் ஆகியவற்றிலிருந்தும் அவர் அங்கீகாரம் பெற்றார். அமெரிக்காவை தளமாகக் கொண்டு 45 நாடுகளில் அலுவலகங்களைக் கொண்ட சர்வதேச ஆரம்பகால திறமை வழங்குநரான MentorX-ன் யூத் பிராண்ட் தூதராக இப்போது சான்வி உள்ளார்.

தனது தந்தையுடன் இமாச்சல பிரதேசத்தின் கேதார்நாத்தில் உள்ள அவரது பணியிடத்திற்கு சென்றபோது சான்வியின் பயணம் தொடங்கியது. சவாலான வானிலை இருந்தபோதிலும், அவர் குறிப்பிடத்தக்க ஆற்றலையும் உற்சாகத்தையும் வெளிப்படுத்தினார்.

ஆறு வயதில், சான்வி தனது தந்தையுடன் மணாலியில் ஒரு மலையேற்றத்தில் கலந்துக் கொண்டார், ஒரே நாளில் 18 கிமீ கடந்து ரோஹ்தாங் பாஸ் மலையேற்றத்தை  முடித்தார். அடுத்து, அவர்கள் எவரெஸ்ட் பேஸ் கேம்ப் மலையேற்றத்தை முடித்தனர், மேலும் சர்வதேச சிகரங்களை தேர்ந்தெடுத்தனர். அவர்கள் முதலில் அதன் தட்பவெப்ப நிலை மற்றும் நிலப்பரப்புக்காக



அவரது தந்தை தீபக் சூத்துடன்.

ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரமான கிளிமஞ்சாரோவைத் தேர்ந்தெடுத்தனர். ஜூலை 2022-ல், சான்வி இந்த மலையேற்றத்தை வெற்றிகரமாக முடித்தார். மே 2023-ல், ஆற்றல்மிக்க தந்தை-மகள் கூட்டணி ஆஸ்திரேலியாவின் மிக உயர்ந்த சிகரமான 2,228 மீ-மவுண்ட் கோசியுஸ்கோவைக் கைப்பற்ற முடிவு செய்தனர். “ஒப்பீட்டளவில் எளிதான மலையேற்றம். நாங்கள் உச்சியை அடைந்த தருணத்தில் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து கொண்டாடினோம்” என்று அவர் மேலும் கூறுகிறார்.



*சான்வி உஷா மற்றும் PRIP ராஜேந்திர சாபூ மற்றும் RID ராஜு சுப்ரமணியன் ஆகியோரால் பாராட்டப்படுகிறார். மேலும் படத்தில் சான்வியின் தந்தை தீபக் சூட், RC ரூப்நகர் தலைவர் நம்ரிதா பர்மர், சங்க உறுப்பினர் அஜய் தல்வார் மற்றும் DGE ராஜ்பால் சிங் உள்ளனர்.*

சான்வி ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கமின்றி தனது மலையேற்றங்களைத் தொடங்கும் போது, அத்தகைய சாதனைகளால் வரும் பொறுப்பைப் புரிந்துகொள்ள அவளுக்கு உதவ விரும்பினோம். அவள் விரும்பிய மற்றும் ஆதரிக்க விரும்பும் ஒரு காரணத்தைப் பற்றி சிந்திக்கும்படி அவளிடம் கூறினோம். அவள் “கேர்ள் பவர்” என்ற கருப்பொருளைக் முன்வைத்தாள் மற்றும் தனது எதிர்கால மலையேற்றங்களின் போது பெண்களுக்கு அதிகாரமளித்தலை ஊக்குவிப்பார் என்று சூத் புன்னகைக்கிறார்.

“உங்கள் குழந்தையின் திறனை உணர்ந்து வளர்க்கவும், அவர்களின் தனித்துவத்தை தழுவி, அவர்கள் பெரிய உயரங்களை அடைய செய்யவும்” என அவர் பெற்றோர்களை ஊக்குவிக்கிறார்.■

# பெண்கள் நலனில் கவனம் செலுத்தும் RC ஜெய்ப்பூர் குருகுல்

ரஷீதா பகத்

RC ஜெய்ப்பூர் குருகுல் (RCJ குருகுல்), RID 3056-ல் மொத்தம் உள்ள 264 உறுப்பினர்களில் 80 சதவீதம் பெண்கள் தான். எனவே அச்சங்கம் செய்யும் பெரும்பாலான திட்டங்கள், குறிப்பாக உடல் மற்றும் மன ஆரோக்கியம் தொடர்புடைய திட்டங்கள், பெண்களை மையமாகக் கொண்டதாக இருக்கும்.

ஜெய்ப்பூரில் உள்ள IIS டீம்ட் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் துறையின் தலைவரான பிரின்சி தாமஸ் தலைமையில் சமூகத்திற்கான நலத் திட்டங்களைச் செய்வதில் அச்சங்கம் மிகவும் தீவிரமாக உள்ளது. "எங்களுடையது ஒரு நிறுவன அடிப்படையிலான சங்கம் ஆகும், இதில் பெரும்பாலான உறுப்பினர்கள் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத் தரப்பு ஊழியர்கள். பல பெண்கள், வேலைக்குச் செல்லும் வழியில் இருக்கும் ஒரு சேரியில் வசிப்பவர்களைக் கவனித்தனர். மேலும் அவர்கள் ஒழுக்கமான வாழ்க்கையை நடத்துவதற்கும் அவர்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் போராடுவதைக் கவனித்தனர்.எனவே செப்டம்பர் இறுதியில் நாங்கள் அனைவருக்கும் உணவு என்ற 10 நாள் இயக்கத்தை ஏற்பாடு செய்தோம். அதில் பின்தங்கிய குடிசைவாசிகளுக்கு உணவு வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் கோதுமை மாவு, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை சேகரித்து குடிசைவாசிகளுக்கு விநியோகம் செய்தனர். ஊட்டச் சத்து குறைபாட்டின் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை அவர்கள் எழுப்பினர் மற்றும் சமூகத்தில் உள்ள ஏழைகளுக்கு உதவ இதே போன்ற முயற்சிகளைத் தொடர திட்டமிட் டுள்ளனர். இந்த இயக்கத்தின் மூலம் சுமார் 100 பேர் பயனடைந்தனர்.

*சங்கம் மூலம் குடிசைவாசிகளுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.*



முழு குடும்பத்திற்கும் அனைத்து கவனிப்பையும் வழங்கி, அதே வேளையில் பெரும்பாலும் தங்கள் சொந்த ஆரோக்கியத்தை பெண்கள் புறக்கணிக்கிறார்கள் என்ற உண்மையை மனதில் வைத்து, பெண்கள் பெரும்பான்மையாக உள்ள இந்த சங்கத்தின் தலைவர்கள் பெண்களை மையமாகக் கொண்ட உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளனர். அவ்வப்போது ''பெண்களுக்கான ஆரோக்கியம்'' என்ற தலைப்பில் சுகாதார பேச்சுக்களை நடத்துகின்றனர். ''சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி, பெண்களின் ஆரோக்கியத்திற்கான ஊட்டச் சத்து மற்றும் உணவுக் குறிப்புகள், வழக்கமான உடற்பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் பெண்களுக்கு ஏற்ற உடற்பயிற்சிகளின் வகைகள், அவர்களின் மகளிர் மருத்துவ ஆரோக்கியம் மற்றும் வழக்கமான பரிசோதனையின் முக்கியத்துவம் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது'' என்று பிரின்சி கூறினார்.

இந்த அமர்வு முன்வைத்த பிரச்சினைகள் குறித்து, ''பல சமயங்களில், இதுபோன்ற பேச்சுக்கள் ஏகபோகங்கள் அல்லது விரிவுரைகளாக இருக்கும். ஆனால், இந்த குறிப்பிட்ட அமர்வில், மங்கலம் மெடிசிட்டியைச் சேர்ந்த சிறுநீரக மருத்துவ நிபுணர் மற்றும் மகப்பேறு மருத்துவர் டாக்டர் இந்திரா சரினிடம் பங்கேற்ற பெண்கள் பல கேள்விகளைக் கேட்டனர், நாங்கள் பேச்சை சுருக்கி, இருவழி உரையாடலுக்கு அமர்வைத் திறந்தோம்'' என்று அவர் கூறுகிறார்.

டாக்டர் இந்திரா மகளிர் மருத்துவ ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதித்தார், மேலும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய், கருப்பை மற்றும் மார்பகப் புற்று நோய் போன்ற பிரச்சனைகளைக் கண்டறிந்து தடுப்பதற்கு வழக்கமான பரிசோதனை அவசியம் என்று விளக்கினார். அமர்வின் போது உறுப்பினர்கள் தங்கள் கேள்விகளை முன்வைக்க வாய்ப்பு கிடைத்தது. பிரசவத்திற்குப் பின் செய்ய வேண்டிய இடுப்புப்பகுதி உடற் பயிற்சிகள் பற்றி விவாதிக்கப் பட்டது, மற்றும் சிறுநீர் கட்டுப்பாடு இழப்பு குறித்து பல கேள்விகள் கேட்கப்பட்டன. பெரும்பாலான சமயங்களில் பெண்கள் இதுபோன்ற பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு வெட்கப்படுவார்கள் அல்லது தயங்குவார்கள், வெளிப்படையாகச் சொல்வதானால், இந்தக் கேள்வி களைக் கேட்க சரியான நபர் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் இந்த அமர்வில், அவர்கள் மனதைத் திறந்து, அவர்களில் பலர் எதிர்கொள்ளும் இந்த சிக்கலைச் சமாளிக்க என்ன வகையான தீர்வு நடவடிக்கை உள்ளது என்று கேட்டார்கள் என்று அவர் கூறினார்.

மருத்துவரும் கேள்விகளுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் பதிலளித்தார், மேலும் ஒரு பெண் 40, 50 அல்லது 60 வயதாக இருந்தாலும், அத்தகைய பிரச்சனைகளை சரியான உடற்பயிற்சி களால் சரிசெய்ய முடியும் என்றார். ''அவர் பயிற்சிகளை செய்துக்காட்டி மற்றும் பங்கேற்பாளர்களை அந்த இடத்திலேயே அந்த பயிற்சிகளை செய்ய வைத்தார்'' என்றார் டாக்டர் மேகா ஆர்யா, சங்க செயலாளர்.



*ஜெய்ப்பூரில் உள்ள அப்னா கர் ஆசிரமத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.*

மிகவும் வெற்றிகரமாக அமைந்த இந்த அமர்வில், மனநலப் பிரச்சினைகள், வேலை-வாழ்க்கை சமநிலை மற்றும் மன அழுத்தத்தை எவ்வாறு கையாள்வது என்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. சந்திப்பில் கலந்து கொள்ள முடியாத சங்க உறுப்பினர்கள் ஆன்லைனில் இணைந்தனர்.

சங்கத்தின் பாட்காஸ்ட் தொடரின் கீழ் செய்யப்பட்ட மற்றொரு வெற்றிகரமான திட்டம், ''கேம் செஞ்சிங் லேசன்ஸ் : மைண்ட் டு மெடல்ஸ்'' என்ற தலைப்பிலான ஒரு நிகழ்ச்சியாகும். இதில் ஒலிம்பியனும் தொழில்முனைவருமான ஷகுன் சௌத்ரி தனது அனுபவங்களைப் பற்றி பேசினார். இந்த பாட்காஸ்ட்கள் (Podcast) மூலம், தங்கள் தொழிலில் சிறந்து விளங்குவது மட்டுமின்றி சமூகத்தில் ஒரு நல்ல மாற்றத்தைத்

தூண்டும் குறிப்பிடத்தக்க நபர்களின் கதைகள், ஞானம் மற்றும் உத்வேகம் ஆகியவற்றை சங்கம் ஆராய்கிறது. இந்த எபிசோடில், விளையாட்டு வீரரும், நாரங்கா ஆர்கானிக் பண்ணையின் நிறுவனருமான ஷகுன், ஒரு திறமையான விளையாட்டு வீரராகவும், தொழில்முனைவோராகவும் தனது பாத்திரங்களில் வெற்றியை அடைவதற்கு ஆரோக்கியத்தின் வலிமையை எப்படிப் பயன் படுத்தினார் என்பதைப் பற்றி ஆர்வத்துடனும் விவாதித்தார் என ப்ரின்சி விளக்கினார்.

இந்த குறிப்பிட்ட ஆண்டில், பாட்காஸ்ட் (Podcast) தொடர் மன ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துகிறது. மேலும் பல்வேறு வழிகள் மூலம், அதில் விளையாட்டும் ஒன்று, மக்கள் தங்கள் மன ஆரோக்கியத்தை எவ்வாறு கவனித்துக் கொள்ளலாம் என்று அறிவுறுத்துகிறது என்று அவர் மேலும் கூறினார்.

## மாதவிடாய் கட்டுக்கதைகளை உடைத்தல்

RCJ குருகுல், யுனிசார்ம் உடன் இணைந்து, ராஜஸ்தானில் உள்ள ராஜ்கியா மகாத்மா காந்தி வித்யாலயாவில் மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான மாதவிடாய் ஆரோக்கிய அமர்வை ஏற்பாடு செய்தது, இந்த அமர்வு பிராந்தியத்தில் நிலவும் கட்டுக் கதைகள் மற்றும் மூடநம்பிக்கைகளை தகர்த்து மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் குறித்த சரியான கண்ணோட்டத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.'' இது அவர்களின் உடலைப் புரிந்துகொள்ளவும், அவர்களின் மாதவிடாயை பாதுகாப்பாகவும், சுகாதாரமாகவும் நிர்வகிக்கவும், அவர்களின் மாதவிடாய் காலத்தில் நம்பிக்கையுடனும், சக்தியுடனும் உணர உதவுகிறது. சமையலறைக்குள் நுழைவதைத் தவிர்ப்பது, ஆண்களைத் தொடுவதைத் தவிர்ப்பது அல்லது அவர்கள் முன் வராமல் இருப்பது போன்ற சமூகத்தில் இருக்கும் மாதவிடாய் தொடர்பான சில கட்டுக்கதைகள் பற்றிய அவர்களின் கேள்விகளுக்கு இந்த அமர்வு பதிலளித்தது. இந்த கட்டுக்கதைகளை அகற்றுவது முக்கியம் மற்றும் பெண்கள் தங்கள் இளமைப் பருவத்தை நேர்மறையாகத் தொடங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்பதை நாங்கள் நம்புகிறோம். மாதவிடாய் சுழற்சிகள் இயல்பானவை என்பதையும், இது எல்லாப் பெண்களும் பகிர்ந்துகொள்ளும் அனுபவம் என்பதையும் அவர்களுக்கு எடுத்துரைக்கிறோம். இது தீயது என்ற அவர்களுக்குள் விதைக்கப்பட்ட தவறான எண்ணத்தை நீக்குகிறோம்'' என்றார் பிரின்சி. கூட்டத்தின் முடிவில் பெண்களுக்கு சானிட்டரி பேடுகள் வழங்கப்பட்டன.

## மார்பக புற்றுநோய் தடுப்பு

சங்க செயலாளர் மேகா மேலும் கூறுகையில், மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை நினைவுகூறும் வகையில், சங்கம், IIS உடன் இணைந்து, மார்பக புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்கும், அதனை தடுப்பதற்கும் பிரபல






*மேலே: ஊட்டச்சத்து உணவு கர்ப்பிணிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. கீழே: ஒலிம்பியன் ஷகுன் சௌத்ரியுடன் (வலது) பாட்காஸ்ட்.*

*கீழே: ராஜ்கியா மகாத்மா காந்தி வித்யாலயாவில் சானிட்டரி நாப்கின்கள் பெண்களுக்கு விநியோகிக்கப்பட்டது.*






*மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான மாதிரிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.*

புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் உத்தம் சோனியின் பேச்சை ஏற்பாடு செய்தது. மார்பகப் புற்றுநோய்க்கான ஆபத்துக் காரணிகள் குறித்தும், அந்த காரணிகளைக் குறைக்க தொடர்ந்து உடற்பயிற்சி செய்தல், அளவான எடையைப் பராமரித்தல், ஆரோக்கிய மான உணவு உண்ணுதல், மது அருந்துவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் புகைபிடித்தல் அல்லது புகையிலைப் பொருட்களை உட்கொள்வதை முற்றிலுமாகத் தவிர்த்தல் போன்ற செயல்பாடுகள் பற்றியும் அறுவை சிகிச்சை நிபுணர் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

மற்ற திட்டங்களில் வீடற்றவர்கள் மற்றும் தெருக்களில் கைவிடப் பட்டவர்களுக்கு தங்குமிடம் அளிக்கும் அப்னா கர் ஆசிரமத்தின் வாசிகளுக்கு உணவு வழங்குதல் மற்றும் ஸ்ரீ காஞ்சன் டயாலிசிஸில் டயாலிசிஸ் அமர்வுகளை பரிசாக வழங்குதல் ஆகியவை அடங்கும்.

ஜெய்ப்பூரில் உள்ள மகாத்மா காந்தி அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, துடிப்பான சுவரோவியங்களுடன் கூடிய வண்ணமயமான சுவரை, சங்க உறுப்பினர்கள் பரிசளித்த திட்டத்திற்கு நன்கொடை அளித்த PDG அசோக் குப்தாவுக்கு அவர் நன்றி தெரிவித்தார். சுவரோவியங்களை IIS டீம்ட் பல்கலைக்கழகத்தின் நுண்கலை மாணவர்களுடன் இணைந்து பள்ளியின் NSS மாணவர்கள் வரைந்தனர்.■



NSS *மற்றும் நுண்கலை மாணவர்கள் மகாத்மா காந்தி அரசு பள்ளியின் சுவர்களில் ஓவியம் வரைகிறார்கள்.*



# ரோட்டரி ஆளுநர்



**சுப்பாராவ் ரவுரி**
மென்பொருள் பொறியாளர்
RC விஜயவாடா மிட்டவுன், RID 3020

## சக ரோட்டேரியன்களுடன் தொழில் உறவுகளை வளர்த்துக் கொள்ளுங்கள்

2008–09-ம் ஆண்டில் DG சுப்பாராவ், சகோதரத்தை, வளர்ப்பது, தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ரோட்டரியில் சேர்ந்தார். ரோட்டரி மீதான நம்பிக்கை வலுவாக இருப்பதால், தொழில் உறவுகளை வளர்த்துக் கொள்ள ரோட்டேரியன்களை ஊக்குவித்து வருகிறேன் என்கிறார் அவர். உறுப்பினர்களின் தனிப்பட்ட ஆர்வம் என்ன என்பது குறித்த தரவுகளை உருவாக்குவமாறு ரோட்டரி சங்கத் தலைவர்களை அவர் கேட்டுக் கொண்டார். உறுப்பினர்களுக்கு ஆர்வம் உள்ள பணிகளை கொடுத்தால் அவர்கள் அதை சிறப்பாக செய்ய உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சங்கத்தின் தலைவர்கள் மற்றும் செயலர்கள் மாவட்டம் முழுவதும் உள்ள இதர சங்கங்களின் செயல்பாடுகளைப் பற்றி புரிந்து கொள்ள வசதியாகவும் சங்கத்தை மேம் படுத்தவும் கிளப் விசிட் பாஸ்போர்ட் என்னும் முறையை தொடங்கியுள்ளார். உறுப்பினர்கள் எண்ணிக்கையை 5 சதவீதம் உயர்த்தவும் (அதாவது 4,600 என்பதிலிருந்து 5000-மாக உயர்த்த) இலக்கு நிர்ணயித்துள்ளார். கிராமப்புற சங்கங்களுக்கு அவர்கள் திறமைக்கு ஏற்ப இலக்குகளை நிர்ணயிக்கிறார். TRF நிதியாக 1 மில்லியன் டாலர் இலக்கு நிர்ணயித்துள்ளார்.

லீட் த லீடர்ஸ் திட்டத்தால் ஈர்க்கப்பட்ட சுப்பாராவ் ரவுரி, தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் ரோட்டரி செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறார். மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் CSR நிதி மூலம் 21,000 மம்மோகிராபி கருவிகளை நிறுவ திட்டமிட்டுள்ளார்.■



**பவன் கண்டேல்வால்**
விருந்தோம்பல், RC ஆல்வார், RID 3053

## சங்கங்களுக்கான உலகளாவிய மானிய உதவி விதிகளை எளிமைப்படுத்துங்கள்

பவன் கண்டேல்வால் 1998-ம் ஆண்டிலிருந்து ரோட்டரி உறுப்பினராக இருந்து வருகிறார். இந்த ஆண்டிற்கான அவரது திட்டங்களில் மாவட்டம் முழுவதும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 20 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்பதும் ஒன்று. பன்முகத்தன்மையை அவர் வலியுறுத்துகிறார்.

மாவட்டத்தில் உள்ள 17 பெரு நன்கொடையாளர்களை அறிவித்திருந்தாலும், TRF நிதி திரட்டுவதில் உள்ள சவால்களை அவர் ஒப்புக்கொள்கிறார். சர்வதேச மானியங்களில் உள்ள தொழிநுட்ப அம்சங்களை சரிவர புரிந்து கொள்ளாததால் உறுப்பினர்கள் உள்ளூர் திட்டங்களுக்கு கையில் உள்ள பணத்தை பயன்படுத்த முடியும் என நினைக்கிறார்கள். உறுப்பினர்களால் அளிக்கப்பட்ட ரூ.3.5 கோடி நிதியில் ஆல்வாரில் இரத்த வங்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச மானியத்துக்கான விதிமுறைகள் எளிமைப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் சங்கங்கள் TRF நிதிக்கு பங்களிக்க ஊக்குவிக்க முடியும் என்கிறார் அவர்.

முக்கிய நகரங்களில் கவனம் செலுத்துவதுடன், கிராமப்புறங்களில் திட்டங்களைச் செயல்படுத்த கார்ப்பொரேட் நிறுவனங்களின் ஆதரவு அதிக அளவில் தேவை. ரோட்டரியை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும்.■



Meet your Governors - Tamil - January 2024.indd 62 1/3/2024 11:59:53 AM

# களுடன் சந்திப்பு

கிரண் ஜெஹரா



## நஸிர் போர்ஸத்வாலா

கணினிகள், RC கோல்ஹாபூர் மிட்டவுன், RID 3170

### ரோட்டரியில் இருப்பதன் நோக்கத்தை உறுதிப்படுத்தவும்

1996-ஆம் ஆண்டு முதல் ரோட்டேரியனாக இருக்கும் DG நஸிர் போர்ஸத்வாலா, ரோட்டரி நிதி ஆதாயங்களுக்கு அப்பால் தனிநபர்களை வடிவமைக்கிறது என்று நம்புகிறார். ரோட்டரியின் சாராம்சத்தை புரிந்துகொண்டு மதிக்கும் 450 புதிய உறுப்பினர்களை ரோட்டரியில் இணைத்துள்ளார். அவரது சங்கம் மாவட்டத்தில் அதிக உறுப்பினர்களை தக்கவைத்துக் கொண்டுள்ள சங்கமாகும். இதற்காக அவரது சங்கம் மறைந்த அவரது பெற்றொரின் பெயரிலான கோப்பையை பெறுகிறது.

போர்ஸத்வாலா, பங்களிக்காத உறுப்பினர்களை வெளியேற்றவும், ரோட்டரியில் இருப்பதன் நோக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்துங்கள் என்கிறார்.

அவரது மாவட்டம் 3 மாநிலங்களில் செயல்படுகிறது. அனைத்தும் பெண் உறுப்பினர்களைக் கொண்ட ஏழு சங்கங்கள் வெற்றிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி வருவது குறித்து பெருமைப்படுகிறார். நடப்பு ஆண்டில் ஒரு சங்கம் CSR திட்டத்தில் இறங்கினால் திட்டங்களை ஜூன் 2024-க்குள் முடிக்க வேண்டும் என்கிறார்.

1 மில்லியன் டாலர் TRF இலக்குடன் அவரது மாவட்டம் 55 நன்கொடையாளர்களை அறிவித்துள்ளது. ஹுப்ளியில் ஒருபால் வங்கி, இசால்கரஞ்சியில் ஐந்து மகிழ்ச்சிப் பள்ளிகள், மாவட்டம் முழுவதும் ஐந்து டயாலிஸிஸ் மையங்கள் உள்ளிட்ட 8 உலகளாவிய மானிய உதவி திட்டங்களைத் தொடங்கியுள்ளது.■



## T R விஜயகுமார்

பிளண்டிங் அண்ட் பாட்டிலிங்

RC திருச்சூர் சென்டரல், RID 3201

### ரோட்டரி கதைகளை பகிர்ந்துகொள்ளுங்கள்

1987-ஆம் ஆண்டிலிருந்து ரோட்டரி உறுப்பினர், இரண்டாம் தலைமுறை ரோட்டேரியன், T R விஜயகுமார். TRF பங்களிப்பிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் தமது மாவட்டத்தின் பாரம்பரியத்தை தொடர்வதை நோக்கமாக கொண்டுள்ளார். புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும்போது சங்கத்தின் தலைவர்கள் ரோட்டரி கதைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும் என்கிறார். ரோட்டரி பற்றி அடிக்கடி பேசுவது தான் ரோட்டரியில் இருக்கும் உறுப்பினர்கள் தங்கள் நோக்கத்தை புரிந்துகொள்ள உதவும் ஒரே கருவி என்கிறார். மாவட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையை 6,500 லிருந்து 10,000 மாக உயர்த்துவதே தமது லட்சியம் என்கிறார்.

பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அங்கீகரிக்கும் அவர், ரோட்டரிக்கு அதிக உறுப்பினர்களை ஈர்க்க நெகிழ்வான சந்திப்பு தேவை என்று பரிந்துரைக்கிறார். மாவட்டத்தில் தற்போது ஐந்து CSR முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. TRF பங்களிப்புக்கான அவரது இலக்கு 2.5 மில்லியன் டாலர். அவர் ஏற்கெனவே 1.1 மில்லியன் டாலரை தாண்டிவிட்டார்.

மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க திட்டங்களில் ரூ.58 லட்சம் சர்வதேச மானிய உதவி திட்டமான முகச்சீரமைப்பு திட்டமும் அடங்கும். இதன் மூலம் 50 அறுவைச்சிகிச்சைகள் முடிக்க உறுதிபூண்டுள்ளார். கூடுதலாக மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதில் இவரது மாவட்டம் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.■



Meet your Governors - Tamil - January 2024.indd 63 1/3/2024 11:59:54 AM

# ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கான மந்திரங்கள்

பரத் — ஷலன் சவூர்

சுற்றிப் பாருங்கள், அடுத்த தலைமுறை உங்களுடைய தலைமுறையை விட உயரமாக இருப்பதை நீங்கள் பொதுவாகக் காண்பீர்கள். மக்களின் ஆயுட்காலமும் அதிகரித்துள்ளது. ஆயினும்கூட, நீண்ட வாழ்க்கை சிறப்பானது என கூறமுடியாது. ஆயுட்காலம் என்பது வாழ்க்கையின் எதிர்பார்ப்புகளுடன் பெரிதும் தொடர்புடையது. அமெரிக்க எழுத்தாளர் டான் ப்யூட்னரின் ஆவணப்படம் உண்மையில் நீண்ட ஆயுளுக்கான பாடம். மேலும் அப்படத்தில் வரும் 263 நூறு வயது நிறைந்தவர்கள் அப்படத்தின் உருவங்கள். மேலும், அவர் மகிழ்ச்சி-உடல்நல வாழ்விடத்தை ஆராயும்போது, வாழ்க்கை மிகவும் எளிமையானது மற்றும் ஆழமானது என்பதை நாம் உணர்கிறோம்.

அல்லது ப்யூட்னரின் வார்த்தைகளில்: 'நீண்ட, ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ இளமையின் நீரூற்றோ அல்லது நாம் எடுத்துக் கொள்ளக்கூடிய மாத்திரையோ எதுவும் கிடையாது. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஏற்ற சூழலை உருவாக்க பல சிறிய மாற்றங்கள் தேவை. அப்படி நாம் பின்பற்ற விரும்பும் விளைவுகளை அடைந்த மக்கள் தொகை ஒன்று உள்ளது.

### ப்யூட்னரின் ஒன்பது-கோர்ஸ் ஊட்டச்சத்து விருந்து இங்கே

- சுறுசுறுப்பான வாழ்க்கையை உணர்வுபூர்வமாகத் தேர்ந்தெடுங்கள். உங்கள் வாழ்க்கை வெறும் இருப்பு அல்ல. இது ஒரு இயக்கம். நகர்ந்தக்கொண்டே இருக்கவேண்டும் என்பதை உங்கள் குறிக்கோளாக ஆக்குங்கள்.
- நீங்கள் ஒரு நோக்கத்திற்காக பிறந்தீர்கள் என்று நம்புங்கள். உங்கள் ஆர்வத்தைக் கண்டறியவும். ஒருவேளை, உங்கள் அபார யோசனையை நீங்கள் கண்டுபிடித்தால் அதனுடன் செல்லவும். ஒவ்வொருவரும், அறியாமலே, தனக்குள்ளேயே நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு வெற்றிடத்தை வைத்திருக்கிறார்கள். வாழ்க்கை சோகமானதல்ல. அது உங்கள் சுவாசத்தை எடுத்துச் செல்லும் தென்றல். இப்போது உங்களிடம் ஒரு குறிக்கோள் உள்ளது. அதற்காக குரல் கொடுங்கள். அதற்காக வாழுங்கள். "உங்கள் நோக்கத்தை அறிவது ஏழு வருட கூடுதல் ஆயுட்காலம் கொடுக்கும்" என ப்யூட்னர் கூறுகிறார்.
- மன அழுத்தம், நவீன வாழ்க்கை என்று தெருவை முற்றுகையிடும் வில்லன். 'உலகின் மிக நீண்ட காலம் வாழும் மக்களிடம் நம்மிடம் இல்லாதது ஒன்று உள்ளது, அது மன அழுத்தத்தை போக்குவதற்கான நடைமுறைகள். ஒகினாவாவை சேர்ந்தவர்கள் தங்கள் மூதாதையர்களை நினைவுகூர ஒவ்வொரு நாளும் சில நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறார்கள். அட்வென்ட்டிஸ்டுகள் பிரார்த்தனை செய்கிறார்கள்,



இகாரியர்கள் தூங்குகிறார்கள், சார்டினியர்கள் மகிழ்ச்சியான நேரத்தைப் பின்பற்றுகிறார்கள்'' என ப்யூட்னர் கூறுகிறார்.

- பெரும்பாலான மக்கள் தங்கள் தினசரி உணவுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துகிறார்கள். ஒகினாவா சேர்ந்தவர்களும் அதை செய்கிறார்கள் – ஒரு சிறிய மாற்றத்துடன். தங்கள் வயிறு 80 சதவீதம் நிரம்பியவுடன் சாப்பிடுவதை நிறுத்தவேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்கள். 'பசி இல்லாமல் இருப்பதற்கும், வயிறு நிரம்பியிருப்பதற்கும் இடையிலான 20 சதவீத இடைவெளி எடை இழப்பதற்கும் அதிகரிப்பதற்கும் உள்ள வித்தியாசமாக இருக்கலாம். நீல மண்டலத்தில் உள்ளவர்கள் மதியம் அல்லது மாலை நேரத்தின் மிகச்சிறிய உணவைச் சாப்பிடுவார்கள், அதற்கு பின் சாப்பிட மாட்டார்கள்' என ப்யூட்னர் மேலும் கூறுகிறார்.
- பெரும்பாலான நூறு வயது நிரம்பியவர்கள் பசுமையான உணவை தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் தாவரங்களை அதிகமாக விரும்புவார். சிவப்பு இறைச்சி அளவிடப்பட்டு உட்கொள்ளப்படுகிறது.
- இது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடும். அனைத்து நீல மண்டலங்களிலும் உள்ள மக்கள் மது அருந்து கின்றனர். ஆனால் மிதமான அளவில். சொல்லப்போனால் மிதமான குடிகாரர்கள் குடிக் காதவர்களை விட அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களின் அமுதம் தினசரி இரண்டு கிளாஸ் ஒயின் மட்டுமே. அதும் நட்பு வட்டாராத்துடன் சேர்ந்துதான். அதற்கான நேரம்? மாலை ஐந்து.
- கடவுள் நம்பிக்கை கொண்ட வர்கள் நம்பாதவர்களை விட அதிக எண்ணிக்கையில் (263:5) உயிர் வாழ்கின்றனர். "ஒரு மாதத்திற்கு நான்கு முறை இது போன்ற ப்ராத்தனை சேவைகளில் பங்குபெறும் விசுவாசிகள் தங்கள் ஆயுட்காலத்தில் 4 முதல் 14 ஆண்டுகள் வரை சேர்த்துள்ளனர்'' என்று ப்யூட்னரின் கணக்கெடுப்பு வெளிப்படுத்துகிறது.
- பெரும்பாலான இந்தியர்கள் மகிழ்ச்சியுடன் இதனை ஒப்புக் கொள்வர். பெற்றோர்கள், தாத்தா பாட்டிகளுடன் வசிப்பது அல்லது அவர்களுக்கு அருகில் வசிப்பது, உடல்நல அபாயங்கள் மற்றும் இறப்பு விகிதங்களைக் குறைக்கிறது. அதேபோல, ஒரு வாழ்க்கைத் துணையை பெறுவது ஆயுட்காலத்தில் மூன்று ஆண்டுகள் வரை சேர்க்கும்.
- அவர்கள் பிறந்த அல்லது உருவாக்கிக்கொண்ட நட்பு/ குடும்பம் குழுக்களுடன் புழங்கும் நபர்கள் நல்ல உடல்நலப் பலன்களை அனுபவிப்பதையும் ப்யூட்னர் கண்டறிந்தார்.

### பசுமையை நோக்கி செல்க

உணவைப் பற்றி சற்று பார்ப்போம். 80 சதவீதம் வயிறு நிரம்பல் ஒரு நல்ல செயல். வயிற்றின் செரிமான நோக்கங்களுக்காக அந்த இடம் தேவைப்படுகிறது. வயிற்றில் இடம் இல்லாதது செரிமான சாறுகளின் சீரான ஓட்டத்தை தடுக்கிறது, மேலும் அமிலத்தன்மை மற்றும் பிற வயிறு தொடர்பான பிரச்சனைகளை உருவாக்குகிறது. ஊட்டச்சத்தை மேம்படுத்த உங்கள் உணவை சமநிலைப்படுத்துங்கள். புரதம்-கார்போஹைட்ரேட்டுகள் இணையாக உங்கள் தட்டில் போதுமான காய்கறிகள் இருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.

ஒத்த எண்ணம் கொண்டவர்களின் குழுவை உருவாக்கவும். இந்த குழு உங்கள் செயல்திட்டத்திற்கு வேகத் தையும் ஊக்கத்தையும் கொடுக்கும்.

உங்கள் ஊழியர்கள்/சமூகத்தை ஆரோக்கியமான முழுமையான வாழ்க்கை முறைக்கு ஊக்குவிக்கவும் நிலையில் நீங்கள் இருந்தால் அதை செய்யுங்கள். நகரத்தில் நடைபயிற்சி செய்ய மற்றும் மிதிவண்டி ஓட்டக்கூடிய இடங்களை உருவாக்கவும்.

### சொர்க்கத்தின் உவமை

மாற்றம் மற்றும் தொடர்ச்சியின் எதிரே நாம் நிற்கும்போது நமது இருப்பை ஆராய இது நம்மை கட்டாயப்படுத்து கிறது. இயற்கையுடன் சமாதானம் ஆக, மனிதனே இயற்கையாகச் செயல்பட வேண்டும் என்பதை உணர வேண்டும். ஏனென்றால், அவன்தான் வேற்றுகிரகவாசியே தவிர விண்வெளியில் இருந்து வந்த கற்பனை உயிரினம் அது அல்ல. உண்மையில், மனிதன் தான் அமைதியின் வில்லன். பூமித்தாய் பல நூற்றாண்டுகளாக இத்தகைய சுற்றுச்சூழல் துஷ்பிரயோகத்தை அவனது இனத்திலிருந்து உள்வாங்கிகொண்டிருக்கிறாள். இன்றைய மனிதன் தனது சொந்த மற்றும் தனது முன்னோர்களின் சுற்றுச்சூழல் தவறான நடத்தை களுக்கு நெருக்கடி சிலுவையைச் சுமக்கிறான். அவன் தனது சுற்றுப் புறங்களிடம் சரணடைந்து உதவி செய்ய வேண்டும், தனது சொந்த வாழ்க்கையையும் தன்னைச் சுற்றியுள்ள வாழ்க்கைகளையும் சரிசெய்ய வேண்டும். மனிதன் நீண்ட காலமாக தனக்குள்ள வழியில் சென்றால், நீண்ட ஆயுட்காலம் பற்றிய ப்யூட்னரின் படிப்பினைகள் பயனற்றதாக போகும்.

புவி வெப்பமடைதல் மற்றும் அதன் இயற்கையான விளைவுகளான தீ மற்றும் புயல்கள், பூமியின் துருவங்கள் மற்றும் மலை உச்சியில் இருக்கும் பனி உருகுதல் ஆகியவை நம்மிடம் நிலையாக இருக்க வந்து ள்ளது. மனிதன் தனது தற்போதைய இடத்தில் அமைதியாக இருக்கவும் அந்த நிலையைத் தக்கவைக்கவும் பூமியின் டிரெட்மில்லில் சுற்றுச் சூழலுக்காக கூடுதல் மைல் ஓட வேண்டும்.

இந்த ஓட்டத்தை ஓடி, இயற்கையின் போக்கை மாற்றுவது எளிதல்ல. எழுந்து பூமியையே மீண்டும் சொர்க்கத்திற்கு உயர்த்த வேண்டும். நீல மண்டல தொனியை அமைக்கவும். மிதமானது புதிய நவீன மந்திரமாக மாறட்டும்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# பழங்குடியினரின் வீடுகளுக்கு குழாய் நீர் வசதி

ஜெய்ஸ்ரீ

RC மும்பை கண்டிவ்லி வெஸ்ட், RID 3141, அதன் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மும்பையிலிருந்து 120கிமீ தொலைவில் உள்ள பால்கர் மாவட்டத்தை சேர்ந்த பழங்குடி கிராமமான சோட்யாச்சி வாடியில் உள்ள 183 குடும்பங்களின் வீடுகள் ஒவ்வொன்றும் தண்ணீர் பெற உதவியது.

கடந்த ஆண்டு தலைவர் ராகேஷ் ஷா தலைமையில் இந்த சமூக சேவையை சங்கம் மேற்கொண்டது. அப்போது ரோட்டரியர்கள் கிராமத்திற்குச் சென்றபோது, 1.5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு இயற்கை நீரூற்று மூலம் ஊட்டப்படும் ஒரு தனியார் கிணற்றில் இருந்து கிராம மக்கள் பானைகளில் தண்ணீர் கொண்டு வருவதைப் பார்க்கும்போது மனது வலித்தது. எனவே சங்கம் தண்ணீர் சேமிப்பை அதிகரிக்க கிணற்றை 10 அடி ஆழப்படுத்த திட்டமிட்டது, நீரூற்றுகளுக்கு உணவளிக்கும் நீர் நிலைகளை அடையாளம் கண்டு நீரூற்றை ரீசார்ஜ் செய்தது மற்றும் வேறு நீரூற்றுகளின் சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்தது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி கட்டப்பட்டு, கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்க பம்ப் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்டு, பைப்கள் பதிக்கப்பட்டு, ஒவ்வொரு வீட்டிலும் குழாய்கள் நிறுவப்பட்டன.



*RC மும்பை கண்டிவ்லி வெஸ்ட் முன்னாள் தலைவர் ராகேஷ் ஷா (நடுவில்) மற்றும் சங்கத்தினர் பழங்குடியின கிராமத்தில் நிறுவப்பட்ட தண்ணீர் தொட்டியின் முன்.*

இப்பகுதியில் மின்சாரம் சீராக இல்லாததால், தண்ணீர் பம்ப் தடையின்றி செயல்பட சோலார் பேனல்கள் அமைக்கப்பட்டன.

மொத்த திட்ட செலவு ரூ.20 லட்சம் மற்றும் மூன்று கார்ப்பரேட்கள் - ஈஸ்னொராம்பர் (இந்தியா) கன்சல்டன்ட்ஸ் (ரூ.12.5 லட்சம்); ஓவர்சீஸ் பாலிமர் (ரூ.2 லட்சம்) மற்றும் செக்யூரிட்டிஸ் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் (ரூ.1.2 லட்சம்) இதற்கு ஆதரவளித்தன. ரூ.3.87 லட்சத்துடன் சங்க உறுப்பினர்கள் ஆதரவளித்தனர்.

500க்கும் மேற்பட்ட மக்கள் பயனடையும் இந்த திட்டம் அக்டோபரில் நிறைவடைந்தது. இந்த ஆண்டு, தலைவர் ப்ரீத்திகா சாமானி தலைமையில், பல்வேறு சேவைத் திட்டங்களுக்கு ஆதரவாக நிதி திரட்டும் முயற்சி ரூ.1.4 கோடியை ஈட்டியது. அடுத்த இரண்டு மாதங்களில் மேலும் ரூ.40 லட்சத்தைச் சேர்ப்போம் என்று பிரீத்திகா கூறியுள்ளார்.

IPCA ஆய்வகங்களின் ஆதரவுடன் கண்டிவ்லி ஹிட்வர்தக் மண்டல் மருத்துவமனைக்கு CT ஸ்கேன் இயந்திரத்தை (ரூ.1.2 கோடி) வழங்க சங்கம் திட்டமிட்டுள்ளது. வட்டார மொழிப் பள்ளிகளில் படிக்கும் 600 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஆங்கிலம் பேச்சு பயிற்சி மற்றும் ஆளுமை மேம்பாட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த ரூ.6 லட்சம் திட்டத்திற்கு BNI இந்தியா ஆதரவு அளிக்கும்.■




*நிதி திரட்டும் கலாச்சார நிகழ்ச்சியில் கலைஞர்களுடன் சங்கத் தலைவர் பிரீத்திகா சாமானி.*

# 1 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் அஸ்மிதா திட்டம்

ரோட்டரி செய்திக்குழு

RC பிப்வேவாடி புணே, RID 3131, தன்னுடைய CSR தோழரான GTPL ஃஹாத்வே உடன் இணைந்து அஸ்மிதா திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது, மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகம், கோவா-வில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களிடம் நேர்விதத் தாக்கத்தைக் கொண்டுவருகிறது. 2019–20ல் தொடங்கப்பட்ட அஸ்மிதா திட்டம் பெண்கள் நலனை உறுதிசெய்வதில் தொடங்கி, பாலியல் அடிப்படையில் தவறாகப் பயன்படுத்துதல் போன்ற முதன்மையான சிக்கல்களை எதிர்க்கும்விதமாக மாறியுள்ளது, மூன்று மொழிகளில் காணொளிகள், சிற்றேடுகளை வழங்கி, இந்த நான்கு மாநிலப் பள்ளி மாணவிகளை எட்டியுள்ளது.



டாக்டர்கள் மாணவர்களுக்கு சுகாதார தலைப்புகளை விளக்குகிறார்கள்.

ரோட்டரி நியூஸ் அக்டோபர் 2022 இதழில் இந்தத் திட்டத்தைப்பற்றிய ஆழமான கட்டுரை ஒன்றை வெளியிட்டது.

இந்த ஆண்டில் கல்லூரி செல்லும் பெண்கள்மீது கவனம் செலுத்தப்படுகிறது, 250க்கும் மேற்பட்ட இடங்களில் பல ரோட்டரி மாவட்டங்கள், சங்கங்கள் இதற்கென உழைக்கின்றன. இந்தத் திட்டம், நிதி அறிவு, மன நலன், தொழில்நுட்பத் திறன்கள், தற்காப்புப் பாடங்களைக் கொண்ட காணொளிகள், எதார்த்தக் கருவிகள், சிற்றேடுகளைக் கொண்டுள்ளது. பெண்களுக்குத் தற்காப்புக்கான மிளகு தெளிப்பான், பல வைட்டமின் துணைப் பொருட்களும் வழங்கப்பட்டன.



சங்கம் மூலம் மாணவர்களுக்கு கையேடு வழங்கப்பட்டது.

“பணத்தைக் கையாள்வது, அறிவார்ந்த சேமிப்பு, முதலீடுகள் போன்றவற்றைப்பற்றிப் பெண்களுக்குக் கற்றுத்தருவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம் என்கிறார் திட்டத்தின் அறிவுறுத்துனர், சங்கத்தின் பதிவுத் தலைவர் ஜிக்னேஷ் பான்ட்யா.

“அஸ்மிதா திட்டத்தின் ஆழமும் அது பல வாழ்க்கைகளைத் தொடுவதும் பாராட்ட வேண்டியவை. இன்னும் பல மாவட்டங்கள் இதில் இணையவேண்டும்” என்றார் RID 3170 DG நசீர் பொர்சாத்வாலா.

DGE ஷீதல் ஷா, RID 3131ன் பல PDGகள், RID 3160ன் துஷார் ஷா இந்தத் திட்டத்தின் தொடக்க விழாவில் பங்கேற்றனர். ■

# 2024ல் பசுமைப் போராளிகளின் படையில் இணையுங்கள்

பிரீத்தி மெஹ்ரா

புத்தாண்டு தொடங்குகிறது. இதன் பொருள், 2030 இன்னும் நெருங்கிவிட்டது. இந்த ஆண்டைக் குறிப்பிட்டுச் சொல்லக் காரணம், பூமியைக் குணமாக்கிப் புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்தும் பன்னாட்டு முயற்சியில் இது ஒரு மைல் கல் ஆண்டு. நேரம் தொடர்ந்து ஓடும். இன்னும் சுமார் 72 மாதங்களில் உலக நாடுகள் தங்களுடைய சுற்றுச்சூழலைத் தணிக்கை செய்துகொள்ளும், தாங்கள் தங்களுக்கென்று அமைத்துக் கொண்ட வளங்குன்றா இலக்குகள் எட்டப்பட்டனவா என்று ஆராயும். அதன்மூலம், நாம் ஒட்டுமொத்தமாக வெற்றியடைந்திருக்கிறோமா, இல்லையா என்பது வெளிச்சத்துக்கு வரும்.

புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்துக்கும் சராசரிக் குடிமகனுக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் சிந்திக்கலாம். அதைப்பற்றி அறிவியலாளர்களும் கொள்கை உருவாக்குவோரும்தான் சிந்திக்கவேண்டும் என்று நீங்கள் கருதலாம். ஆனால், இதில் நமக்கும் ஒரு பங்கு இருக்கிறது. அதனால், இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களும் மகிழ்ச்சியும் சற்று வடிந்த பிறகு, நாமும் இதைப்பற்றிக் கொஞ்சம் எண்ணிப் பார்ப்போம், பூமித் தாயின் நலன் நெடுங்காலத்துக்குத் தொடர்வதை உறுதி செய்வதற்குச் சில வாக்குறுதிகளை அளிப்போம். சிறு துளி பெருவெள்ளம் என்பார்கள். அதுபோல, ஒவ்வொரு தனி நபரும் ஒவ்வொரு நிறுவனமும் முயன்றால் பெரிய மாற்றங்கள் வரும்.

முதலில், உங்கள் குடும்பம், உங்கள் அலுவலகம் மற்றும் உங்கள் சுற்றுவட்டாரத்தில் சில அடிப்படையான பசுமைப் பழக்கங்களைக் கொண்டுவாருங்கள். நாள்தோறும் நீங்கள் மிகக் கூடுதலான நேரத்தைச் செலவிடுகிற இடத்தில், அதாவது, உங்கள் வீட்டில் இந்தப் பணியைத் தொடங்குங்கள். பூமிக்கு நீங்கள் அளிக்கக்கூடிய பெரிய வாக்குறுதிகளில் ஒன்று, உங்களுடைய குப்பைகளைத் தரம்பிரிப்பது, அவ்வாறு தரம் பிரிப்பதில் உள்ள நன்மைகளைப் பிறருக்குக் கற்றுத்தருவது. இந்தப் பழக்கத்தைப் பின்பற்றுவதற்கு மூன்று நிமிடம்கூட ஆகாது. ஆனால், கழிவு மேலாண்மைச் சங்கிலியில் இது ஒரு பெரிய பன்மடங்குத் தாக்கத்தை உண்டாக்கும். கழிவுகளை உலர் கழிவுகள், ஈரக் கழிவுகள் என்று பிரித்துப் போடும்போது, மறுசுழற்சி செய்யக்கூடியவற்றை மறுசுழற்சி செய்வது எளிதாகிறது. இதனால் அவற்றை இன்னொருவர் தரம்பிரிக்கவேண்டியதில்லை. அவை குப்பைக் குவியலிலோ தரைக்கு அடியிலோ சேராது. குப்பை போடுகிறவரே அதைத் தரம்பிரித்து விட்டால், ஈரக் கழிவுகளை (எடுத்துக் காட்டாக, சமைக்கப்பட்ட உணவு, காய்கறித் தோல், இலைகள், புல் போன்றவை) மிகச் சிறப்பான உரமாக மாற்றலாம், தோட்டங்கள், பண்ணைகள், வயல்களிலும் மண்ணுக்குப் புத்துயிர்ப்பூட்டப் பயன்படுத்தலாம். தாள், அட்டைப் பெட்டி, பிளாஸ்டிக், பாட்டில்கள், தகரக் குவளைகள், ஜாடிகள், மற்ற குப்பைகளை உலர் கழிவுகள் என்று அழைக்கிறோம். இவற்றை ஈரக் கழிவுகளோடு சேர்க்காவிட்டால் இவற்றைக் கையாள்வது, விற்பது, மறுசுழற்சி செய்வது எளிதாகிறது.

இந்த எளிய செயலை நாம் எப்படிச் செய்யலாம்? இதற்கு



உங்களுக்கு இரண்டு பிளாஸ்டிக் வாளிகளும் ஒரு பெரிய சணல் பையும் தேவை. அந்த வாளிகளில் ஒன்று பச்சையாகவும் இன்னொன்று சிவப்பாகவும் இருக்கட்டும். நாள்தோறும், உங்களுடைய ஈரக் கழிவுகளைப் பச்சை வாளியில் போடுங்கள், அழுக்கான, உலர்ந்த கழிவுகளைச் சிவப்பு வாளியில் போடுங்கள், முற்றிலும் உலர்வான கழிவுகளை, எடுத்துக்காட்டாக, செய்தித்தாள்கள், உறைகள் போன்றவற்றைச் சணல் பையில் போடுங்கள். உங்கள் கை இப்படி அறிவோடு செயல்படும்போது, பசுங்குடில் தாக்கத்தை உண்டாக்கும் மீத்தேன் உமிழ்வுகளில் ஒரு சிறு பகுதியை நீங்கள் தடுக்கலாம்.

சரி. ஒரு தனி நபர் என்ற முறையில் நீங்கள் உங்களுடைய குப்பைகளைத் தரம்பிரிக்கத் தொடங்கிவிட்டீர்கள். அடுத்து, உங்களுடைய அக்கம் பக்கத்து வீட்டார், உங்களுடன் பணியாற்றுவோர், உங்கள் உறவினர்கள், நண்பர்களைப் பாருங்கள். இவர்கள் எல்லாரும் இந்தப் பழக்கத்தைப் பின்பற்றத் தொடங்கினால் நம் நாட்டில் இப்படி ஒரு கழிவு மேலாண்மை நெருக்கடி ஏற்படுமா?

உண்மையில், பூமிக்கான 2030 வளங்குன்றா இலக்குகளை எட்டு முயற்சிகளில் கழிவு, வீண் என்பவை முதன்மையான சொற்கள். இதன் பொருள், எதையும் வீணாக்கக் கூடாது. ஆற்றல், நீர்... அவ்வளவு ஏன், புத்துணர்வுள்ள காற்றைக்கூட வீணாக்கக்கூடாது. மனிதர்களுடைய செயல்களால் இயற்கை வளங்கள் விரைவாகத் தீர்ந்துகொண்டிருக்கிற இன்றைய உலகத்தில் இவை அனைத்தும் மதிப்பு மிக்க பொருட்கள்.

இது தொடர்பாக நாம் பின்பற்ற வேண்டிய பசுமைப் பழக்கங்கள் என்ன? இவை மிகப் பெரிய செயல்கள் இல்லை. அன்றாடம் செய்யக்கூடிய அடிப்படைச் செயல்கள் தான். இவற்றை மற்றவர்கள் கவனிக்காமல் இருக்கலாம். ஆனால், இவற்றைச் செய்வோருக்கு இவை மிகுந்த மன நிறைவளிக்கும். எடுத்துக் காட்டாக, ஓர் அறையிலிருந்து வெளியேறுமுன் விளக்குகள், மின்விசிறிகளை அணைப்பது நல்லது. உங்கள் வீட்டில் அல்லது அலுவலகத்தில் குளிர்பதன வசதி இருந்தால், இயன்றவரை அதை இயக்காமல் தவிர்ப்பது அவ்வளவு கடினமில்லை. நினைவிருக்கட்டும், வியர்வை என்பது உங்கள் உடலிலிருந்து நச்சை வெளியேற்றக்கூடியது! பல் தேய்க்கும்போது தண்ணீர்க் குழாயை மூடுவது, குளிக்கும் போது அல்லது துவைக்கும் போது தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது போன்றவை எளிதாகச் செய்யக் கூடியவைதான். இங்கு ஒவ்வொரு துளியும் முதன்மையானது. பல நேரங்களில், சிலர் சிறிதும் சிந்திக்காமல் செய்கிற செயல்களால் இந்த மதிப்பு மிக்க பொருளை நாம் லிட்டர் கணக்கில் இழந்துவிடுகிறோம்.

நம் நாடுகளில் பல வீடுகளில் தண்ணீர்க் குழாய்களில் சிறு கசிவுகளைப் பார்க்கலாம். அவை பல ஆண்டுகளுக்குச் சரிசெய்யப் படுவதில்லை. இதன்மூலம், நல்ல குடிநீர் வீணாகிறது. அந்த வீட்டில் உள்ளவர்கள் தங்களுக்கென்று ஒரு கார் வாங்கும் அளவு பணம் வைத்திருப்பார்கள். ஆனால், நீர்க் குழாயைப் பழுதுபார்க்கவேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றாது. உலக வளங்கள் கல்விக் கழகம் வெளியிட்டுள்ள அக்வெடக்ட் நீர் ஆபத்து நிலப்படத்தில் “மிகத் தீவிரமான நீர் வள அழுத்தத்தைக் கொண்ட” பதினேழு உலக நாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதில் இந்தியா பதின்மூன்றாவது இடத்தில் உள்ளது. இதை எண்ணிப் பார்க்கும் போது, நம்முடைய வருங் கால நீர்ச் சூழலை எண்ணி நமக்குக் கூடுதல் கவலை வருகிறது.

பல நகரங்களில் காற்று மாசு பெரும் தொல்லைகளை உண்டாக்குகிறது. தில்லியில் இந்தச் சூழல் ஆண்டில் பலமுறை ‘ஆபத்து’ நிலையை எட்டுகிறது. ஆனால், வசதியையும் கொண்டாட் டங்களையும் கருத்தில் கொண்டு பசுமைப் பழக்கங்கள் புறக்கணிக்கப் படுகின்றன. தீபாவளி என்பது நமக்கு மகிழ்ச்சியான, பக்தி நிறைந்த ஒரு திருவிழா. ஆனால், ஒவ்வோர் ஆண்டும் இந்தக் கொண்டாட்டத்தின்போது நாம் ஏன் சட்டத்தை மீறுகிறோம்? பட்டாசுகள் காற்றுத் தரத்தை மிகவும் பாதிப்பதால் அவை தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால், ஒவ்வோர் ஆண்டும், தனி நபர்களுடைய பொழுது போக்குக்கென அவை பயன் படுத்தப்படுகின்றன. அரசியல் கட்சிகளும் கொண்டாட்டங்களின் போது பட்டாசுகளை வெடிக் கின்றன. உலகை மாசுபடுத்தாமல் மகிழ்ச்சியைக் கொண்டாட வேறு வழிகள் இல்லையா?

நீங்கள் பசுமைப் போராளிகளின் படையில் இணைய விரும்பினால், உங்களுடைய போக்குவரத்துத் தெரிவுகளைப்பற்றியும் சிந்திக்க வேண்டும். இதற்கான விதிமுறைகள் அனைவருக்கும் தெரிந்தவைதான்: பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த முயலுங்கள், உங்கள் கார் அல்லது இரண்டு சக்கர வண்டியில் பிறருடன் சேர்ந்து பயணம் செய்யுங்கள், அருகில் உள்ள இடங்களுக்கு நடந்து செல்லுங்கள், அதன் மூலம் மாசைக் குறையுங்கள், பெட்ரோல், டீசல் வண்டிகளுக்குப் பதில் மின்சார வண்டிகளைத் தேர்ந்தெடுங்கள்... ஆனால், இந்த வழிகாட்டும் கொள்கை களை நாம் உண்மையில் பின்பற்றுகிறோமா? நாம் உறுதிப்பாட்டுடன் இருந்தால், இவற்றைப் பின்பற்றலாம். இந்த உறுதிப்பாட்டைப்பற்றிதான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். 2024ம் ஆண்டில் நீங்கள் குப்பையைத் தரம்பிரித்தல், தூய காற்று, வீட்டில், அலுவலகத்தில் மற்றும் சமூகத்தில் ஆற்றல் மற்றும் நீரைச் சேமித்தல் ஆகியவற்றில் உங்களை ஈடுபடுத்திக்கொள்வீர்களா? ஆம் எனில், உலகம் நாடுகின்ற தீர்வின் ஒரு பகுதியாக நீங்கள் ஆவீர்கள்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

Rotary PEOPLE OF ACTION

# கீமோதெரபி சிகிச்சைப் பிரிவைப் புதுப்பித்தது ரோட்டரி

V முத்துகுமரன்

ஓமந்தூரார் வளாகத்தில் உள்ள தமிழ் நாடு அரசுப் பன்னோக்கு மிகு சிறப்பு மருத்துவமனையின் (TNGMSSH) 18 படுக்கைகளைக் கொண்ட கீமோதெரபி சிகிச்சைப் பிரிவை, ஹைதராபாதை அடிப்படையாகக் கொண்ட நாட்கோ ஃபார்மாவின் ரூ.25 லட்சம் CSR நல்கையின் உதவியுடன் மேம்படுத்தியுள்ளது RC மெட்ராஸ் சென்ட்ரல், RID 3232.

மார்பகம், கருப்பை வாய்ப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை வழங்கு வதற்கு IPDG N நந்தகுமார் உருவாக்கிய சக்தி என்கிற திட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, ரோட்டரி சென்ட்ரல் மார்கரெட் சிட்னி மருத்துவமனை, அடையாறு புற்றுநோய் அமைப்பில் எலும்பு வங்கி, ரோட்டரி சென்ட்ரல்-TTK-VHS ரத்த வங்கி போன்ற எங்களுடைய நிரந்தரத் திட்டங்களின் வழியாக நோயாளிகளை அணுக நாங்கள் விரும்பினோம்'' என்று நினைவு கூர்கிறார் RC மெட்ராஸ் சென்ட்ரலின் சிறப்புத் திட்டங்கள் இயக்குநர் Y ராகவ ராவ். ஓமந்தூரார் மருத்துவ மனைக்கு ஒவ்வொரு மாதமும் மாநிலம் முழுவதிலுமிருந்து 1,000 முதல் 1,500 நோயாளிகள் வருகிறார்கள் என்பதால், நாங்கள் இந்த மருத்துவ மனையைத் தேர்ந்தெடுத்தோம்'' என்று விளக்குகிறார் இவர்.

### முழுமையான அணுகுமுறை

இந்தத் திட்டக்குழு நலப்பராமரிப்பு வல்லுநர்கள், புற்றுநோயியல் வல்லுநர்கள், நோயாளிகளுடன் பேசி, அவர்களுடைய ஒத்துழைப்புடன், பகல் நேரக் கீமோ பிரிவின் குறைகளை நிரப்புவதற்கான ஒரு முழுமையான அணுகுமுறையைப் பின்பற்றியது.

நலத்துறையின் அனுமதி பெற்றபிறகு, பிப்ரவரி 2023லிருந்து படிப்படியான மாற்றங்கள் செயல்படுத்தப்பட்டன, உயிரியல் பாதுகாப்புப் பெட்டிகள், 5 அளவுருக் கண்காணிப்பான்கள், உட்செலுத்தல் பம்புகள், மீயொலி நேர்கோட்டுச் சோதிப்பான், மின் சரிசெய்தல்களைக் கொண்ட ICU படுக்கைகள் போன்றவை நிறுவப்பட்டன. மொத்தத் திட்டமும் இந்த ஆண்டு ஜூலையில் நிறைவடைந்தது'' என்றார் ராவ்.

இந்தத் திட்டத்தின் முழு நோக்கம், நோயாளிகளுக்கு நவீனப் புற்றுநோய்ப் பராமரிப்பை வழங்குவதுதான், சக்தித் திட்டம் அரசு, தனியார் மருத்துவமனைகள், பொது நல மையங்களில் ஏற்கெனவே 10 மாமோகிராஃபி எந்திரங்களை நிறுவியுள்ளது என்றுகிறார் IPDG நந்தகுமார். "இந்த மருத்துவ மனையில் இலவசமாகச் சிகிச்சை பெறும் ஆயிரக்கணக்கான நோயாளி களுக்கு நன்மை தருகிற இந்தத் திட்டத்தை நடத்திய'' DGN விநோத் சரௌகி, திட்டத்தலைவர் ராவ் ஆகியோரை அவர் பாராட்டினார். "சென்னையில் சமீப காலமாக மார்பகப் புற்றுநோய் பெரிய அளவில் பரவியுள்ளது. கீமோ சிகிச்சைப் பிரிவில் நோயாளிகள் மூன்று வாரங்களில் நான்கு முறை சிகிச்சை பெறுகிறார்கள் என்கிறார் TNGMSSH மருத்துவப் புற்றுநோயியல் HoD Dr B நந்தகுமார். "கீமோதெரபி எப்போதும் மிகுந்த அழுத்தம் உள்ள சிகிச்சை. ஆனால், புதிய வசதிகள், நவீன மருந்துகளின்மூலம், நாம் நோயாளிகளுடைய வலியைக் குறைக்கலாம், என்கிறார் சரௌகி. நட்கோ ஃபார்மாவின் சென்னைத் தொழிற்சாலையின் AVP வாசன் கோபாலசாமி இதுபற்றிப் பேசும்போது, "ரோட்டரி வழியாக நன்கொடையளித்து, சமூகத்தில் உள்ள புற்றுநோயாளிகளுக்கு உதவுவது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி'' என்றார்.■



V முத்துகுமரன்

**வலமிருந்து:** RC *மெட்ராஸ் சென்ட்ரல் சிறப்புத் திட்ட இயக்குநர்* Y *ராகவ ராவ்,* IPDG N *நந்தகுமார், சங்கத் தலைவர் பிரகாஷ் வைத்தியநாதன்,* DGN *விநோத் சரௌகி, உஷா சரோகி மற்றும்* TNGMSSH *இயக்குனர்* R *விமலா.*

# ஔரங்காபாதில் 1,000 மரக் கன்றுகள் நடப்பட்டன

ரோட்டரி செய்திக்குழு

RC ஔரங்காபாத், RID 3132, மற்றும் எட்டு ரோட்டரி சங்கங்கள் (RCகள் ஔரங்காபாத், ஔரங்காபாத் எலைட், ஔரங்காபாத் சென்ட்ரல், ஔரங்காபாத் மிட்-டவுன், ஔரங்காபாத் வெஸ்ட், ஔரங்காபாத் மெட்ரோ, ஔரங்காபாத் ஈஸ்ட், ஔரங்காபாத் கன்டோன்மென்ட்) ஒருங்கிணைந்து, ஔரங்காபாத் அருகில், வைஜாபூர் வட்டத்தில் நைக்வன், பாபுல்டெல் என்ற கிராமங்களின் ஆற்றங்கரைகளில் 1,000 மரக்கன்றுகளை நட்டார்கள்.

"நம் மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் நீர்நிலைகளுக்கு அருகில் மரக் கன்றுகளை நட்டால், அவற்றுக்குப் போதுமான நீர் கிடைக்கும், மண் அரிப்பைத் தடுக்கலாம் என்று DG சுவாதி ஹெர்கல் பரிந்துரைத்தார்" என்கிறார் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுவாதி ஸ்மார்ட். இந்த மாவட்டத்தின் ஜல்தாரா திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட இந்த முன்னெடுப்பின் நோக்கங்கள், வெள்ளத்தைத் தடுத்தல், உயிரியல் பன்முகத்தன்மையை முன்னிறுத்துதல்.



*ரோட்டேரியன்கள் ஆற்றங்கரையில் மரக்கன்றுகளை நடுகின்றனர்.*

இந்த இரு கிராமங்களும் அவ்வப்போது வறட்சியைச் சந்திக்கிறவை. ஆனால், மழைக் காலங்களின் போது இங்கு ஆறுகள் நிரம்பி வழிந்து பயிர்கள் சேதமாகின்றன, பெரும் இழப்பு உண்டாகிறது. இங்கு பசுமையைப் பெருக்கினால் நீர்த்தளத்தை மேம்படுத்தவும் அது உதவும் என்கிறார் சுவாதி.

இந்தச் சங்கம் மரத்வாடா கிராமப்புற மேம்பாட்டு அமைப்பிடமிருந்து ரூ.25,000 மதிப்புள்ள மரக் கன்றுகளைப் பெற்றது, கிராமத்து மக்கள் உதவியுடன் ஆற்றங்கரைகளில் அவற்றை நட்டது. ஓர் NGO இவற்றைப் பராமரித்து வளர்க்கும்.■

# தொலைநோக்கி செய்யக் கற்ற மாணவர்கள்



*ஓபன் ஸ்பேஸ் அறக்கட்டளையின் ஒரு தன்னார்வலர் தொலை நோக்கியைப் பயன்படுத்த மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார். சங்க தலைவர் ரேஷ்மா ரமேஷ் (வலதிலிருந்து இரண்டாவது) மற்றும் சங்க உறுப்பினர் திவ்யா ஹரியும் படத்தில் உள்ளனர்.*

சமீபத்தில், கோயம்பத்தூர் கிராமப்புறங்களில் உள்ள 24 அரசுப்பள்ளிகளின் மாணவர் களுக்குத் தொலைநோக்கிகளை உருவாக்கப் பயிற்சியளித்ததன்மூலம் விண்வெளித் திட்டத்துக்கு நிதியளித்து, அதன் வீச்சை விரிவாக்கியது மெட்ரோ டைனமிக்ஸ் ரோட்டரி மின் சங்கம், RID 3201 "தொலைநோக்கி உருவாக்கும் இந்த நேரடிப் பயிற்சி, மாணவர்களுக்குள் கற்றல், ஆராய்தலின் புதிய அலையை உருவாக்கி ஊக்குவிக்கும்" என்றார் சங்கத் தலைவர் ரேஷ்மா ரமேஷ். இந்தத் திட்டத்துக்கான செலவு, ரூ.3.12 லட்சம்.

ஏப்ரல் 2023ல், இந்தச் சங்கம் இந்நகரின் புறநகர்ப் பகுதியான துடியலூரில் உள்ள அரசுப் பள்ளி ஒன்றின் மாணவர்களுக்கு இதேபோன்ற ஒரு பயிலகத்தை நடத்தியது. Open Space Foundation-னின் தொழில்நுட்ப வல்லுநர்கள் தொலைநோக்கி உருவாக்கத்தில் மாணவர்களுக்கு வழிகாட்டினார்கள்.■

# இடங்களில் உள்ள மக்கள்



**சந்தியா ராவ்**

*சியோல் மற்றும் பாண்டிச்சேரியில் அமைக்கப்பட்ட இரண்டு சுருக்கமான நாவல்கள், மனித அனுபவத்தின் எண்ணற்ற சாயல்கள் மற்றும் பலவற்றை ஆராய்ந்து, வாழ்க்கையை வளமாக்கும் அல்லது சிக்கலாக்கும் உணர்ச்சி சாரத்தை வெளிப்படுத்துகின்றன.*

தென் கொரிய எழுத்தாளர் சோ நாம்-ஜூவால் எழுதப்பட்ட கிம் ஜியோங், பார்ன் 1982 என்ற புத்தகம் எங்கள் புத்தகக் கிளப்பில் நவம்பர் மாதம் வாசிக்கப்பட்டது. 2016-ல் முதலில் கொரிய மொழியில் வெளி யிடப்பட்டு, பின்னர் 2018-ல் ஜேமி சாங்கின் மிருதுவான ஆங்கில மொழிபெயர்ப்பில் வெளியான நாவல், கொரிய சமூகத்தில் பாலின சமத்துவமின்மை மற்றும் பாகுபாடு களை அதன் 'உணர்ச்சிவசமான, உண்மையான மற்றும் சமரசமற்ற' கருத்தின் மூலம் ஒரு பரபரப்பை உருவாக்கியது. சற்று புனைகதை போலவும், சற்று அறிக்கையைப் போலவும் எழுதப்பட்ட இந்த இறுக்கமாக விவரிப்பு உள்ளூர் கதைகள் எவ்வளவு உலகளாவியது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சராசரி கொரியப் பெண் மேல் செலுத்தப்படும் தினசரி கடமை, பெண் வெறுப்பு, ஆன்மாவை அழிக்கும் இந்த நிலைமை உலகளவில் காணப்படும் பரவலான அணுகுமுறைகளை பிரதிபலிக்கிறது, இதை பொறுத்த வரையில் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு இடையேயான வேறுபாடு பெரும்பாலும் குறைவாகவே உள்ளது என்பதை இப்புத்தகம் எடுத்துக்காட்டுகிறது.

கிம் ஜியோங், ஒரு மூத்த சகோதரி மற்றும் ஒரு தம்பிக்கு நடுவில் பிறந்த குழந்தை. ஒரு மகளாகப் பிறந்ததால், சமூகத்தில் அவளுடைய நிலை ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது. அவளுடைய தாய் தனது மூன்றாவது கர்ப்பத்தை கலைத்துவிடுகிறாள், அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்பதை உறுதி செய்தபின் மட்டுமே நான்காவது முறை கருத்தறிக்கிறாள். சிறுமிகளின் இளமை பருவங்கள், அவர்களின் சகோதரருக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் நன்மைகளைச் (உணவு, இடம், உடை, கல்வி, வேலை) சுற்றியே உள்ளது.

அவள் வளர்ந்து, வேலைக்குச் செல்கிறாள், திருமணம் செய்து கொள்கிறாள், ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். அந்த ஆண்டுகளில் அவள் பெண் என்பதால் சவாலான வேலைகள் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றில் புறக்கணிக்கப் படுகிறாள், மேலும் பிறக்க இருக்கும் குழந்தைக்காக தனது வேலையை விட்டு விட தன்னுடைய கணவனால் வற்புறுத்தப் படுகிறாள். மெதுவாக, அவள் சமூகக் கடமைகள் மற்றும் எதிர்பார்ப்புகளின் புதைக்குழியில் விழுகிறாள். உடல் ரீதியான துஷ்பிரயோகம் எதுவும் இல்லையென்றாலும், அவள் வழிநடத்தும் வாழ்க்கை, கடமைகள் நிறைந்த, பொறுப்புகள் நிறைந்த, தவிர்க்க முடியாத ஒரு வெறுமையான மனநிலைக்கு வழிவகுக்கிறது. ஒரு நாள், அவள் முப்பதுகளின் தொடக்கத்தில் இருக்கும் போது, அது அவளுடைய மன ஆரோக்கியத்தை பாதிக்கத் தொடங்குகிறது. இது ஜியோங்கிடம் எப்படி வெளிப்படுகிறது, அதன் பிறகு அவளுக்கு என்ன நடக்கிறது என்பதை புத்தகம் வெளிப்படுத்து கிறது. இதில் சொல்லப்படும் கருத்து தவிர்க்க முடியாதது, மேலும் இந்தப் புத்தகத்தைப் படிப்பது ஒரு பெண்ணாக இருந்தால், ஜியோங் நீங்கள் தானா என சந்தேகம் எழும். சாதுவான பாணி சொல்லப்படும் கதை அச்ச உணர்வை அதிகரிக்க உதவுகிறது.

தென் கொரியா தொடர்பான உண்மைகள் மற்றும் புள்ளிவிவரங்கள் பற்றிய விரிவான குறிப்புகளுடன் இருப்பதால் இதை கதை வடிவத்தில் இருக்கும் ஆவண நாவல் என்று நீங்கள் அழைக்கலாம். ஒரு முன்னாள் தொலைக்காட்சி திரைக்கதை எழுத்தாளரான ஆசிரியர், அவர் ஒரு பெண்ணாக தனது சொந்த அனுபவத்திலிருந்து இந்த நாவலை எழுதிருக்கிறார் என்பது பெரிய ஆச்சர்யமில்லை, அவரும் பிரச வத்திற்குப் பிறகு தனது வேலையை விட்டிருக்கிறார்.




சுனயனா பாண்டாவின் தி மூன் ஓவர் பாண்டிச்சேரி என்பது முற்றிலும் மாறுபட்ட கதை, அனால் இங்கும் ஒரு நோக்கம் உண்டு: யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியைக் காட்சிப்படுத்துவது. ஆசிரியர் அதை நன்றாகச் செய்கிறார், இதனால் அந்த இடம், அதன் வரலாறு மற்றும் அதன் மக்களை உருவாக்குவது அல்லது உடைப்பது எது என்பது பற்றிய நுணுக்கமான உணர்வைப் பெறுகிறோம். 1910-ம் ஆண்டு பாண்டிச்சேரி ஒரு பிரெஞ்சு கோட்டையாக இருந்தபோது கதை தொடங்குகிறது. அதன் அரசியல், பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையின்

அனைத்து அம்சங்களும் பிரெஞ்சு காலனித்துவவாதிகளால் ஆளப்படுகிறது. காலப்போக்கில், விஷயங்கள் எவ்வாறு மாறுகின்றன, அல்லது உறவுகள் எவ்வாறு ஒருங்கிணைகின்றன அல்லது சிதைகின்றன, அவை எவ்வாறு பல்வேறு வரலாற்று தாக்கங்களை ஏற்படுத்தி பாண்டிச்சேரியின் சுவாரசியமான கலவையை உருவாக்கியது என்பதைப் பார்க்கிறோம்.




சுனயனா தெருக்கள் மற்றும் பூங்காக்கள் வழியாக, கடற்கரை மற்றும் கடந்த கால நினைவுச் சின்னங்கள் வழியாக நம்மை அழைத்துச் செல்கிறார், அங்கே அவர் கட்டிடக்கலையைப் பார்க்க நிறுத்துகிறார், தெரு விளையாட்டுகளில் பங்கேற்கிறார், வழிபாட்டுத் தலங்களை வணங்குகிறார், கடல் காற்றை உணர்கிறார், மேலும் பல உணவு வகைகளை சாப்பிடுகிறார். தலைமுறைகள் வந்து செல்ல காதல் மற்றும் கருத்து வேறுபாடுகளும் வந்து செல்கிறது. பிரெஞ்சு, தமிழ், மீனவர், அரவிந்தர் ஆசிரமம், ஆரோவில் மற்றும் பல வகையான வர்களை தழுவ பாண்டிச்சேரி ஒரு சுவாரஸ்யமான, உள்ளடக்கிய தன்மையை தனக்குள் உருவாக்கி கொள்கிறது. பாரம்பரிய, போஹேமியன் மற்றும் இடையில் உள்ளவர்களின் இணக்கமான சகவாழ்வை வளர்க்கிறது. பல உள்ளூர்வாசிகள் பிரெஞ்சு மற்றும் தமிழ் இனத்தின் இணைப்பிலிருந்து வந்தவர்கள், உள்ளூர் பெயர்கள் பிரஞ்சு சுவையை கொண்டிருக்கும், அங்கு பிரஞ்சு மற்றும் கிரியோல் உணவு ஆதிக்கம் செலுத்தும் மற்றும் மக்கள் இந்தியா மற்றும் உலகின் அனைத்து பகுதிகளிலிருந்தும் ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்காக வருகை தருகின்றனர்.

எழுத்து எளிமையாகவும், வியக்கத்தக்க வகையில் ஈடுபாட்டுடன் இருப்பதாலும் தி மூன் ஓவர் பாண்டிச்சேரி சுவாரசியமான மற்றும் தகவல் தரும் வாசிப்பாக இருக்கிறது. தற்போது அதிகாரப்பூர்வமாக புதுச்சேரி என்று அழைக்கப்படும் பாண்டிச்சேரியின் பாண்டிச்சேரித்தனத்தை ஆசிரியர் அன்புடனும் விவரங்களுடனும் காட்சிப்படுத்துகிறார். இருப்பினும், பாண்டிச்சேரியைத் தவிர வேறு எங்கும் இந்த புத்தகம் கிடைக்க வாய்ப்பில்லை, அல்லது ஆசிரியரிடமிருந்து நேரடியாக வாங்கலாம்.

பின்னர், சித்ரா பானர்ஜி திவாகருணியின் இன்டிபென்டன்ஸ் இருக்கிறது, இந்த புத்தகத்தை என்னால் கீழே வைக்க முடியவில்லை. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் மூன்று சகோதரிகளின் கதையை இது சொல்கிறது. பிரிவினை நெருங்கிக் கொண்டிருக்கிறது, தேசம் கொந்தளிப்பில் உள்ளது, வரலாற்றின் வரவிருக்கும் சூழ்நிலைகளில் சிக்கிக் கொண்டிருக்கும் போது அவர்கள் தங்களுடைய சொந்த, தனிப் பட்ட சவால்களுடனும் போராடுகிறார்கள்.




இதன் விவரிப்பு சீராக முன்னோக்கி நகர்கிறது மற்றும் வாசகருக்கு அடுத்து என்ன நடக்கிறது என்பதை அறிய ஆவலைத் தூண்டுகிறது. நீங்கள் எனது காலத்தைச் சேர்ந்தவராக இருந்தால், கடந்த நூறு ஆண்டுகால இந்திய வரலாற்றைப் பற்றிய உங்களது சொந்த புரிதல் அல்லது அறிவின் மூலம் கதையில் வெளிப்படையாக சொல்லப்படாததை உங்களால் புரிந்துகொள்ள முடியும். நாவலின் தொடக்கத்தில், பிரபல எழுத்தாளர் அமிர்தா ப்ரீதம் சொன்ன மேற்கோளை நீங்கள் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்வீர்கள்: 'தாளில் இல்லாத பல கதைகள் உள்ளன; அவை பெண்களின் மனதிலும் உடலிலும் எழுதப்பட்டவை. உதாரணமாக, என் தாய்வழி பாட்டி, இதிகாசங் களின் முடிவில்லாத கதைகளை வைத்திருந்தாலும், சுதந்திரத்தின் கதைகளாலும் நிறைந்திருந்தார். என் அம்மாவிடம் பகிர்ந்து கொள்ள சொந்த கதைகள் இருந்தன, அவற்றில் பல 'பெண்களின் மனதிலும் உடலிலும் எழுதப்பட்டவை'. 'பெண்கள் ஒருபோதும் பயப்படத் தேவையில்லை, ஏனென்றால் அவர்களின் கைகளில் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் ஒன்று உள்ளது: அவர்களின் சொந்த சமையலறையின் மிளகாய் பொடி' என்று காந்திஜி கூறியது எனக்கு குறிப்பாக நினைவுக்கு வருகிறது.

மூன்று சகோதரிகளில் மூத்தவரான தீபா, முஸ்லீம் லீக்கின் இளைஞர் தலைவரைக் காதலிக்கிறார், பக்தியுள்ள மற்றும் அர்ப்பணிப்புள்ள நடுப்பெண் ஜாமினி காந்தாவைத் தைக்க தனது தாய்க்கு உதவுகிறார், மேலும் இளையவரான பிரியா வகுப்புவாத வன்முறையில் இறந்த தனது தந்தையைப் போல ஒரு மருத்துவராக வேண்டும் என்று விரும்புகிறார். அவர்களின் அனுபவங்கள் மூலம் அவர்கள் சுதந்திரமாக இருப்பதன் அர்த்தம் என்ன, அது என்ன விலைக்கு வருகிறது என்பதை கற்றுக்கொள்கிறார்கள். நாம் சுலபமாக நினைக்கும் சுதந்திரம் கடினமாகப் போராட்டத்திற்கு பிறகு கிட்டியது என்பதை இது நினைவூட்டுகிறது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

### புற்றுநோயாளிகளுக்கு புத்துணர்வு



DG *அருண் பார்கவா* Access Bar *சிகிச்சை அனுபவிக்கிறார்.*

RID 3141-க்கு உட்பட்ட RC மும்பை சியோன் நானா பால்கர் ஸ்மிருதி சமிதியுடன் இணைந்து Access Bar என்னும் சிகிச்சை மூலம் புற்றுநோயாளிகளுக்கு புத்துணர்ச்சி அளித்துள்ளனர். தலையில் லேசான தொடுதல் மூலம் நேர்மறையான மாற்றத்தைக் கொண்டு வரும் மென்மையான சிகிச்சையாகும். இந்த சிகிச்சையை 54 வாரங்களில் 1,000 நோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

### பெங்களூருவில் டிஜிட்டல் கல்வி முயற்சி




*கிராமப்புற கர்நாடகாவில் பள்ளி ஒன்றில் டிஜிட்டல் வகுப்பறை.*

RID 3191-க்கு உட்பட்ட RC பெங்களூரு லேக்ஸைடு, HP இந்தியா மற்றும் NIIT அறக்கட்டளையுடன் இணைந்து HP-ஆல்ஃபா திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கர்நாடகத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள 72 அரசு பள்ளிகளில் டிஜிட்டல் வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 300 ஆசிரியர்களும், 40,000 மாணவர்களும் பயன்பெறுவார்கள்.

### சென்னையில் நடமாடும் மருத்துவமனை




*சவீதா மருத்துவமனையில் நடமாடும் மருத்துவமனை திறந்து வைக்கப்படுகிறது.*

சென்னையில் உள்ள சவீதா மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில், RID 3232 சார்ந்த சென்னை கிரீன் சிட்டி ரோட்டரி சங்கம் நடமாடும் மருத்துவமனையை நிறுவியுள்ளது. HSI ஆட்டோமோட்டிவ்ஸ் மற்றும் சவீதா மருத்துவ தொழில்நுட்பக் கழகத்தின் ஆதரவுடன் இது நிறுவப்பட்டுள்ளது.

### இந்தூரில் மரம் நடும் இயக்கம்



*சங்க உறுப்பினர்கள் மற்றும்* BSF *ஜவான்கள்* BSF *வளாகத்தில் மரக்கன்றுகளை நடவு செய்த பிறகு.*

RID 3040-க்கு உட்பட்ட RC இந்தூர் நார்த் சார்பில், இந்தூரில் உள்ள பி.எஸ்.எப். வளாகத்தில் 1,000 மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்வில் எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரிகள், வீரர்கள், சங்க உறுப்பினர்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் பங்கேற்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் இச்சங்கம் 10,000-த்துக்கும் மேலான மரக்கன்றுகளை நட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

### பெயருள்ள நிதியளித்தல் : ரோட்டரி இணையத்தளத்தின் வழியாக வழங்குதல்

இப்போது, கொடையாளர்கள் ஏற்கெனவே உள்ள தங்களுடைய நன்கொடை நிறுவலுக்கு My Rotary வழியாக இணையத்தில் கொடையளிக்கலாம். இதற்கு அவர்கள் My Rotary-யில் நுழைந்து "Donate" என்பதைக் கிளிக் செய்யவேண்டும்.

மேலுள்ள மெனுவிலிருந்து "(Named Fund) பெயருள்ள நிதி" என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பரிசு ID உள்ளிட்டு, "Search" என்பதைக் கிளிக் செய்யவேண்டும். இப்போது, நிதியின் பெயர் காண்பிக்கப்படும். அது சரியான நிதி என்றால், அவர்கள் நன்கொடைப் பிரிவை நிறைவுசெய்யலாம்.

### சங்கம் அல்லது சங்க உறுப்பினர்கள் சார்பாக இணையத்தில் வழங்குங்கள்

சங்கத் தலைவர், சங்க அறக்கட்டளைத் தலைவர், உறுப்பினர் தலைவர், செயல்பாட்டுச் செயலாளர்/இயக்குநர், செயலாளர் மற்றும் பொருளாளர் போன்ற அனைத்துச் சங்க அலுவலர்களும் தங்களுடைய My Rotary கணக்கின் வழியாக தங்கள் கடன்/பற்று அட்டை அல்லது இணைய வங்கிச் சேவையைக் கொண்டு தங்கள் சங்க உறுப்பினர்கள் சார்பாக இணையப் பங்களிப்புகளை வழங்கலாம். உறுப்பினர்களுடைய தனித்தனிக் காசோலைகளை அனுப்பும் தேவை இல்லை. இந்தப் பங்களிப்புகள் அந்தந்த உறுப்பினர்கள் பெயரில் சேர்க்கப்படும். ஆனால், 80G ரசீது அவர்கள் பெயரில் வழங்கப்படாது, பணம் செலுத்தியவரான சங்கத் தலைவருடைய பெயரில்தான் உருவாக்கப்படும்.

இந்தச் செயல் முறைபற்றிய விரிவான விளக்கம் இங்கு உள்ளது: *http://www.highroadsolution.com/file_uploader2/files/give_online_on_behalf_of_club_or_club_members_sao.pdf*




| | PLATINUM | GOLD | SILVER |
|---|---|---|---|
| For District | 75% of district membership contributing minimum of $25 each | 100% Club Giving with minimum $100 contribution by each club | 100% Club Giving with minimum $50 contribution by each club |
| Award | Crystal for District | Plaque for District | Smaller Plaque for District |
| For Club | Minimum $25 contribution by each member and Annual Fund Per Capita of $200 | Minimum $25 contribution by each member and Annual Fund Per Capita of $100 | Minimum $25 contribution by each member |
| Award | Crystal for Club | Plaque for Club | Certificate for Club |

### 2022–23 ஆண்டு அறிக்கை

இந்த ஆண்டின் ஆண்டு அறிக்கையில் நாம் நம்முடைய நினைவில் நின்ற கணங்களில் சிலவற்றைத் திரும்பிப் பார்க்கிறோம், மாற்றத்தை உண்டாக்கிய சங்கங் களின் ஊக்கமளிக்கும் கதைகளைப் பகிர்ந்துகொள்கிறோம், கொடையாளர்கள் ரோட்டரி அறக்கட்டளைக்குப் பங்களிப்பது ஏன் என்று அவர்களிடமிருந்து தெரிந்துகொள்கிறோம். *https://www.rotary.org/en/annual-report-2023*

### ஆண்டு நிதிச் சவால் மற்றும் பால் ஹாரிஸ் வெற்றி விருது

ஆண்டு நிதி ஆதரவை ஊக்குவிப்பதற்கென, 4, 5, 6 மற்றும் 7வது பகுதிகளில் உள்ள RRFCகள் ஆண்டு நிதிச்சவாலை வழங்குகின்றன. உங்கள் மாவட்டம் மற்றும் சங்கம் இந்தச் சவாலில் பங்கேற்றால், 2024 பகுதி ரோட்டரி சந்திப்பில் பகுதித் தலைவர்களிடமிருந்து சிறப்பு விருதுகளைப் பெறும் வாய்ப்பு கிடைக்கும். இந்தச் சவாலின்கீழ், மாவட்டங்கள் பால் ஹாரிஸ் சங்கத்துக்கான தங்கள் அர்ப்பணிப்பைக் காண்பிப்பதன் மூலம் மதிப்புமிக்க பால் ஹாரிஸ் வெற்றி விருதைப் பெறுவதற்கு இன்னொரு கூடுதல் வாய்ப்பைப் பெறுகின்றன. ஆண்டு நிதிச் சவால் விருது களுக்குத் தகுதி பெறுவதற்கான கடைசி நாள், **ஜனவரி 31, 2024.**

மேலும் தகவல்களுக்கு, மேலே உள்ள படத்தைப் பாருங்கள்.

# BPO-விற்காக இளைஞர்களுக்கு திறமையளித்தல்

**V முத்துகுமரன்**




**இடமிருந்து:** RC *பஞ்சாரா ஹில்ஸ் செயலாளர் நீரஜா ராமராவ்,* DG *புசிரெட்டி சங்கர் ரெட்டி, சங்கத் தலைவர் துர்கா பிரசாத் மாதசு,* DGN *ராம் பிரசாத் மற்றும் ராமராவ் உபாதி திட்ட மனிதவள ஊழியர்களுடன் .*

கடின உழைப்பின் மூலம் வாழ்க்கையில் மேலே வந்த RC பஞ்சாரா ஹில்ஸ், RID 3150 இன் தலைவர் துர்கா பிரசாத் மாதசு, "உபாதி' (தெலுங்கில் வேலைகள்) என்ற தனது கனவு திட்டத்திற்கு வடிவம் கொடுத்துள்ளார். 21 நாள் பயிற்சித் திட்டத்தின் மூலம், 12-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆனால் உயர் கல்வியைத் தொடர முடியாத, வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 1,500 இளைஞர்களுக்கு திறன் அளிப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஹைதராபாத்தில் உள்ள BPO நிறுவனமான CorpOne-ன் CEO-ஆக இருந்த மாதசு, தெலுங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் 12-ம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் தங்கள் குடும்பங்களை ஆதரிப்பதற்காக குறைந்த ஊதியத்தில் வேலை செய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளதைக் கண்டு வருத்தப் பட்டார். ஜூலை மற்றும் டிசம்பருக்கு இடையில், கார்ப்ஒன் பயிற்சி அகாடமியில் 1,200 விண்ணப்பதாரர்களுக்கு கணினி மற்றும் தகவல் தொடர்பு திறன்களில் சங்கம் பயிற்சி அளித்துள்ளது. "அவர்கள் அனைவருக்கும் BPOக்கள் மற்றும் டெலிமார்க்கெட்டிங் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. இதுவரை, 1,000 மாணவிகளுக்கு வேலை கிடைத்துள்ளது, மேலும் மீதமுள்ளவர்கள் வேலை வாய்ப்பு களுக்காக காத்திருக்கிறார்கள்'' என அவர் கூறினார்.

ஒரு மாதத்தில், 15–20 தொகுதிகள், ஒவ்வொன்றிலும் 12–15 இளைஞர்கள், கார்போன் ஊழியர்கள் மற்றும் ஃப்ரீலான்ஸ் பயிற்சியாளர்களின் கலவையை கொண்ட எட்டு தொழில் வல்லுநர் களால் பயிற்சியளிக்கப்படு கிறார்கள். BPO வேலைப் பயிற்சி மாணவர்களுக்கு முற்றிலும் இலவசம். ஹைதராபாத்தைத் தவிர மற்ற இடங்களிலிருந்து வருபவர்களுக்கு சங்கம் மூலம் தங்குமிடம் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ஆனால், உணவுச் செலவுகளை அவர்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று விளக்குகிறார் மாதசு.

தனது கடின வாழ்க்கையை நினைவு கூர்ந்த மாதசு, நான் பட்டப்படிப்பு படிக்கும்போதே ஆரம்ப நிலை BPO வேலையில் பணிபுரிய ஆரம்பித்தேன், மேலும் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக விடாமுயற்சியுடன் பணிபுரிந்ததன் மூலம் எனது நிறுவனப் படிநிலையில் உயர்ந்தேன். எனவே, ரோட்டரி "உபாதி" திட்டத்துடன் தொடர்ந்தாலும் இல்லாவிட்டாலும் இளைஞர்களுக்கு BPO வேலைகளுக்கான பயிற்சி யைத் தொடர்வேன் என்று அவர் உறுதியாகக் கூறுகிறார்.■




**New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.**

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

FIND A CLUB
ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator

# District Wise TRF Contribution as on November 2023

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 18,316 | 625 | 1,000 | 0 | 19,941 |
| 2982 | 19,915 | 644 | 7,085 | 4,488 | 32,133 |
| 3000 | 52,422 | 290 | 0 | 22,918 | 75,630 |
| 3011 | 88,279 | 21,483 | 26,089 | 163,587 | 299,437 |
| 3012 | 10,130 | 50 | 0 | 9,346 | 19,526 |
| 3020 | 84,880 | 6,369 | 30,223 | 40,500 | 161,972 |
| 3030 | 55,531 | 27,248 | 275 | 143,582 | 226,637 |
| 3040 | 1,643 | 108 | 0 | 25 | 1,777 |
| 3053 | 8,495 | 0 | 0 | 12,439 | 20,934 |
| 3055 | 43,021 | 1,745 | 30 | 6,228 | 51,025 |
| 3056 | 13,676 | 100 | 0 | 0 | 13,776 |
| 3060 | 53,599 | 9,515 | 200 | 100,546 | 163,860 |
| 3070 | 2,995 | 20 | 0 | 0 | 3,015 |
| 3080 | 22,413 | 12,773 | 0 | 5,357 | 40,543 |
| 3090 | 32,077 | 713 | 0 | 5,121 | 37,911 |
| 3100 | 50,941 | 1,205 | 25,301 | 6,203 | 83,651 |
| 3110 | 3,582 | 30 | 0 | 78,298 | 81,910 |
| 3120 | 10,067 | 129 | 0 | 0 | 10,195 |
| 3131 | 283,874 | 6,514 | 15,098 | 383,154 | 688,640 |
| 3132 | 71,703 | 2,485 | 10,000 | 18,629 | 102,817 |
| 3141 | 205,758 | 7,171 | 59,012 | 375,046 | 646,987 |
| 3142 | 226,138 | 4,771 | 14,500 | 116 | 245,525 |
| 3150 | 27,929 | 30,478 | 160,411 | 73,365 | 292,183 |
| 3160 | 9,219 | 1,051 | 0 | 0 | 10,269 |
| 3170 | 48,255 | 25,712 | 2,500 | 70,474 | 146,941 |
| 3181 | 45,576 | 1,659 | 0 | 50 | 47,284 |
| 3182 | 18,019 | 4,452 | 0 | 0 | 22,471 |
| 3191 | 25,327 | 5,211 | 60,976 | 111,416 | 202,929 |
| 3192 | 27,999 | 8,761 | 0 | 23,943 | 60,703 |
| 3201 | 56,489 | 42,778 | 45,563 | 946,173 | 1,091,003 |
| 3203 | 13,592 | 14,105 | 1,220 | 15,550 | 44,467 |
| 3204 | 9,754 | 2,511 | 0 | 6,561 | 18,826 |
| 3211 | 28,264 | 4,236 | 27,325 | 84,792 | 144,617 |
| 3212 | 41,173 | 17,576 | 0 | 38,196 | 96,945 |
| 3231 | 1,497 | 1,438 | 0 | 0 | 2,935 |
| 3232 | 23,920 | 12,170 | 14,005 | 788,761 | 838,855 |
| 3240 | 50,860 | 7,768 | 0 | 5,342 | 63,970 |
| 3250 | 16,980 | 2,092 | 26 | 10,298 | 29,395 |
| 3261 | 11,089 | 269 | 0 | 2,989 | 14,346 |
| 3262 | 15,632 | 3,682 | 1,000 | 2,575 | 22,889 |
| 3291 | 59,227 | 2,118 | 41,646 | 1,050 | 104,040 |
| 3220 **Sri Lanka** | 26,999 | 2,476 | 0 | 773 | 30,248 |
| 3271 **Pakistan** | 13,781 | 52,053 | 0 | 20,402 | 86,237 |
| 3272 **Pakistan** | 1,342 | 385 | 0 | 25 | 1,752 |
| 3281 **Bangladesh** | 20,709 | 1,978 | 2,000 | 184,226 | 208,914 |
| 3282 **Bangladesh** | 90,461 | 4,463 | 1,000 | 9,116 | 105,040 |
| 3292 **Nepal** | 136,933 | 19,549 | 3,000 | 57,695 | 217,177 |

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation. **Source:** RISAO

## RC வீராணம் லேக் சிட்டி — RID 2981



பிளாஸ்டிக்கை மறுப்போம் பரப்புரையின்கீழ், சுற்றுச்சூழல், திடக் கழிவு மேலாண்மை விழிப்புணர்வை உருவாக்க, பொது மக்களுக்குத் துணிப் பைகள் வழங்கப்பட்டன.

## RC கசியாபாத் சஃபையர் — RID 3012



AG அனிதா சிங்கால், சங்கத் தலைவர் ஜோதி கார்க், பிற உறுப்பினர்கள் முன்னிலையில் DG பிரியதோஷ் குப்தா மாமோகிராஃபி முகாம் ஒன்றைத் தொடங்கிவைத்தார்.

## RC மதுரை பிளாசம் — RID 3000



லவ்லி லியோ திட்டத்தின்கீழ், திருப்பரங் குன்றத்தில், ஏழை மக்களுக்குப் போர்வைகள், பாய்கள் வழங்கப் பட்டன.

## RC நாசிக் கோதாவரி — RID 3030



DG ஆஷா வேணுகோபால், ஜில்லா பரிஷத் CEO ஆஷிமா மிட்டல் முன்னிலையில், இரண்டு முகாம்களில் சுமார் 2,000 பெண்களுக்குக் கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

## RC தில்லி ஒக்லா சிட்டி — RID 3011




நோய்டாவில் உள்ள கெஜ்ஹா கிராமத்தின் அரசுத் தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5ம் வகுப்பு மாணவர் களுக்கு ரத்னா அறக்கட்டளை ஆதரவில் பயிற்சிப் புத்தகங்கள் கொடையளிக்கப்பட்டன.

## RC உஜ்ஜைன் கிரேட்டர் — RID 3040



உஜ்ஜைனில் உள்ள சேவா பாரதி வன்வாசி பாலிகா சாத்ராவஸில், 6 முதல் 12ம் வகுப்புவரை பயிலும் 60 மாணவி களுக்குப் பயன்படும் கணினி ஆய்வகத்தைத் தொடங்கிவைத்தார் DGN சுசீல் மல்ஹோத்ரா.

# செய்திகள்

### RC பிக்கனெர் மருதரா — RID 3053



நேத்ர ஜோதி கலாஷ் பரப்புரையின்கீழ், தெரசா குழந்தைகள் அகாதெமியில் 140க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டது.

### RC நாபா கிரேட்டர் — RID 3090



அரசுப் பள்ளி மாணவ, மாணவிகள் 365 பேருக்கு சீருடை, காலணிகள் வழங்கப்பட்டன.

### RC ஜெய்ப்பூர் மிட் டவுன் — RID 3056



தீபாவளியை முன்னிட்டு, ஜெய்ப்பூர் தென்மேற்கு ராணுவப் பிரிவு வீரர்களுக்கு 6,000 இனிப்புப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

### RC கான்பூர் நார்த் — RID 3110



ரோட்டரியன் தம்பதியரான ராதா கிஷன், சுமன் குப்தா மற்றும் நிஷாந்த், ரிச்சா வதேரா ஆகியோரின் திருமண நாட்களை முன்னிட்டு, ஹல்லெட் மருத்துவ மனையில் உணவு வழங்கப்பட்டன.

### RC சிம்லா மிட்-டவுன் — RID 3080



சிம்லாவில் மஞ்சு, ஹட்னாலி கிராமங்களின் அரசுப் பள்ளிகளிலும் மன்டி, சோலன் பகுதிக் கடைக்காரர்களுக்கு மின்விசிறிகள் வழங்கப்பட்டன.

### RC புணே பிரைட் — RID 3131



NAWNI என்ற ஆறு மாதத் திட்டத்தின் கீழ் 30 பெண்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

## RC அகமத்நகர் — RID 3132




ஆறு சங்கங்களுடன் இணைந்து நடத்தப்பட்ட, வேலை வாய்ப்பு முகாமில் சுமார் 2,000 பேர் கலந்து கொண்டார்கள்.

## RC தும்கூர் சென்ட்ரல் — RID 3192

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, சங்க உறுப்பினர்கள் மாருதிநகர் பிரகலாத் ராவ் பூங்காவைத் தூய்மைப் படுத்தினார்கள்.




## RC கோலாப்பூர் சிட்டி — RID 3170




சங்கத் தலைவர் துஷார் பும்கர் மற்றும் சூர்யகாந்த் தின்டெ ஆதரவில் பெண் களுக்குத் தையல் இயந்திரங்கள் அளிக்கப் பட்டன.

## RC கொச்சி யுனைட்டெட் — RID 3201

மாவட்டப் பொதுத் தோற்றம், தலைமைப்பண்புக் கருத்தரங்கில், பொதுச் சேவையில் ஈடுபடும் நபர்கள், அமைப்பு களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.



## RC புத்தூர் — RID 3181




கொடிபடி கிராமத்தைச் சேர்ந்த ஏழு பெண்களுக்குத் தையல் பயிற்சியும் தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

## RC சிவகாசி டைமன்ட்ஸ் — RID 3212

காது கேளாதோருக்கான CSI பள்ளியில் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஆதரவில் அமைக்கப்பட்ட கழிப்பறைத் தொகுதியை DGE மீரான்கான் சலீம் தொடங்கிவைத்தார்.



# செய்திகள்

## RC வாணியம்பாடி — RID 3231



ஆம்பூர்பெட்டில், செருப்பு தைக்கும் ஒருவருடைய குடும்பத்துக்கு ரூ.30,000 மதிப்புள்ள தங்குமிடம் கட்டித் தரப்பட்டது.

## RC ராய்ப்பூர் — RID 3261

சங்கம் ஏற்பாடு செய்திருந்த முகாமில் 130 பெண்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பயனடைந்தனர்.



## RC சென்னை திருவான்மியூர் — RID 3232



பெண்களுக்கான இந்தியா அமைப்புடன் இணைந்து, 20 பெண்களுக்கு 45 நாள் ஆரி பூத்தையல் பயிலகம் நடத்தப்பட்டது.

## RC புபனேஸ்வர் மீடோஸ் — RID 3262

நம் மகள், நம் பெருமை திட்டத்தின் கீழ், நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த 16 பெண்களுக்குக் கல்வி உதவித் தொகை (தலா ரூ.7,500) வழங்கப்பட்டது.




## RC பர்ட்வான் சவுத் — RID 3240



சங்க உறுப்பினர் நீரஜ் கன்டேல்வாலின் தாய் பிரதீபா RILMன் TEACH திட்டத்துக்கு ரூ.12,000 நன்கொடையளித்தார். இந்த நிதி, நான்கு குழந்தைகள் பள்ளிக்குத் திரும்ப உதவும்.

## RC கல்கத்தா யுனிவர்ஸ் — RID 3291

கொல்கத்தா காவல்துறை மருத்துவ மனையின் சுஸ்மிதா சர்கார் ஆதரவில் 55-அங்குலத் தொலைக்காட்சி நிறுவப்பட்டது.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



# மோதல் குணமும் விநோத நடத்தையும்!

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

1992-ம் ஆண்டு கொல்கத்தா விலிருந்து தில்லி வந்திருந்த சக ஊழியரை காரில் அழைத்துச் சென்றேன். போக்குவரத்து சிக்னல் இருக்கும் இடத்துக்கு வந்தபோது சிவப்பு விளக்கு எரிந்தது. ஒரு சில விநாடிகளில் பச்சை விளக்குக்காக 20-க்கும் மேலான கார்கள் அமைதியாக காத்திருந்தன. இது எனது சக ஊழியருக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஏன் ஒரு காரிலிருந்து கூட ஒலி எழுப்பப்படவில்லை என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதே கொல்கத்தாவாக இருந்தால் சிக்னலில் சிவப்பு எரியும் நேரத்தில் பல கார்கள் ஒரு ஆர்கெஸ்ட்ரா போல ஒலி எழுப்புவார்கள் என்றார் அவர்.

இது எனக்கு ஒட்டுமொத்த ஆச்சரியத்தை அளித்திருந்தாலும், டெல்லி வாலாக்கள் ஒழுங்கான வர்கள் என்றோ, சட்டத்தை மதித்து நடப்பவர்கள் என்றொ நான் நினைக்கவில்லை.

தில்லியில் உள்ள டிரைவர்கள், இன்னும் சொல்லப்போனால் வட இந்தியாவில் உள்ள டிரைவர்கள் தவறான பாதையில் செல்வதையோ, ஒருவழிப்பாதையில் தவறாக செல்வது பற்றியோ நினைப்பதில்லை என்று அவரிடம் நான் கூறினேன். நகரத்தில் உள்ள பாலத்தின் மீது செல்லும்போது எனக்கு இது நடந்தது. நான், தவறான பாதையில் வந்த டிரைவரின் முன் எனது காரை நிறுத்தினேன். அவரால் நகர முடியவில்லை. அதனால் கோபமடைந்தார். நான் அவரிடம், காரை பின்னால் எடுத்து சரியான பாதையில் ஓட்டுமாறு கேட்டுக் கொண்டேன். அதற்கு அந்த டிரைவர், நான் 26 ஆண்டுகளாக தில்லியில் கார் ஓட்டி வருகிறேன். இதுவரை ஒருவரும் இதுபோன்று கேள்வி கேட்டதில்லை என்றார். நான் எனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தேன். இறுதியில் அந்த டிரைவர், காரை பின்னால் எடுத்து சரியான வழியில் போக நேர்ந்தது.

இதுபோன்ற போர் குணங்கள் இப்போது இந்தியா முழுவதும் பரவி யுள்ளது. நாட்டின் பிற பகுதிகள் நன்றாகவே இருந்தன. ஆனால், இப்போது இந்த விஷயத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் அம்சத்தை முழுமையாக கடைப் பிடிக்கத் தொடங்கிவிட்டனர். இப்போது எங்கு சென்றாலும் சட்டத்தையோ விதிகளையோ மதிப்பதில்லை. சட்டங்களும் விதிகளும் பிறருக்குத்தான், நமக்கில்லை என்கிற மனோபாவம் வந்துவிட்டது. மரியாதை என்பதே இல்லாமல் போய்விட்டது. சில மாதங்களுக்கு முன்பு ஒரு மருத்துவ மனை கவுன்டரில் வயதான தம்பதிகளுக்கு உதவ என் மனைவி தலையிட வேண்டியிருந்தது. இரண்டு இளைஞர்கள் க்யூவரிசையில் முந்திச் செல்ல முயன்றனர். வரிசையில் வருமாறு என் மனைவி அவர்களிடம் கூறியபோது, அருகில் உள்ள திரையரங்குக்குச் செல்ல நேரமாகிவிட்டதால்தான் இப்படி என்று சொன்னார்கள்.

1960-களில் நான் தில்லியில் உள்ள பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது இதுபோன்ற வினோதமான நடத்தை தொடர்பாக முதல் அனுபவத்தை பெற்றேன். அப்போது 10 வயது இருக்கும். எங்கள் வகுப்பு மாணவர்களை பிக்னிக் என்ற பெயரில் கரும்பு வயல்களை பார்க்க அழைத்துச் சென்றனர். அந்த இடம் மேற்கு உத்தரப்பிரதேசத்தில் தில்லி யிலிருந்து 50கி.மீ. தொலைவில் இருந்தது. வழியில் யமுனை நதியின் குறுக்கேயிருக்கும் இரும்பு பாதையை கடந்து செல்லவேண்டும். அந்த நேரத்தில் 3 மாணவர்கள், தங்களைவிட சிறிய மாணவர்களை வைத்திருந்த மதிய உணவு டப்பாவை வாங்கி வெளியில் வீசினார்கள். எங்களுடன் வந்த இரண்டு ஆசிரியர்கள் அவர்களை தடுத்து நிறுத்த முற்பட்டனர். ஆனாலும் அதற்கு முன்னதாக சுமார் ஒரு டஜன் மதிய உணவு டப்பாக்கள் வெளியில் வீசப்பட்டு விட்டன.

மதிய உணவு சாப்பிடும் நேரத்தில் ஆசிரியர்கள், அந்த ரௌடி மாணவர்களின் மதிய உணவு டப்பாக்களை எடுத்து, வெளியே தூக்கி எறியப்பட்ட உணவு டப்பாக்களுக்கு சொந்தமான மாணவர்களிடம் கொடுத்தார். இத்துடன் விஷயம் நிற்கவில்லை. மாலையில் சுற்றுலா சென்று திரும்பி வந்த மாணவர்களை அழைத்துச் செல்ல பெற்றோர்கள் வந்திருந்தனர். அப்போது அந்த மூன்று மாணவர்களும், ஆசிரியர்கள் தங்களின் உணவை பறித்துக் கொண்டதாக கூறி அழுதார்கள். இதையடுத்து பெற்றோர்கள் கூச்சலிட்டனர். சிறிது நேரம் கழித்து அவர்களிடம் என்ன நடந்தது என்று விளக்கியதும். மாணவர்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்று கூறினார்களே தவிர அவர்களை கண்டிக்கவும் இல்லை, தண்டனை கொடுக்கவும் இல்லை. அத்துடன் அது முடிந்து விட்டது. சில வாரங்களுக்குப் பின்பு அவர்களில் ஒருவர் சிறு குற்றத்திற்காக சிறைக்கு அனுப்பப் பட்டதாக சொன்னார்கள்.
மற்ற இருவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் அரசியல்வாதிகளாக மாறியிருக்கலாம்.■

ADVT.

Rotary




CREATE HOPE in the WORLD




# Project Kalam



" Dreams convert into thoughts and thoughts convert into actions."

APJ Abdul Kalam

## A Career Guidance Programme

▪ A Project by Rotary Club of Virudhunagar (RID-3212)

Education becomes more meaningful when the learner realizes its purpose. To today's students, Career Guidance stands as the primary lesson. RID 3212 organizes and presents Project Kalam as an exclusive session for school students to understand the opportunities around, to analyze the scope and to choose the right stream. Mr. Tenzing Paulrajan, Soft Skills Trainer, STEP2SUCCESS, is the key speaker of this Career Guidance Programme. Let's together strive to guide our young generation in the best possible way.

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

Project Kalam

As on December, 2023

**No. of Occurrences**

**67**

**No. of Beneficiaries**

**17005**

STEP 2 SUCCESS

Do you want to conduct **Project Kalam** in your town/city/district?
We are waiting to partner with you.

**Contact**
Project Chairman and Lead Speaker



Rtn.Tenzing Paulrajan
63746 44066

LEKHA ads/Jan 24/ Rotary/2

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

